கல்கி







அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்

தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்

இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது. l-லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெற உடலுக்கு உதவுகிறது. இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறாரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்– அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள் !



இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு.

இன்க்ரிமின்*... வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது

நாள் ஒன்றுக்கு:
இன்க்ரிமின்* ட்ராப்ஸ்: 10-20 துளிகள்.
இன்க்ரிமின்* ஸிரப்: ஒரு தேக்கரண்டி.

* ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்

Lederle லெடர்லி' டிவிஷன், ஸயனமிட் இந்தியா லிமிடெட் CYANAMID


CHCI-36 TAM

உங்களை நாள் முழுவதும் மனோ உல்லாசத்துடன்
வைக்கக்கூடிய பவுடர்...

பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்

எல்லா காலநிலைகளிலும், நீங்களும் உங்கள் குடும்பத்தில் அனைவரும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க். அதை உடம்பில் தூவிக் கொண்டால் அனுபவமாகும் ஆனந்தமே அலாதி. அதன் உள்ளம் கவரும் நறுமணம் உங்களையும், உங்களைச் சூழ்ந்துள்ளவர்களையும் மகிழ்விக்கும். வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மை உள்ளதால் வியர்த்துக் கொட்டும் கோடையில் உபயோகிக்க அது விசேஷமானது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடம்பில் தூவிக்கொண்டு நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடனும், மனோ உல்லாசத்துடனும் இருங்கள்... உடலைத் தழுவி நிற்கும் நறுமணத்துடன் திகழுங்கள்!






யாவரும் வாங்கக்கூடிய விலையில்
நறுமணம் கமழும்,
உயர்ரக டால்கம் பவுடர்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

P-5603



உங்களைப் போன்ற உற்சாகம்
மிக்கவர்களின் முதல் தேர்வாக பிஎஸ்ஏ
இருப்பது இயல்புதான். பிஎஸ்ஏ
எழில் மிக்க சைக்கிள். இலேசானது
ஆயினும் வலுவுள்ளது. எளிதாக
ஓட்டுவதற்கேற்ற லாகவமும்
அமைப்பும் கொண்டது.

பிஎஸ்ஏயில் பல இடங்களுக்கும்
குஷியாகச் செல்லுங்கள்.

உலகில் இப் பகுதியில் சிறந்த சைக்கிள்
தயாரிப்பாளர்களால் பிஎஸ்ஏ அதன்
புகழ் பெற்ற உயர் தரத்திற்கேற்ப
தயாரிக்கப்படுகிறது.

BSA®

பிஎஸ்ஏ மிகச் சிறந்த சைக்கிள்

® பிஎஸ்ஏ சைக்கிள்ஸ் லிமிடெட் யு.கே. அவர்களின்
பதிவு பெற்ற டிரேட் மார்க்கு.
இந்தியாவில் தயாரிப்போர் : டியூ சைக்கிள்ஸ்
ஆப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ்-53.
உரிமையாளர்கள் : டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ்
ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ்-1
பதிவு பெற்ற உபயோகிப்போர்.

TIC BSA 3083A

கல்கி

பொருளடக்கம்

பிலவங்க, வைகாசி 28 - ஜூன், 11


நினைவுத் திரையில்....

காரிலிருந்து ராஜாஜியும் பிரதம மந்திரி நேருஜியும் இறங்கினார்கள். படைகளைப் பார்வையிட்டு விட்டு ராஜாஜி மேலே ஏறி வந்ததும் மவுண்ட் பாட்டன் தம்பதிகள் நெடுநாளைய சிநேகிதரை வரவேற்பது போல் அவரை வரவேற்றார்கள். மவுண்ட் பாட்டன் முதலில் ஒரு 'ஸல்யூட்' போட்டார்; அப்புறம் ஒரு கும்பிடு போட்டார்; அப்புறம் கையைப் பிடித்துக் குலுக்கினார்; அப்புறம் ஆலிங்கனமே செய்து கொண்டார். இரட்டைக் கவர்னர் ஜெனரல்களை அங்கு வந்திருந்த எல்லாரும் சூழ்ந்து கொண்டார்கள்.

அன்றிரவெல்லாம் நான் சரியாகத் தூங்கவில்லை. மறுநாள் ராமருக்குப் பட்டாபிஷேகம் என்ற செய்தியை அறிந்திருந்த அயோத்தி மக்களின் நிலையில் நான் இருந்தேன். காட்டுக்குப் போய் வந்த பிறகு நடந்த இரண்டாவது ராம பட்டாபிஷேகத்தைக் குறிப்பிடுகிறேன். முதல் தடவை நாள் வைத்துத் தவறிவிட்டதால் இரண்டாவது முறை குறிப்பிட்ட பட்டாபிஷேக தினத்தைப் பற்றி அயோத்தி மக்களின் ஆர்வம் அதிகமாய் இருந்திருக்குமல்லவா?

—'கல்கி'. (முன்பதாவது சாம்ராஜ்யம் என்ற கட்டுரையிலிருந்து.)

கல்கி, ஜூலை 11, 1948.


அலையே! தூரப்போ!
விலைவாசி உயர்வு



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா --- பாரதியார்

மலர் 26 □ இதழ் 45

ராஜாஜி கூறும் நான்காம் திட்டம்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு இறுதி உருவம் கொடுக்க முடியாமல் மத்திய சர்க்கார் திண்டாடிக் கொண்டிருக்கிறது. உள்நாட்டு வரிகள், கடன்கள் மூலமும் வெளி நாட்டுக் கடன்கள் மூலமும் இருபதினாயிரம் கோடி ரூபாய் திரட்டுவது அசாத்தியம் அல்லது அபாயம் என்று அரசாங்கத்துக்குத் தெரியும். எனினும், சோஷலிஸம் என்ற பெயரில் செய்யப்படும் டாம்பீகத்தை விடுக்கவும் மனமில்லை. இச்சமயத்தில் நாலாம் திட்டம் பற்றிய அடிப்படைச் சிந்தனையே மாறியாக வேண்டும் என்று அறிவுரை கூறும் ராஜாஜி, பழைய போக்கை விட்டுப் புதிதாகவே ஒரு திட்டம் தயாரிக்க வேண்டும் என்று பிரதமரவர்களுக்கு எடுத்துரைக்கிறார். கடந்த பதினைந்தாண்டுகளாகக் கன ரக ஆலைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதை முக்கியமாகக் கொண்டே திட்டம் வகுக்கப்பட்டு வந்திருக்கிறது. நாலாம் திட்டம் என்பது இதன் தொடர்ச்சியாக இருக்கக் கூடாது; தேசத்தின் பொருளாதாரத்தை உண்மையாகவே ஒழுங்குபடுத்துவதாக இருக்க வேண்டும் என்கிறார் ராஜாஜி.

இந்தியா தன் சக்திக்கும் தேவைக்கும் தொடர்பில்லாத திட்டங்களில் சிக்கிக் கொண்டதைக் குறித்து டபிள்யூ. ஆர். க்ராக்கர் அவர்கள் வெகு தெளிவாக எழுதியுள்ளதை நம் வாசகர்களும் அறிதல் நலம். க்ராக்கர் அவர்கள் ஆஸ்திரேலிய சர்க்காரின் பிரதிநிதியாகத் தில்லியில் பல ஆண்டுகள் பணி புரிந்த பேரறிஞர். நேரு அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட அவர் நேருஜியைக் குறித்து ஒரு புகழ் பெற்ற நூல் எழுதியுள்ளார். விருப்பு வெறுப்புக்களின்றி நேரு அவர்களின் குணங்கள் தோஷங்கள் இரண்டையும் இந்நூலில் விமரிசித்துள்ளார். இதில் திட்டங்களைப் பற்றி அவர் கூறுவதாவது:

திட்டமிட வேண்டும் என நேரு எண்ணியது சரியே....ஆயினும் நேரு மேலெழுந்த வாரியாகத்தான் இத்துறையில் செயலாற்றினார் என்ற குற்றச்சாட்டிலிருந்து அவரை முழுமையாக விடுவித்துவிட முடியாது. இம்மாதிரி மேலெழுந்த வாரியாகச் செயலாற்றியதால் உண்மையான தீர்வு ஏற்படுவதற்குப் பதில் போலித் தீர்வு ஏற்பட்டது.

ஆலைத் தொழிலை அதிகரிப்பதா அல்லது குறைப்பதா என்பதல்ல இந்திய ஆட்சியாளர் முகம் கொடுக்க வேண்டிய — இறுதியான — நடைமுறைக்குகந்த பிரச்னை. இந்தியாவில் கிடைக்கக் கூடிய குறைந்த மூலநிதியத்தைக் கொண்டு, முதலில் உணவு நிலைமையைச் சரியான அடிப்படையில் அமைத்துவிட்டு அதன் பின், ஆலைத் தொழிலுக்கு எவ்வளவு முதலீடு செய்ய இயலும் என்பதைத்தான் ஆட்சியாளர்கள் கவனித்திருக்க வேண்டும். அவ்வாறின்றி மேலெழுந்தவாரியாகப் பிரச்னையை அணுகித் திட்டம் போடப்பட்டது. இதை மேலும் மோசமாக்கியது யாதெனில், நேரு அவர்கள் மிகவும் சக்தியுடன் விளங்கிய முதல் பத்தாண்டுப் பதவிக் காலத்தின்போது அவரிடம் காணப்பட்ட சிந்தனைச் செருக்கேயாகும். திட்டத்தைப்பற்றி மாற்றுக் கருத்து எதுவாயினும் அவர் எள்ளி நகையாடினார். நீர் மின் நிலையங்கள், அணைத் திட்டங்கள், நில உச்ச வரம்பு, கூட்டுறவுப் பண்ணை, எஃகு ஆலைகள் என்பது போல் ஒன்றிலிருந்து மற்றொன்றாக அவர் பேரார்வத்துடன் ஊசலாடிக் கொண்டிருந்தார். விரைவில் மகத்தான முன்னேற்றம் காணலாம்' என்று வாக்குறுதி தந்த 'மந்திர வாதிகள்' பலரிடம் தாவிக் கொண்டிருந்தார். மிகவும் பரபரப்பு அடைந்திருந்தபடியால்தான் நேரு பெரும்பாலும் மேலெழுந்தவாரியாகச் செயல்பட்டார். தாம் அரங்கிலிருந்து மறைவதற்கு முன் இந்தியாவை மாற்ற முடியாதபடி பெரும் தொழில்

அமைப்பில் — சோஷலிஸப் பாதையில்—அமர்த்திவிட வேண்டு மென்பதில் அவர் புயல்போல அவசரப்பட்டார்.

எல்லா உண்மைகளையும் அறிவோமாயின், திட்டங்கள் தோல்வியுற்றதற்கான பெரும் பொறுப்பு நேருவைச் சுற்றிக் கொண்டிருந்த இச்சகம் பேசும் கூட்டத்தாரையே சாரும் என்பது தெரிய வரும். இன்றைய திட்ட முறைக்கு மூலகர்த்தாவான நேரு அவர்களின் கருத்து நாளுக்கு நாள் காந்தியடிகளின் கருத்துக்கு எவ்வளவு முரணாகச் சென்று கொண்டிருந்தது என்பதற்கும் க்ராக்கர் அவர்களின் நூலில் அழுத்தமான ஆதாரம் கிடைக்கிறது. காந்திஜியின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கடிதத்தின் பகுதி இந்நூலில் மேற்கோள் காட்டப் பட்டுள்ளது. அது வருமாறு:

> உங்களுக்கும் எனக்கும் இடையே கருத்தில் சிறிது மாறுபாடுகள் இருப்பதாக நான் காணத் தொடங்கினேன். எனினும், இந்த மாறுபாடுகள் எவ்வளவு பயங்கரமாக விஸ்தரித்து விட்டன என்பதைப் பற்றி எனக்கு அநுமானமே யில்லை. இப்போது நீங்கள் என்னையும் என் கருத்துக்களையும் எதிர்த்துப் பகிரங்கமாகவே போராட வேண்டியவர் என்பதைத் தெளிவாகக் காண்கிறேன். உங்களுக்கும் எனக்கும் இடையே உள்ள மாறுபாடுகள் மிகவும் பரந்தவை. அடிப்படையிலிருந்தே முரண்பட்டவை. ஆகவே, இவை எங்குமே சந்திக்க முடியாது எனத் தோன்றுகிறது. கௌரவமான முறையில் நீங்கள் உங்கள் தனிக் கொடியைப் பறக்க விட வேண்டியதுதான் என யோசனை கூறுகிறேன்

என்று காந்திஜி நேருஜிக்கு எழுதியிருப்பதைப் படித்த பின்னர், தேச பிதாவின் பெயரை சோஷலிஸத் திட்டக்காரர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயனுக்கிக் கொள்வது எத்தகைய பாபம் என்பது புரியும்.

க்ராக்கர் அவர்கள் நேருஜியிடம் மிகவும் மதிப்புக் கொண்டவர் என்பது இந்நூலைப் படிப்போருக்குத் தெரியும். அப்படிப்பட்ட ஒருவரின் கண்டனத்துக்கு விசேஷமான கவனம் தந்தேயாக வேண்டுமல்லவா? திட்டங்கள் பற்றி அவர் மேலும் கூறுவதாவது:

> நேருவின் திட்டங்களின் கீழ் அரசாங்கத் தலையீடு ஓங்கியது. பெர்மிட்டுகளும் லைசென்ஸுகளும் கன்ட்ரோல்களும் அந்நியச் செலாவணித் தடைகளும் நிரந்தரமாகப் பெருகி வந்தன. அவற்றோடு லஞ்ச ஊழலும் பெருத்து வந்தது. காலத்தின் தேவைக்கேற்ற மிக அவசியமான அரசாங்கக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதற்கில்லைதான். ஆயினும் இக் கட்டுப்பாடுகளும் அதிகார வர்க்கமும் அதிகரிக்க அதிகரிக்க அந்த அளவுக்குத் தனி மனிதனின் சுதந்திரம் குறைந்து விடுகிறது. நகர்ப்புற ஏழை மக்கள் மகத்தான முன்னேற்றங்களை எதிர்பார்த்து ஏமாறுகிறார்கள். இதனால் முடிவில், ஜனநாயகம் என்ற நுண்ணிய அமைப்பே சர்வாதிகாரத்தின் கீழோ, பலம் பொருந்திய ஒருவரின் ஆளுகையின் கீழோ தகர்க்கப்படக்கூடிய ஆபத்தான நிலைமை ஏற்படும்.

நேரு அவர்கள் மறைந்த பின்பும் திட்டங்களின் போக்கு மாறவில்லை. ஆளும் கட்சியிடம் அமோக பலம் தரும் இம் முறை காங்கிரஸாட்சி உள்ளவரை கைவிடப்படாது. மொரார்ஜி அவர்களோ, வேறு காங்கிரஸ் தலைவர்களோ இந்தியப் பொருளாதார நெருக்கடிக்கு மருந்து கண்டுபிடிக்கக் கூடும் என்று யாரேனும் எண்ணியிருந்தால் அவர்கள் தங்களுடைய சிந்தனைக் குறைவையேதான் குறை கூறிக் கொள்ள வேண்டும்.

இனி செய்ய வேண்டியது என்ன என்பதை ராஜாஜி சுருக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்: இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயுள்ள சுங்க வரிகளை நீக்க முயற்சி எடுக்க வேண்டும். இதில் எதிராளியை எதிர்பாராமல் இந்தியாவே முதலடி எடுத்து வைக்க வாய்ப்பு உண்டா என்பதை ஆராய வேண்டும். திட்ட இனங்களிலும் சரி, நிர்வாக இனங்களிலும் சரி, சர்க்கார் செலவை வெட்ட வேண்டும். வரிகளைக் கூசாமல் குறைக்க வேண்டும். சுதந்திரத் தொழில் விஸ்தரிக்க முடியாதபடி உள்ள எல்லாத் தடைகளையும் தளர்த்தவோ தகர்க்கவோ வேண்டும். இந்த நடவடிக்கைகளை எடுக்கத் திறம் அவசியம். **நாட்டின் நல்லறிஞர்கள் யாவரும் கொண்ட ஒரு தேசிய மந்திரி சபையால்தான் இந்தப் பொறுப்பை ஏற்க முடியும்.** ராஷ்டிரபதியின் ஆணையை எதிர்பாராமல், சர்ச்சையும் சங்கோசமும் இல்லாமல் இன்றைய மந்திரி சபையே தேசப் பற்றுடன் தனது அதிகாரத்தைத் துறந்துவிட வேண்டும்.

ராஜாஜி சுருக்கமாகச் சொல்லியுள்ள யோசனையின் அம்சங்கள் விரிவாக உருவாக்கப் பெற வேண்டும். இப் புதிய திட்டம் செயல்பட நான்கு ஆண்டுகள் ஆகலாம். நம் நெருக்கடி தீர்ந்து புது சகாப்தம் பிறக்க, உண்மையான நட்புக் கொண்ட அந்நிய நாடுகளின் உதவியையும் நாடலாம். வீண் ஜம்பத்தை விட்டு, சிந்தனை — செயல் இரண்டிலும் பிரத்யட்ச உணர்வுக்கு இடம் தர வேண்டும். இதனால் ஒரு புதிய நம்பிக்கையும், புதிதான தேசிய சக்தியும் பிறக்கும். அதோடு நேர்மையும் பிறக்கும். காங்கிரஸ்காரர்கள் சோஷலிஸத்தைப் பற்றி மயக்கு வார்த்தைகளைக் கூறும்போது அறியா மக்கள் எத்தகைய சொர்க்கத்தைக் கற்பனை செய்து கொள்கிறார்களோ, அது உண்மையாகவே ஏற்படும்.

தேசத்தை மறந்து கட்சியையே நினைத்துப் பொழுதை இனியும் வீணுக்கலாகாது. மக்களுக்குப் பணி செய்யும் புனித கடமையை மறந்து அவர்களை மயக்குவதை இனியும் தொடரலாகாது. மக்களின் உண்மையான நன்றியைப் பெற வழி எதுவோ, அந்நிய நண்பர்களிடமிருந்தும் ராஜநீதி வல்லுநர்களிடமிருந்தும் உண்மையான பாராட்டைப் பெற வழி எதுவோ அதைப் பின்பற்றுவோமாக. அந்நிய நாடுகளின் உண்மையான பாராட்டு உண்மையான நட்புறவுக்கு இட்டுச் செல்லும். அதனால் இந்தியா உலக சமுதாயத்தை நிர்மாணிப்பதிலும் பங்கு கொண்டு பெருமை பெறும்.

CIBA



பிஞைகா டால்க்

இனிய நறுமண மூட்டி, வியர்வை நாற்றத்தை அறவே அகற்றும் டால்க். நாள் முழுவதும் உங்களைக் 'குளித்தெழுந்த' புத்துணர்வுடன் விளங்கச் செய்யும். அங்கமெல்லாம் பட்டுப்போன்ற மென்மைதவழ, விசேஷப் பொருள்களைக் கொண்ட டால்க்.

'சருமத்தை மிருதுவாக்கி,' வியர்வை நாற்றத்தை அகற்றும் டால்க்.



கந்தர் அனுபூதி

செந்தமிழ்ச் சொற்பொழிவுகள்

❊

ஸ்ரீ அம்ருதானந்த யோகி

அவர்கள்

நிகழ்த்துகிறார்கள்

❊

அனைவரும் வருக! அருளைப் பெறுக!

இடம்: ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய மடம்
9, வேங்கட நாராயண ரோடு, தியாகராயநகர், சென்னை-17

கால அளவு: **9-6-67** வெள்ளிக்கிழமை முதல், தொடர்ந்து 27 நாட்களுக்கு நடைபெறுகிறது.

நேரம்: நாள்தோறும் இரவு 7-15 மணிக்குத் தொடங்கி 9 வரை நிகழும்

❊

கந்தனது அருளாற்றலை அறிய வேண்டுமா?
கந்தனது ஆணையாற்றலைக் காண வேண்டுமா?
கந்தனது கவின் வடிவம் தெரிய வேண்டுமா?
கந்தனது பேருண்மை புலப்பட வேண்டுமா?
அருணகிரியின் அருமை அறிய வேண்டுமா?
அதிவர்ணாச்ரமியின் ஆழ்மையை அளக்க வேண்டுமா?
சீவன் முக்தனின் சீர்மை தெரிய வேண்டுமா?
கடவுள் — தன்மையின் விறு காண வேண்டுமா?
முக்கட் பெம்மானது முழுமையை உணர வேண்டுமா?
நோய்களை நொடிக்க வேண்டுமா? கவலைகளைக் களைய வேண்டுமா?
செல்வங்களைப் பெற வேண்டுமா? இன்பங்களை அடைய வேண்டுமா?
கல்வியிற் சிறந்து, பெரும் புகழினில் ஓங்க வேண்டுமா?
வளமும் வெற்றியும் வாழ்வினில் விளங்க வேண்டுமா?

ஆயின், கந்தர் அனுபூதியைக் கேளுங்கள் !!!

ராஜாஜியின் கருத்துக்கள்

ஒரு நெருக்கடியைத் தீர்க்கத் தொடங்கும் போது முதலில் எங்கு ஆரம்பிக்க வேண்டும் என்று தெளிய வேண்டும். சரியான இடத்தில் விஷ வட்டத்தை வெட்டத் தொடங்க வேண்டும். இன்று பொருளாதாரத்துக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டுமாயின் வரிகளை வெட்டித் தள்ள வேண்டும். நேர்மாறாகச் செய்கிறார் ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்கள். வரிகளை மேலும் அதிகமாக்கியிருக்கிறார். வெறும் கணக்காயர் போல் ரூபாய்க் கணக்குப் போட்டுத் துண்டு விழுவதை ஈடுசெய்ய வரிகள் விதித்து விட்டார். கணக்குப் போடுவதால் தீர்ந்துவிடக் கூடியதல்ல நமது தேசத்துக்கு நேர்ந்துள்ள நெருக்கடி. மிக உயர்ந்த ஆக்க ரீதியான சிந்தனை இப்போது அவசியமாகிறது. தமது விற்பனை வரிகளால் ஸ்ரீ மொரார்ஜி பொருளாதாரத்துக்கு ஊறு விளைவித்திருக்கிறார். ஏழை மக்கள் தங்கள் குடும்ப பட்ஜெட்டை நன்றாக அமைக்கச் செய்வதே காங்கிரஸின் முக்கியமான நோக்கம் என்பதை மொரார்ஜி அவர்களின் பட்ஜெட் பொய்ப்பித்து விட்டது.

* * *

ஷேக் அப்துல்லா அவர்களைப் போன்ற ஒருவரை ஆயுள் பரியந்தம் காவலில் வைத்து, அவர் அரசியல் ரீதியில் சிறிதும் செயல்பட முடியாமல் தடுக்கும் ஓர் அரசாங்கத்துக்குத் தன்னை ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக் கொள்ள உரிமை இல்லை. ஷேக் அப்துல்லா அவர்களை விடுதலை செய்வதற்குப் பயப்படும் அரசாங்கத்துக்குக் காஷ்மீரம் குறித்த தனது அரசியல் கொள்கையில் நம்பிக்கையில்லை என்பது தெளிவு. அது வாயளவில் எவ்வளவுதான் முழங்கினாலும் உண்மை இதுவே.

* * *

இந்தியாவின் பாதுகாப்புச் செலவு நமது அந்நியக் கொள்கையைச் சார்ந்தது. இப்போதுள்ள இந்திய சர்க்காரின் அந்நியக் கொள்கையின் விளைவாக இந்தியா ஒருபுறம் பாகிஸ்தானோடு ஆயுதப் போட்டியில் ஈடுபட வேண்டும்; இன்னொரு புறம் சீனாவோடு ஆயுதப் போட்டியில் ஈடுபட வேண்டும். அமெரிக்காவின் செல்வச் செழிப்பில் பாதியளவு நமக்கு இருந்தால்கூட இவ்வாறு ஆயுதப் போட்டி நடத்த நம்மால் இயலாது. நமது பாதுகாப்புச் செலவைக் குறைத்துக் கொள்ள வழி தேட வேண்டும். அதாவது பிடிவாதத்தைத் தளர்த்தி, அமெரிக்காவுடன் ஓர் உறுதியான பாதுகாப்புக் கூட்டுக்கு உடன்பாடு செய்து கொள்ள வேண்டும்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரியர் ஸ்ரீ ஃப்ராங் மொரேஸ் அவர்கள் சமீபத்திய கட்டுரை ஒன்றைப் பின்வருமாறு முடிக்கிறார்:

> உலகம் மாறிக் கொண்டே இருக்கிறது. ஆனால் இந்தியா தன் பழைய வழியையே பிடித்துக் கொண்டிருக்கிறது. உலக விவகாரங்களில், குறிப்பிட்ட ஒருகால அளவில் ஒரே மாதிரிப் போக்கு நீடித்தாலும் கூட சர்வதேச நடப்புக்கள் மாறுதலின்றியே இருப்பதில்லை. இந்த இயல்பை அனுசரித்துத் தேசங்களின் அந்நியக் கொள்கை புது சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட வேண்டியது அவசியம். நெடுங்காலக் கொள்கை என்று திடமாக ஒன்று இருக்க வேண்டுமெனினும் அந்த அமைப்புக்குள் அவ்வப்போது இவ்வித மாறுபாடுகள் அவசியம். 1962 அக்டோபரில் சீனர்களிடம் இந்தியா படுதோல்வி அடைந்த பின்னரும் எவ்விதத் தீவிர சிந்தனையும் தோன்றவில்லை. நம் கொள்கைகளை உருவாக்குபவர்கள் இதனைச் செய்ய வேண்டிய தருணம் இப்போது வந்து விட்டது.

நான் கூறியிருப்பதையும், ஸ்ரீ ஃப்ராங்க் மொரேஸ் கூறாமல் கூறியிருப்பதையும் செய்தாலன்றி இந்தியாவின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க உபாயமில்லை.

* * *

பெர்மிட் — லைசென்ஸ் விநியோகத்தில் சலுகை காட்டுவதற்குப் பெரும் கூச்சல் எழும்பியுள்ளது. நிலைமையைச் சமாளிக்கச் சர்க்கார் மசோதா ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் முக்கியமான அம்சத்தைக் காணத்தவறி விட்டனர். பெர்மிட்—லைசென்ஸ் — கோட்டா முறைதான் விஷத்துக்கு மூலகாரணம். அது ஊழலில்தான் கொண்டு விடும். ஆரோக்கியமான போட்டியைத் தடுத்து ஏகபோகியங்களை உருவாக்குவதும், ஆளும் கட்சியிடம் சுயநலனுக்காக உபயோகித்துக் கொள்ளக்கூடிய மகத்தான பொருளாதார அதிகாரத்தைத் தருவதுமான பெர்மிட் – லைசென்ஸ் முறையை அகற்றவோ அல்லது குறைக்கவோ வழி என்ன என்பதிலேயே சிந்தனை செலுத்தப்பட வேண்டும்.

* * *

லஞ்சத்துடன் 'லூப்'பும் மாத்திரையும் தந்து வறுமையில் வாடும் நமது எழுத்தறிவற்ற அபலைப் பெண்டிரைப் பரீட்சை பார்ப்பது நிற்க வேண்டும் என்று மனமார ஆசைப்படுகிறேன். இதற்குப் பதில் ராணுவத்தைப் பலப்படுத்த ஒரு நீண்ட காலத் திட்டம் வகுக்க வேண்டும். பத்து லட்சம் ஆண்களை (முடியுமாயின் பெண்களையும்) முப்பத்தைந்து வயதுவரையில் திருமணம் செய்துகொள்வதில்லையெனப் பிரதிக்ஞை எடுக்கச் செய்து அவர்களுக்கு எளிதான முறையில் ராணுவப் பயிற்சி தரவேண்டும். நம் தேசத்தைக் காக்க வலுவான ஒரு பாதுகாப்புச் சைனியம் அவசியம். இச்சேனையில் உள்ளோருக்கு வெறும் கவாத்துப் பயிற்சி தந்தால் போதாது. எளிய போர்க் கருவிகளைப் பிழைபடாமல் உபயோகிக்கப் பயிலுவிப்பதோடு கெரில்லா முறையும் மற்ற தற்காப்பு முறைகளும்கூடப் போதிக்கப்பட வேண்டும்.

* * *

கடந்த பதினோராண்டுகளாகச் செயல்பட்டு வந்த நடைமுறையை மாற்ற வேண்டு

மென்பதே நாஸர் அவர்களும், மற்ற அரபு நாடுகளும் விரும்புவது. பதினோராண்டுகளாக அகாபா வளைகுடா இஸ்ரேலுக்குப் பண்டங்கள் எடுத்துச் செல்லும் திறந்த வழியாயிருந்தது. வளைகுடாவின் முனையில் உள்ள ஐலாட் வழியாக இஸ்ரேலில் தொண்ணூறு சதவிகித எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. இஸ்ரேலின் பண்டங்களில் இருபது சத விகிதமும் இத்துறைமுக வாயிலாகவே ஏற்றுமதியாகியுள்ளது. இதைத் தடுப்பது இஸ்ரேலின் பொருளாதாரத்தைச் சின்னாபின்னமாக்கும். பதினோராண்டு நடைமுறையை எதிர்ப்பது இஸ்ரேல் என்ற ராஜ்யம் தோன்றியதே சட்டப்படி சரியல்ல என்ற பிரச்னையை எழுப்புவதற்கொப்பாகும். யூதர்களை இஸ்ரேலில் இருத்திய உலக வல்லரசுகளுக்கு இது ஒரு சவால்.

இறுதியில் இது எப்படி முடியவேண்டுமெனில், செங்கடலும், அதை ஒட்டிய வளைகுடாக்களும், சூயஸ் கால்வாயும் சர்வதேசச் சொத்தாக்கப்பட வேண்டும்; உலகத்தின் கடல் மார்க்கங்களுக்கு இத் திறப்பு வழி தந்த எகிப்துக்கு நியாயமான நஷ்ட ஈடு தரப்பட வேண்டும்.

அதிபர் நாஸரின் உத்தரவுக்கு ஒப்ப, பந்தோபஸ்து சபையைக்கூடக் கலந்து ஆலோசியாமல் ஐ. நா. துருப்புக்களை வாபஸ் வாங்கிக் கொள்ள இசைந்த ஊ தாண்ட் அவர்களைப் பல ஐரோப்பிய ராஜ நீதி நிபுணர்கள் கண்டித்துள்ளனர். ஐ. நா. சமாதானப் படையில் கானடா, இந்தியா, நார்வே, ஸ்வீடன், டென்மார்க், பிரேஸில், யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த படைப் பிரிவுகள் இருந்தன. 1956ல் இஸ்ரேல் எகிப்து இரண்டும் உடன்பட்டதன் மீதே இப்படை அங்கு அமர்த்தப்பட்டது. இப்படைகளை வாபஸ் பெற்றது நெருக்கடியை உடனே பரவச் செய்துவிட்டது.

❖❖❖

அமெரிக்கா இந்தியாவின் முதல் எதிரி என்று பார்லிமெண்டில் ஓர் அங்கத்தினர் வருணித்திருக்கிறார். இந்த முதல் எதிரியின் கப்பல்தான் இந்தியாவின் பற்றாக்குறைப் பகுதிகளுக்காக இரண்டு கோடியே இருபது லட்சம் டன் உணவுப் பண்டங்களைத் தூக்கி வருகிறது. தமிழக முதல் மந்திரி சம்பிரதாய பூர்வமாக இந்த நன்கொடையைப் பெற்றுக் கொள்கிறார். விசித்திரமான எதிரியல்லவா? நட்பு நாடொன்றின் நற்செயல்களுக்கு நாம் காட்டும் பிரதி உணர்வும் விசித்திரமாயிருக்கிறது. விலை மதிக்கவொண்ணாத பழைய சிலைகளைப் புதிய அரசியல் பிரமைகள் அரித்துத் தின்பதையே இது குறிக்கிறது.

❖❖❖

இந்தியன் சிவில் ஸர்வீஸில் இருந்த ஸ்ரீ எம். எஸ். சிவராமன் அவர்கள் திடீரென அகால மரணமடைந்து விட்டார். திட்டக் கமிஷனில் அவர் விவசாயத் துறை ஆலோசகராயிருந்தார். அதன் பின் தமிழ் நாட்டில் விவசாய டைரக்டராக இருந்தார்.

நிலத்தின் தாரதம்மியம் பாராமல் ரசாயன உரம் உபயோகிப்பதை அவர் தொடர்ந்து எதிர்த்து வந்தார். பசுந்தழை உரத்தை அழுத்தமாக ஆதரித்து வந்த ஒரு தைரியஸ்தரை இழந்து விட்டோம்.

தமிழ்ப் பேரறிஞர் மறைவு

''ஆராய்ச்சி இன்றியமையாதது. ஆனால் அது நன்முறையில் நடைபெறுதல் வேண்டும். தமிழ்ப் புலவர் சிலர் ஆராய்ச்சியுலகில் நடம் புரிகின்றனர். நடம் மயிலுக்கு உரியது; அது வான்கோழிக்கு உரியதாகுமா? ஆராய்ச்சிக்குப் பலதிறக் கண்கள் தேவை. இந்நாளில் வித்வான் இராசமாணிக்கம், பி. ஓ. எல்., ஆராய்ச்சி உலகில் இறங்கி இருள் போக்கி வருவது எனக்கு மகிழ்ச்சி யூட்டுகிறது!'' என்று தமிழ்ப் பெரியார் திரு வி. க. அவர்களால் அந்நாளிலேயே பாராட்டப் பட்டவர் சென்னை பல்கலைக் கழகத் துணைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள்.



தம் அறுபதாவது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்த பேராசிரியர் இராசமாணிக்கனார், ஆசிரியர் பதவியிலிருந்து கொண்டே ஆராய்ச்சிப் பட்டங்கள் பலவற்றுக்குப் படித்துத் தேறியவர். 1951–52ம் ஆண்டுகளில் அவர் இலங்கைக்குச் சென்று தமிழின் பெருமையை விளக்கினார். 1966ம் ஆண்டில் மலேசியாவில் நிகழ்ந்த உலகத் தமிழ் மகாநாட்டில் கலந்து கொண்டு விரிவுரையாற்றினார். அவர் கல்கி நினைவுச் சொற்பொழிவு ஆற்றித் தம் ஆராய்ச்சித் திறமையைக் காட்டியது அனைவருக்கும் நினைவிருக்கும். அவர் எழுதியுள்ள எத்தனையோ பல ஆராய்ச்சிநூல்களுள் தொல்காப்பிய கால ஆராய்ச்சி நூல் குறிப்பிடத்தக்கது.

அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் தமிழறிஞர்களுக்கும் நம் ஆழ்ந்த அனுதாபங்கள்.

வெய்யிலுடன் பேட்டி



[நமது கற்பனை நிருபர்]

நிருபர்: வணக்கம்! வணக்கம்!

வெய்யில்: ஓ! நிருபரா? எங்கே இப்படிக் கடுமையான வெய்யில் நேரம் பார்த்துக் கிளம்பி விட்டீர்கள்?

நிருபர்: எல்லாம் உங்களைப் பேட்டி காண்பதற்குத்தான். வேறே எதற்கு?

வெய்யில்: சரியான நேரம்தான். மண்டை பிளக்கும் உச்சி வேளைதானா கிடைத்தது?

நிருபர்: மாலை நேரங்களில் பல இடங்களில் மீட்டிங்குகள், இரவில் கலா நிகழ்ச்சிகள். நான் போக வேண்டிய இடங்கள் கொஞ்சமல்ல. அதனால்தான் இந்தச் சமயம் பார்த்து உங்களைப் பார்த்து விடுவதென்று வந்தேன்.

வெய்யில்: வந்தவரையில் மகிழ்ச்சி. எங்கேயாவது நிழல் இருக்கிற இடமாகப் பார்த்து,



அங்கு போய் உட்காரலாம் வாருங்கள்.. அங்கே பேசிக் கொள்ளலாம்.

நிருபர்: நிழலா? உங்களைக் கண்டால் அந்த இடத்திலிருந்து நிழலெல்லாம் ஓடிப் போய்விடாதா, மறந்து விட்டீர்களா? இப்படியே நின்று கொண்டே பேசலாம். சென்னை மக்களை இதோடு விடப் போகிறீர்களா? இன்னமும் வாட்டப் போகிறீர்களா?

வெய்யில்: சென்னை மக்கள் என்று எனக்கு ஒரு தனி நோக்கம் கிடையாது. எல்லா இடங்களிலும்தான் அனல் வீசி வருகிறேன். பார்க்கப் போனால் சென்னையில் வெப்ப நிலைமை குறைவு என்று கூடக் கூறலாம்.

நிருபர்: ஒரு வார காலத்துக்கு மேலாக 103 முதல் 108 டிகிரி வரையில் வாட்டுகிறீர்கள். இது குறைவாகுமா....

வெய்யில்: ஆந்திரத்தில், குண்டூரில் 118 வரை அனல் வீசினேன். பத்ராசலம் பகுதியில் 119 கொடுத்தேன். நெல்லூரிலும் 115க்கு மேல் கொடுத்து வருகிறேன். விஜயவாடாவில் 122. இன்னும் வடக்கே நாகபுரி, பாட்னா, டெல்லி இங்கெல்லாம் அதிகமாகக் கூடக் கொடுத்து வருகிறேன். அதையெல்லாம் ஒப்பிட்டால் சென்னையை நான் அப்படி ஒன்றும் கடுமையாகக் கவனித்து விட்டதாகக் கூற முடியாதே.

நிருபர்: 108 என்றும் 109 என்றும் வெய்யில் கடுமையைத் தாங்கிப் பழக்கமில்லை பாருங்கள், இங்குள்ள சென்னை வாசிகளுக்கு....

வெய்யில்: உண்மைதான். சற்று அதிகம் தான். ஒப்புக் கொள்ளுகிறேன்.



நிருபர்: சற்றுத்தானா அதிகம்? இந்த வெய்யில் தாளாமல் நகரவாசிகள் படும்பாடு விவரிக்க வொண்ணாததாகும். சிற்றுண்டி

நேரத்தில் காரியாலயங்களில் பணியாற்று பவர்கள் ஹோட்டலுக்குச் செல்லவே பயப் படுகிறார்கள். வெய்யில் கொளுத்துகிறது. பட்டினியாக உள்ளே இருப்பதே மேல் என்று பலரும் கருதுகிறார்கள். உள்ளேயே இருக் கலாம் என்றாலும் முடியவில்லை. மின்விசிறிகள் எவ்வளவு சுழன்றாலும் வீசும் காற்று ஒரே நெருப்புத்தான். நாற்காலி மேஜைகள் காய்ச் சல் கண்டது போல் சுடுகின்றன. ரோடுகளில் கட்டாயம் நடமாட வேண்டிய பொது மக்களின் கதியைச் சற்று நினைத்துப் பாருங்கள்... தபால்காரர்கள் டிராபிக்-போலீஸ்காரர்கள், இப்படிப்பட்டவர்களையும் நினைத்துப் பாருங்கள்.

வெய்யில்: தெருக்களிலிருந்த நிழல் மரங் களையெல்லாம் ஒன்று விடாமல் வெட்டியது நானல்லவே!

நிருபர்: நீங்கள் அல்ல. ஒப்புக் கொள்ள லாம். அதை முன்னிட்டாவது பாதசாரிகள் மீது இரக்கப்பட்டு வெய்யிலின் கடுமையைத்



தணித்துக் கொள்ளலாமல்லவா? சரி, இந்த நிலைமை இன்னும் எத்தனை நாட்களுக்கு நீடிக்கும்?

வெய்யில்: ஒன்றிரண்டு தினங்களுக்குமேல் நீடிக்காதென்று மகிழ்ச்சி யடையலாம்.

நிருபர்: அதுவரையில்.....

வெய்யில்: அதுவரையில் இயன்ற வரையில் மக்கள் பகல் நேரங்களில் நிழலிலேயே இருந்து வரட்டும். தியேட்டர்களுக்குப் பகல் ஷோவுக் குப் போனால்கூட குளிர் சாதனம் அமைந்த தியேட்டர்களுக்குப் போகலாம். பன்னீர் கலந்த சந்தனம் பூசிக் கொள்ளலாம். ஐஸ் கிரீம், இளநீர் இப்படியாகக் குளுமைக்கு வேண்டியவற்றைச் சாப்பிடலாம். வெய்யில் கடுமையாவதில் என் உள் நோக்கமே, மக்கள் எப்படியாவது குளுகுளுவென்று குளுமை யின் சுகத்தை நாடவேண்டும் என்பதுதான்.

நிருபர்: இந்த நல்ல நோக்கத்துக்கு நன்றி. ஆனால் முன்னைவிட ஐஸ் போட்ட பானங்கள், பழக் கலவைகளின் விலை நான்கு மடங்காக இப்போதெல்லாம் உயர்ந்திருக் கிறது. விடுமுறைக்கு மலைவாசம் செய்யப் போக முடியாமல் ரயில் கட்டணமும் இப் போது இன்னும் அதிகமாக உயரப்போகிறது.

கட்டணம்தான் மலைவாசத்துக்குச் செல்ல வேண்டும். இனி மனிதர்கள் அங்கு செல்ல முடியாது.

வெய்யில்: இந்தப் பொருளாதாரச் சீர் குலைவுகளைக் கேட்டால் எனக்கே உடல் எரி கிறது.



நிருபர்: சரி, உங்களுடைய பொழுது போக்கு என்ன?


வெய்யில்: மாலை நேரத்துடன் பொழுது போய்விடுவதால் போக்குவதற்கென்று எனக் குப் பொழுது ஒன்றும் மிச்சம் இருப்பதில்லை.



நிருபர்: பேட்டியளித்ததற்கு மிக்க நன்றி. ஒரு செகண்ட். ஒரு புகைப் படம் எடுத்துக் கொள்ளுகிறேன். சற்று நில்லுங்கள். க்ளிக்!!! தாங்க்ஸ்!!!

வெய்யில்: 'ஃப்ளாஷ் லைட்' இல்லாமலே எடுக்கலாமோ?

நிருபர்: 'ஃப்ளாஷ் லைட்' அவசியமில்லை. வெய்யிலைத்தானே எடுக்கிறேன்!



பட்ஜெட் அண்மையில் வெளியாகியிருக்கிறது. வரிகள் மேலும் உயர்ந்துள்ளன. எனினும், புது ரக வரிகள் விதிக்கக் கற்பனைத் திறன் வேண்டும். ஆதி நாட்களில் எப்படியெல்லாம் விநோதமான வரிகள் விதித்திருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்!

— கார்ட்டூன்: நடராஜ்

மொரார்ஜி தேசாய்க்குச் சில யோசனைகள்!

நாகரிகம் தோன்றாத நாள் முதலே வரிகள் தோன்றியதற்கு ஆதாரம் இருக்கிறது. ஆஸ்திரேலியாவின் ஆதிக் குடிகள் கற்கால மனிதர்களுக்கு ஒப்பானவர்களே. வேட்டையாடும் ஆதிவாசிகளான இளைஞர்கள் தங்கள் வேட்டையில் கிடைத்ததை முதியோருக்கு 'வரி'யாக வழங்கி வருவது மரபு. இந்த 'வரி' முறையிலிருந்து அவர்கள் என்றும் தப்ப முடிந்ததில்லை! இப்படி வரி முறையிலிருந்து பிறழ்ந்தால் தங்களைப் பிசாசுகள் தண்டித்து நோயையும், இளமையில் மரணத்தையும் தோற்றுவிக்கும் என்று இன்றைக்கும் நம்புகிறார்கள்.

முதன் முதலில் வரிச் சட்டங்கள் எகிப்திலும், சீனாவிலும், டைகிரெஸுக்கும் யூப்ரேட்டஸுக்கும் இடையிலுள்ள நாட்டிலும் இருந்தன. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு கல்வெட்டு கூறுகிறது: "ஓர் இளவரசனைக் காதலிப்பது எளிது; ஏன், ஓர் அரசனைக்கூடக் காதலிக்கலாம்; ஆனால் வரி வசூலிப்பவனைக் கண்டு நடுங்கித்தான் ஆக வேணும்."

முன்னாட்களில் விநோதமான பழக்கம் ஒன்று இருந்திருக்கிறது. வரியை உடல் உழைப்பு மூலமாகச் செலுத்துவதுதான்! இதற்கு உதாரணமாக எகிப்து அரசன் சியாப்ஸ் காலத்தில் (கி. மு. 2500 ஆண்டு) பிரமிட்கள் கட்டியதைக் கூறலாம். இந்தப் பிரும்மாண்டமான பிரமிட்கள் கட்ட இருபது வருஷங்களுக்கு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டியிருந்தது. மிகப் பிரும்மாண்டமான சிலைகளுக்கு முந்நூறு டன்களுக்கு மேலுள்ள கற்களை எதியோப்பியாவிலிருந்து மக்களே இழுத்து வந்தனர். அந்தக் காலத்திய எகிப்தில் தங்கள் பயிர்களுக்காகவும் கால்நடைகளுக்காகவும் வரி தரவேண்டும். வரியைக் குறைக்குமாறு வேண்டுகோள் விடுப்பதென்றால் வரி வசூலிப்போர் முன் மண்டியிட்டுத்தான் கோர வேண்டும். ஆனால் இப்படிக் கெஞ்சிக் கேட்டாலும் விசேஷச் சலுகை ஏதும் கிட்டி விடாது. பைபிளில் பிரசித்தி பெற்ற சாலமன் அரசன் தன் மாளிகைகளுக்காகவும், கப்பல்களுக்காகவும் ஏராளமான மரங்களை வெட்டுமாறு பல்லாயிரக் கணக்கானோரைக் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தினான்.

பாபிலோனிய அரசர்களும், அசிரிய மன்னர்களும் தங்கள் வெற்றிகரமான படையெடுப்புக்களுக்குப் பிறகு தோற்றவர்களிடமிருந்து ஏராளமான செல்வத்தையும், கட்டாய உடல் உழைப்பையும் பெற்றுக் கொண்டனர். ரோம சாம்ராஜ்யத்தின் முழு அந்தஸ்து பெற்ற குடிமகன் வரிகளினால் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. ரோமாபுரிக்குக் கட்டுப்பட்ட மற்ற சிறு ராஜ்யத்தினர் வரி செலுத்தினார்கள். வரி வசூலிப்போர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொரு வருஷமும் குறிப்பிட்ட ஒரு பெரிய தொகையைச் சேகரித்துத் தந்தனர். படை வீரர்களை அருகில் வைத்துக் கொண்டு வரி வசூலிக்கப்பட்டது.. குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாகக் கிடைக்கும் எதுவும் வரி வசூலிப்போருக்கே உரியது என்று சட்டமிருந்ததால் வரி வசூல் அதிகாரிகள் மக்களைக் கசக்கிப் பிழிந்தனர். மக்கள் அவர்களைத் தூக்கிலிடுபவ

ஜன்னல் வரி

•

படுக்கை வரி

•

குருவி வரி

னுக்கு ஒப்பாக எண்ணி வெறுத்தனர். பிற்காலத்தில் ரோமாபுரி மக்களும்கூட வரி செலுத்த வேண்டியதாயிற்று. அகஸ்தஸ், வருமானத்தில் ஒரு சதம் வரியாகச் செலுத்த வேண்டும் என்று சட்டமியற்றினன்.

பேரரசர் வெஸ்பாஸியனை அவனது புதல்வன் டைட்டஸ், ''பொதுமக்களுக்குக் கட்டித் தரப்பட்ட கக்கூஸ்களுக்குக் கூடவா வரி விதிக்கவேண்டும்?'' என்று கேட்டுக் கண்டித்தான். உடனே பேரரசன் தன் மூக்கினருகே ஒரு தங்க நாணயத்தை வைத்து முகர்ந்து, ''இதிலிருந்து துர்நாற்றமா வீசுகிறது?'' என்று கேட்டானும்! அந்தக் காலத்தில் வரி வசூலிப்போர் வரி கொடுக்காதவர்களைச் சும்மா விடுவதில்லை. சிறையில் அடைத்து வைத்தார்கள். இந்தச் சிறைக்கூடம், இருளும், அசுத்தமும் நிறைந்த அறைகளைக் கொண்டது. அறைகளில் எலிகளும், கண்டெலிகளும் வாசம் செய்யும். சித்திரவதை செய்வதற்கென்று தனியாக ஓர் அறை உண்டு. வரி கொடாத பலர் கப்பல்களில் துடுப்பு வலிக்கும் அடிமைகளாக வாழ் நாள் முழுதும் துயரப்பட வேண்டி நேர்ந்தது.

பிரஞ்சுப் புரட்சிக்கு முக்கிய காரணம் தாங்க முடியாத வரிக் கொடுமையும், கட்டாய உடல் உழைப்பும் தான். இவற்றிலிருந்து விடுதலை கோரித்தான் மக்கள் புரட்சி செய்தனர். அமெரிக்காவில் வரி முறை ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற யுத்தத்தைத் தோற்றுவித்திருக்கிறது. பிரிட்டிஷார் அமெரிக்காவில் உள்ள சிவப்பிந்தியக் குடிகளுடன் போரிடுவதற்குப் பணம் தேவைப்பட்டது. அதற்காகத் தேயிலைக்கு ஒரு வரியை விதித்தனர். 1773ம் ஆண்டு டிஸம்பர் 16ந் தேதி பாஸ்டனில் மூன்று கப்பல்களில் வந்திருந்த தேயிலையை, இந்தியர்கள் போல வேஷம் தாங்கிய அமெரிக்க தேசபக்தர்கள் கைப்பற்றிப் பெரும் பகுதியைக் கடலில் தள்ளினர். இதுவே அமெரிக்க சுதந்திரப் போருக்கு வித்திட்டது.

பிரஷ்யாவில் அரசாண்ட இரண்டாம் பிரடெரிக் ராணுவ மேதை மட்டுமல்ல; பொருளாதார மேதையும் கூட. அவர் வரி அதிகாரிகளில் யார்





தாடி வரி

•

அந்தப்புர வரி

•

காற்று வரி

லஞ்சம் பெறாது இருக்கிறார்களோ, அவர்களுக்கு வெகுமதி வழங்க வேண்டும் என்று கருதினார். பொருளாதாரத்தில் அறிஞராக இருந்தும் விசனிக்கத்தக்க விதத்தில் இவர் தமது நாட்டு நாணயத்தின் மதிப்பு மிகவும் குறைந்து போகச் செய்தார். இது ஒரு விதத்தில் மக்களுக்குத் தாங்க முடியாத வரிச் சுமையாகவே இருந்தது.

வருமான வரியின் சிருஷ்டிகர்த்தா இரண்டாவது வில்லியம் பிட் (1782–83) ஆவார். இவர் இங்கிலாந்தில் நிதிமந்திரியாக இருந்தவர். நெப்போலியனின் பரம வைரி. மறைமுக வரி என்பது இவருக்குப் பிடிக்காதது. பிச்சைக்காரனின் கந்தலை எடுத்துக் கொள்வதற்கு ஒப்பாகும் அது என்பார் பிட்.

பிரிட்டனில் 1723 முதல் 1790 வரை வாழ்ந்த ஆடம் ஸ்மித் பொருளாதாரப் பள்ளியை நிறுவியவர். இவரது வரிவிதிப்பு பற்றிய கொள்கைகள் மிகச் சிறப்பானவை. இன்றைக்கும் பயன்தரக் கூடியவை – அவை பின்பற்றப்படுமேயானால். அக் கொள்கைகளாவன : **சமத்துவம்:** எல்லாருக்கும் ஒரே மாதிரி சமமாக வரிவிதிக்கப்பட வேண்டுமென்பதில்லை இதற்கு அர்த்தம். தர்ம நியாயப்படி ஒவ்வொருவருக்கும் உரிய அளவில் வரி விதிக்கப்பட வேண்டும் என்று பொருள். சிலருக்கு விசேஷச் சலுகை காட்டுவதும் வேறு சிலரை அளவுக்கு மீறிக் கொடுமைப்படுத்துவதும் கூடாது.

தெளிவு: யாருக்கும் தான் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பதில் சந்தேகமே இல்லாதபடி வரி விதிகள் தெளிவாக இருக்க வேண்டும். **சுலபம்:** வரி செலுத்துவது மக்களுக்கு எளிதாக்கப்பட வேண்டும். தேவையற்ற சில்லறைத் தொந்தரவுகளுக்கோ அல்லது பணச் செலவுக்கோ அவர்கள் ஆளாகக் கூடாது. **மலிவு:** வரி வசூலிப்பதில் அதிகப் பணம் விரயமாகக் கூடாது. சிக்கனமான விதத்தில் எளிய முறையில் வரிகள் வசூலாகிவிட வேண்டும்.

ஆதி நாளிலேயே சீனப் பேரறிஞர் ஒருவர், ''மக்கள் மீது பல வரிகளை விதித்துக் கசக்கிப் பிழிந்தால் அவர்களை ஆளுவது கஷ்டமாகி விடும்!'' என்று எச்சரித்துள்ளார்.

ஆபிரஹாம் லிங்கன் வரி விதிப்பது பற்றிக் கூறியதைப் பாருங்கள்: ''மக்கள் தாங்களாகவே செய்து கொள்ள வேண்டியதையெல்லாம் அரசாங்கம் தான் செய்வதாகக் கூறிக் கொண்டு முன் வருகிறது. பிறகு அதைச் செய்து முடிப்பதற்காக மக்கள் மீது வரி விதிக்கிறது! இரண்டுமே மக்கள் நலனுக்கு உகந்தவையல்ல.''

வரி விதிப்பு பற்றிய மற்றொரு சிந்தனைக்குரிய அற்புதமான பொன்மொழி மெக்ஸிகோ மன்னருடையது: ''கட்சிகளின் நேற்றைய தேர்தல் வாக்குறுதிகள் இன்றைய வரிகளாக விளங்குகின்றன.''

வரிமுறைகளில் பல விநோதங்கள் இருந்தன. மெக்ஸிகோவின் பழைய ஆட்சியாளர்களான அஸ்டெக்குகளுக்குச் சுருட்டு, ரப்பர் பந்துகள், கழுகு, பாம்பு ஆகியவற்றை வரியாகச் செலுத்த வேண்டியிருந்ததாம். ஆயிரம் வாலிபர்களின் இருதயங்கள் பறிக்கப்பட்டு (இறைவன் திருப்பணி என்ற பெயரில்) அவர்கள் உயிர் இழக்கும்படியும் இருந்ததாம். பெருவில் ஆதிநாளைய இன்காஸ் ராஜ்யத்தில் மக்களுக்கு ஓர் உரிமையும் கிடையாது. கடமையும் கிடையாது. மக்களது உழைப்பிலிருந்து கிடைக்கும் பொருள்கள் கடவுள்போல் உள்ள ராஜாவைச் சாரும். அரசன் தன் படைவீரர்கள் மூலமாக மக்கள் வாழ்வதற்குத் தேவையான பொருள்களை அவர்களுக்கு வழங்குவான். இது தவிர வரி முறைகளில் எத்தனையோ விசித்திரங்கள் உண்டு. ஜன்னல்கள் வரி, அந்தப்புர மாதர்களுக்கான வரி, தாடி வரி முதலிய விநோத வரிகள் உண்டு. ரஷ்ய மன்னர் பீட்டர் தாடி ஒழிப்புக்காகத் தாடி வரியைக் கொண்டு வந்தாராம். இப்போதெல்லாம் பத்மபூஷண் பத்மஸ்ரீ என்று பல பட்டங்களைத் தருகிறார்களே, அந்நாளில் அரசர்கள் விருதுகள் வழங்கி விட்டு அவற்றின் மீது வரிகளும் விதித்து விடுவார்கள்! குயில், குருவிகளுக்கும் வரி உண்டு ஒரு காலத்தில். கடவுள் நம்பிக்கை இல்லாதோருக்கும் படுக்கைகளுக்கும் கூட வரி போட்டிருக்கிறார்கள் சில மன்னர்கள். எல்லாவற்றையும்விட விநோதம் காற்று வரி என்ற ஒரு பழைமையான வரி.

வரி, வரிக் கொடுமையிலிருந்து விடுதலை— இந்தத் தாரக ஒலி எங்கும் கேட்கிறது. விமோசனம் என்றுதான் கிட்டுமோ ?

ஆதாரம்: ''ஸ்காலா''

காமகோடியின் கருணைமொழி



நாஸ்திக புத்தி தீவிரமாக உள்ள வீடுகளிலும் ஸ்திரீகள் தைந்து உருகுகிறார்கள். அவர்களுக்குப் பக்தி இருக்கிற வரையில் நம் மதத்துக்கு ஹானி ஏற்படாது. நம் தர்மம் கெடாது. திலகவதியாரும், மங்கையர்க்கரசியாரும் முறையே தமது சகோதரனும், கணவனும் நம் மதத்தை விட்டபோது பிரார்த்தித்ததாலேயே, பரம கருணாநிதியான பரமேசுவரன் அவர்களை மீண்டும் சைவத்துக்குத் திருப்பினார். ஸ்திரீகள் கோவில் சந்நிதானத்தில் பிரார்த்திக்கும் வரையில் நம் மதத்துக்குப் பாதகம் ஏற்படாது.

வாங்குங்கள் இந்த மர்பி டிரான்ஸிஸ்டர்களில் எதாவதொன்றை...



மர்பி மாடல் டிபி 0816

ஆல்-வேவ் * 3 பாண்டுகள் * 9 டிரான்ஸிஸ்டர்கள் மற்றும் டயோடு.

விலை: ரூ. 415.00 *



மர்பி மினி-மாஸ்டர் மாடல் டிபி 0581

9 டிரான்ஸிஸ்டர்களும் டயோடுகளும் * 2-பான்டுகள் (விளைவுகளைப் பெறுவதில் 3-பான்டுகளுக்குச் சமமானது) * உட்பொருத்தப்பட்ட ஏரியல்-மீடியம் மற்றும் சிற்றலை ரிஸப்ஷனுக்கு.

விலை: ரூ. 303.00 *



மர்பி மிக், மாடல் டிபி 0579

2 பாண்டுகள் * 8 டிரான்ஸிஸ்டர்கள் மற்றும் டயோடு. உட்பொருத்தப்பட்ட ஏரியல் * நுட்பமான திருப்பத்திற்கு 'எபிஸைக்ளிக் ரிடக்ஷன் டியரிங்'!

விலை: ரூ. 240.00 *



மர்பி மியூஸிஷியன், மாடல் டிபி 0509

5 டிரான்ஸிஸ்டர்கள் மற்றும் டயோடுகள் * மீடியம் அலை,ஒரு பான்டு. * உட்பொருத்தப்பட்ட ஏரியல்.

விலை: ரூ. 125.00 *

எக்ஸைஸ வரி இல்லை.

* அகில இந்திய விலை: (மகாராஷ்டிரம்தவிர) எக்ஸைஸ் வரி மட்டுமே உள்ளிட்டது. பாட்டரியின் விலை தனி. விற்பனை வரி மற்றும் இதர ஸ்தல வரிகள் தனி.



murphy radio

மர்பி ரேடியோ இல்லத்தை மகிழ்விக்கிறது!

Murphy sets the standard



தெரிந்த விஷயம் இவர் ஒரு நகைச்சுவை நடிகர் என்பது; தெரியாத விவரம் பதினேழு குளியல் அறைகளையுடைய மாளிகையில் வசிக்கிறார் என்பது.



ஜெர்ரி லூயி

சார்லி சாப்ளினுக்குப் பிறகு இன்று திரை உலகில் பல ஆண்டுகள் குன்றாத புகழுடன் விளங்கி வரும் நகைச்சுவை நடிகர்களுள் அமெரிக்காவின் ஜெர்ரி லூயி குறிப்பிடத் தக்கவர். அவர் நடித்த திரைப்படங்கள் ஒவ்வொன்றும் சுமார் நான்கு கோடி ரூபாய் களுக்கும் மேல் அதிகமாகவே வருவாய் அளித்துள்ளன. திரையுலகைச் சேர்ந்தவர்கள் அவரை ஒரு சாதாரண நகைச்சுவை நடிக ராகக் கருதியபோது உலகப் புகழ் பெற்ற லண்டன் டைம்ஸ் நாளிதழ் ''ஒரு மேதை'' எனப் புகழாரம் சூட்டியது. கடந்த பத் தாண்டுகளாகத் திரையுலகில் மாபெரும் புரட்சியைத் தோற்றுவித்த 'புதிய எழுச்சி' டைரக்டர்கள் பாரிஸ் நகரில் ''ஜெர்ரி லூயி திரைப்பட விழா'' என்று ஒன்று நடத்தி னார்கள். அதுமட்டுமின்றி பிரெஞ்சு திரைப் படக் கழகம் ''தி நட்டி புரொபஸர்'' என்ற திரைப் படத்தைச் சிறந்த முறையில் டைரக்ட் செய்ததற்காக ஜெர்ரி லூயியைச் சிறந்த டைரக்டராகத் தேர்ந்தெடுத்தது.

இவ்வளவு பேரும் புகழும் பெற்ற ஜெர்ரி 1926ம் ஆண்டு மார்ச் 16ம் நாள் நியூ ஜெர்ஸி மாநிலத்தில் உள்ள நிவார்க் நகரில் பிறந்தார். அவரது பெற்றோர்கள் சிறந்த கலைஞர்கள். தந்தை 'நைட் கிளப்' ஒன்றில் பாடகர். தாய் பியானோ வாத்தியத்தை

இசைப்பதில் நிபுணி. ''குலக் கல்வி கல்லா மல் பாகம்படும்'' என்ற பழமொழி ஜெர்ரி யைப் பொறுத்தவரை உண்மையாயிற்று. ஐந்து வயதிலேயே ஜெர்ரி மேடையேறிப் பாடத் தொடங்கி விட்டார். பதினைந்தாவது வயதில் ஜெர்ரி தமது சிறிய 'நகைச்சுவை' நிகழ்ச்சிகளை அரங்கேற்றினார். அவர் வயிற் றுப் பிரச்னையைச் சமாளிக்க மருந்துக் கடை, தொப்பிகள் தயாரிக்கும் தொழிற்சாலை முதலிய பலவற்றில் பணியாற்றினார்.

1946ம் ஆண்டுவரை ஜெர்ரி பல உணவு விடுதிகளில் பாடகராகவும் நகைச்சுவை நடிகராகவும் பணியாற்றினார். அந்த ஆண்டு தான் அவர் மற்றொரு பாடகரான டீன் மார்ட்டினைச் சந்தித்தார். அட்லாண்டா நகரில் உள்ள உணவு விடுதியின் கலை அரங் கில் முதலில் இருவரும் தனித்தனியாகப் பாடினார்கள். சின்னாட்கள் கழித்து இருவரும் பாடல்கள் பாடுவதை விட்டு உணவு விடுதி களில் உள்ள விருந்தினர்களை மகிழ்விப்ப தற்காக அரங்கத்தில் பல கோமாளித்

தனங்களைச் செய்தார்கள். ஒருவரோடு ஒரு வர் சண்டை போடுவது போலவும், திட்டு வது போலவும் அமைந்த அவர்களது 'வேடிக்கை'கள் உணவு விடுதியின் விருந் தினர்களை மகிழ்வித்தது மட்டுமின்றி அவர் களது வருவாயையும் உயர்த்தியது. அது வரை வாரம் ஒன்றுக்கு 2500 ரூபாய்களை வாங்கிக் கொண்டிருந்த அவர்கள் 35000 ரூபாய்கள் வாங்க ஆரம்பித்தார்கள்.

''பெக்கட்'' திரைப்படத்தைத் தயாரித்த பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் ஹால் வாலிஸ் ஜெர்ரி லூயி — டீன் மார்ட்டினின் நகைச்சுவை நிகழ்ச்சிகளை ஒருமுறை கண் டார். அதனால் கவரப்பட்ட அவர் இருவரை யும் பதினாறு படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்தார். டீன் மார்ட்டின் — ஜெர்ரி லூயி ஜோடி நடித்த முதல் படமான ''என் நண்பர் இர்மா'' என்ற படம் 1949ல் வெளிவந்தது. அதற்கு முன் பிரபலமாக இருந்த லாரல் — ஹார்டி, பட்—கோஸ்டல்லோ ஆகிய நகைச்சுவை ஜோடிகளை விட டீன் மார்ட்டின் — ஜெர்ரி லூயி ஜோடி பிரபல மாகத் தொடங்கியது. அத்திரைப்படத்தைத் தொடர்ந்து 'இர்மாவின் மேற்குப் பயணம்' ''படைகளுடன் போர்'', ''அவன் என் பையன்'', ''ஜம்பிங் ஜேக்ஸ்'', ''கேடி'' முதலிய 16 திரைப்படங்கள் ஒன்றன் பின்





ஒன்றாக வெளிவந்து டீன் மார்ட்டின்–ஜெர்ரி லூயி ஜோடியைப் புகழேணியில் ஏற்றின.

1956ம் ஆண்டில் ஜெர்ரி லூயி – டீன் மார்ட்டின் ஜோடி பிரிந்து விட்டது. காரணம்? டீன் மார்ட்டின் நகைச்சுவைப் படங்களில் நடிப்பதை ஒதுக்கிவிட்டு, குணச்சித்திர நடிகராக வேண்டும் என்று எண்ணினார். டீன் மார்ட்டின் – ஜெர்ரி லூயியின் கடைசித் திரைப்படம் 'ஹாலிவுட் ஆர் பஸ்ட்'' ஆகும்.

இணையை இழந்த லூயி தம் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று முதலில் பயந்தார். இருந்தபோதிலும் 1957ல் வெளிவந்த, அவரை மட்டும் கதாநாயகனாகக் கொண்ட, ''டெலிவரி பாய்'' போன்ற திரைப்படங்கள் ஜெர்ரியின் தனித் திறமையை வெளிப்படுத்தின. டீன் மார்ட்டினை அவர் இழந்தபோதிலும் ஹாலிவுட்டின் தலைசிறந்த நகைச்சுவை நடிகராக ஜெர்ரி லூயியே விளங்கினார்.

ஜெர்ரி லூயியின் வெற்றியைக் கண்ட பிரபல பாரமவுண்ட் திரைப்பட நிறுவனம் ஜெர்ரியுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. ஏழு வருடங்களில் ஜெர்ரி 14 திரைப்படங்களைத் தயாரித்துக் கொடுக்க வேண்டும்; அதற்கு பாரமவுண்ட் நிறுவனம் ஜெர்ரிக்கு ஏழரைக் கோடி ரூபாய்களும், லாபத்தில் அறுபது சதவிகிதமும் கொடுக்க வேண்டும் என்பதுதான் அந்த விநோத ஒப்பந்தம்.

திரையுலகின் வரலாற்றிலேயே இப்படி ஓர் ஒப்பந்தம் நிகழ்ந்தது இதுதான் முதன்முறை.

இன்று ஜெர்ரி லூயி தாமே தமது படங்களை டைரக்ட் செய்து தயாரிக்கிறார். ஆறு மகன்களைப் பெற்ற அவர் தரும சிந்தை மிக்கவர். தசை வியாதிகளால் கஷ்டப்படுபவர்களுக்காக ஒரு மருத்துவ மனை கட்டுவதற்காக அவர் பல சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தி அவை மூலம் சுமார் 25 கோடி ரூபாய்கள் வசூலித்துக் கொடுத்தார். இதுவரை அவர் சுமார் நான்கு கோடி ரூபாய்களுக்கு மேல் பல நல்ல காரியங்களுக்காக நன்கொடை அளித்துள்ளார். 37 அறைகளும் 17 குளியல் அறைகளும் கொண்ட ஐந்து கோடி ரூபாய் பெறுமானமுள்ள மாளிகையில் இன்று வசிக்கும் ஜெர்ரி மது அருந்துவதே இல்லை!

- அ. இராமதுரை





பழமையில் புதுமை



“நானும் வருவேன்!” — மிகவும் முரண்டு பிடித்தது எழுபத்தெட்டை எட்டிப் பிடிக்கப் போகும் குழந்தை.

“வந்து தொலை. இன்றோடு கடைசி நாள். நாளை முதல் நானும் போகப்போவதில்லை. உன் ஆசையைக் கெடுப்பானேன்?” — சம்மதம் தெரிவித்தது இருபத்திரண்டை எட்டிப் பிடிக்க முடியாமல் தவிக்கும் இளம்.

“இன்று மழைதான்!” — அநுமதி கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் கிளுகிளுத்தது எழுபத்தெட்டு.

“விடிந்ததும் விடியாததுமாகவே வெய்யில் இப்படிக் கொளுத்துகிறது. நீலவானத்திலே எங்கு பார்த்தாலும் ரொட்டித் துண்டைப் போன்றுகூட மேகத் துண்டைக் காணோம்! பெரிசா ஜோஸியம் சொல்றியாக்கும்!” கடைசி நாள் பாடம் கெட்டு விடக் கூடாதே என்ற ஆதங்கத்தில் முணுமுணுத்தது இருபத்திரண்டு.

“உனக்குத் தெரியாது. நான் சொன்னால் சொன்னதுதான். உங்க தாத்தா வானிலை ஆராய்ச்சியிலே நிபுணர் என்று பட்டம் பெற்றவர். உத்தியோகம் பார்த்த காலத்திலே, ‘இன்னும் எட்டு நாளைக்கு மழை தலை காட்டாது’ என்று வானிலை ஜோஸ்யம் கூறிப் பத்திரிகைக்குச் செய்தி அனுப்புவார். ஆனால் மறு நாள் காலை அவரை ஆபீசுக்கு அனுப்பும்போது நான் டிபன் — காப்பி பிளாஸ்கோடு மழைக் கோட்டையும் அவர் கையில் கொடுப்பேன். ‘சட்! என்னைப் பைத்தியமாக்குகிறாயா?’ என்று சீறி விழுவார். ‘சொல்வதைக் கேளுங்கள். இன்றைக்குத் தான் புதுச் சலவைத் துணி போட்டிருக்கிறீர்கள். போதாக் குறைக்கு ‘ஜோஸ்யம்’ வேறு சொல்லியிருக்கிறீர்கள். எதற்கும் முன் ஜாக்கிரதையாக எடுத்துப் போங்கள். மழை வராவிட்டால்,

இதுவோ மாம்பழக் காலம். பழங்களுக்கெல்லாம் அரசன் என்று புகழ்பெற்ற இதைக்கொண்டு ‘ஜாம்’ செய்ய ஆசையாயிருக்கிறதா? ஒரு கிலோ மாம்பழச் சாறு, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு கிலோ நீர், இரண்டு தேக்கரண்டி சிட்ரிக் ஆஸிட் - இவற்றைக் கலக்கி நன்றாகக் கொதிக்க வைக்கவும். ஜெல்லா போன்று இறுகியபின் இறக்குங்கள். ஆறிய பின் அதன் ருசியைப் பாருங்கள்! மாம்பழம் கிடைக்காத காலத்திலும் இந்த ஜாமைச் சேமித்து வைத்துக் கொண்டால், இதன் ருசித்தும் சுவைக்கலாம். இதேபோல் தக்காளி ஜாமும் செய்தால் என்ன என்று தோன்றும். தக்காளி ஜாம் மட்டும் என்ன? எது வேண்டுமானாலும் தயார் செய்து கொள்ளுங்களேன்!

சர்க்கரையும் நீரும் ‘ஜீரா’வாகப் பாகம் செய்யப்படுகின்றன.



மழைக்கோட்டு சிறிதும் மடிப்புக் கலையாமல் கையோடு திரும்பி வந்து விட்டுப் போகிறது!' என்று தாஜா பண்ணி அனுப்புவேன்.''

''உன் பேச்சைக் கேட்டுக் கொண்டு, பொதி சுமந்த கதையாகத் திரும்பி வருவாராக்கும்!''

''அதுதான் இல்லை. என் ஜோஸியம்தான் பலிக்கும். அவர் ஆபீசுக்குப் புறப்பட்ட அரை நாழிகைக்கெல்லாம் மழை பிடித்துக் கொண்டு விடும்.''

''அப்படியானால் 'வானிலே ரேஸ்யம்' சொல்லும் உத்தியோகத்துக்கு உன்னையே போட்டிருக்கலாமே!''



'ஸ்குவாஷ்' தயார். பாட்டிலில் சேமிக்கப்படுகிறது.

''என்னைக் காட்டிலும் அந்த உளுத்தம் பருப்பைப் போடலாம், வெண்டை, சுண்டை, கத்திரி, கொத்தவரை போன்ற காய்களைப் போட்டிருக்கலாம்.''

''என்ன புதிர் போடுகிறாய் பாட்டி?''

''நான் ஒன்றும் புதிர்–கிதிர் போடவில்லை. அப்பளத்துக்கு உளுத்தம் பருப்பு நனைத்து வைத்திருப்பேன். மலிவாகக் கிடைக்கின்றனவே என்று வற்றல் போட ஏதாவது காய்கறிகளை வாங்கிப் போட்டிருப்பேன்; விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்திருந்து நறுக்கிக்கூட வைத்திருப்பேன். நாலு நாட்களாக வெயில் விளாகப் போகிறதே என்று! இந்த வானம் எப்படித்தான் என் காரியத்தை மோப்பம் பிடிக்குமோ, தெரியவில்லை! இருண்டு கறுத்து வானமே போர்த்துக் கொண்டு விட்டாற்போல் மழையைக் கொட்டும். உளுத்தம் பருப்பு ஊசி, வற்றலுக்கு நறுக்கிய காய்கள் பூசணம் பூத்து, புழுத்து நெளிந்ததும் சொல்லி வைத்தாற் போல வானம் 'வெளி' வாங்கிவிடும்.''

''உன் ஜோஸியப்படியே இன்று மழை வந்தால்கூட, நாங்கள் நேற்றுப் போட்டிருக்கும் உருளைக் கிழங்குச் சீவல் வீணாகாது. பத்து மாசமானாலும் பச்சை உருளைக் கிழங்கு மாதிரியே இருக்கும். ருசியும் கெடாது.''

''அதெப்படி? மழை வந்தால் பூசணம் பூக்கும். வராமல் காய்ந்தாலும் வெய்யிலில் காய்ந்ததற்கு ஒரு வாசனை உண்டே, அது போகாது; கூடவே இருக்கும். என் வாழ்க்கையின் எழுபத்தெட்டில் எட்டைத் தள்ளினாலும் மீதி எழுபது வருஷ அநுபவம் பொய்க்காது.''

''அது அந்தக் காலம், பாட்டி. இப்பொழுதெல்லாம் நாம் எத்தனையோ முன்னேறியிருக்கிறோம்.. உருளைக் கிழங்கு கிலோ தொண்ணூறு காசுக்குக் கிடைக்கிறதே என்று மூன்று கிலோ வாங்கிச்....''

''சந்தேகம் என்ன? அந்தக் காலத்துக்கு இக் காலம் எல்லாவிலும் முன்னேற்றம்தான்!''

''கேளு, பாட்டி! சீவி வற்றல் போட்டிருக்கிறோம். ஏன் வெண்டைக்காய் கூட வாங்கிப் போட்டிருக்கிறோம்.''

''எங்கே ?''

''சென்னை, தியாகராயநகரில் ராமச்சந்திர ஐயர் தெரு என்று ஒன்று இருக்கிறது. அங்கே 'கம்யூனிடி கேனிங் சென்டர்' என்று ஓர் அலுவலகம். அங்கே தான்....''

''வெய்யில் நன்றாக அடிக்கக்கூடிய பெரிய முற்றம் இருக்கிறதாக்கும்!''

''முற்றமும் இல்லை, கிற்றமும் இல்லை. சொல்லப் போனால் அங்கே வற்றல் போட வெய்யிலும் தேவையில்லை. வற்றலுக்காக நறுக்கும் காய்களை ஓர் அறையில் அடுக்கடுக்காகப் பல தட்டுகள் கொண்ட ஓர் இயந்திரத்தில் பரப்பி மூடியிருக்கிறோம். பக்கத்தில் மின்சார இயந்திரம் இருக்கிறது. அதன் ஸ்விச்சைத் தட்டி விட்டால், ஒரே அளவாகச் சூடேற்றுகிறது. வெய்யிலில் மூன்று நான்கு நாட்கள் என்று காய வைக்கிறோமே, அது அங்கே மணிக்கணக்கில் நடந்து விடுகிறது. அதோடு வெய்யிலில் காய வைத்தால் கறுத்து உருத் தெரியாமல் மாறி விடுகிறதே. அந்தத் தொல்லையும் கிடையாது. அதன் சுய உருவம் அப்படியே இருக்கிறது. சத்தும் தரமும் கெடாமல் நாள்பட இருப்பதற்கு ஒரு வகை ரசாயன உப்புப் போடுகிறார்கள். இதற்கெல்லாம் செலவும் அதிகமில்லை.''

''அப்படியா? ஆனால் அந்த இயந்திரத்தை ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் வாங்கி வைத்துக் கொள்ள முடியுமோ? விலை அதிகமாயிராதோ ?''

''இந்தக் காலத்தில் நாற்பது — ஐம்பது ரூபாய் ஓர் அதிகமா? குடும்ப உபயோகத்துக்கேற்ற வகையில் 'டொமெஸ்டிக் டிரையர்' இந்த ரூபாய்க்குள் கிடைக்கிறது!''

''அப்படியானால் அப்பீல் இல்லை. ஆமாம், அங்கே இன்னும் என்ன என்ன செய்யக் கற்றுத் தருகிறார்கள்?''

புத்தகத்தின் உபயோகம்



நகைச்சுவை எழுத்தாளர் மார்க் ட்வெயினுடைய வீட்டுக்கு ஒரு நண்பர் வந்தார். அது கிறிஸ்துமஸ் பண்டிகை சமயம்.

தரையெல்லாம் புதுப் புத்தகமாக இருக்கக் கண்டு, "எல்லாம் பரிசுகளா?" என்று கேட்டார்.

"ஆம்."

"புத்தகம் என்றால் உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமா?"

"சந்தேகமில்லாமல்" என்றார் ட்வெயின். "கனமான புத்தகங்களை எடுத்துக் கொள்ளுங்கள். சத்தம் போடும் பூனைகள்மீது எறிவதற்குக் கனமான புத்தகத்தை விட மேலானது கிடையாது. மெல்லிசான புத்தகங்களை ஆட்டம் கொடுத்துவிட்ட மேசைக் கால்களுக்குக் கீழே செருகி வைக்கலாம். தோலில் பைண்டு செய்த இதைப் பார்த்தீர்களா? கத்தி தீட்டுவதற்கு வெகு பொருத்தம். புத்தகங்களே லட்சியப் பரிசுகள். எவ்வளவு புத்தகங்கள் வந்தாலும் எனக்குப் போதாது."

- என். ஆர். மோகன்

"ஜூஸ், சிரப், கிரஷ், ஸ்குவாஷ், ஜெல்லி, ஜாம் — எல்லாம் கற்றுத் தருகிறார்கள். ஜெல்லி, ஜாம் நீங்கலாக மற்றவை நீ பிழிந்து தரும் சர்பத் மாதிரிதான்."

"இதைக் கற்றுக் கொண்டு வருவதற்கு பெரம்பூரிலிருந்து மாம்பலத்துக்கு இத்தனை பஸ் சார்ஜ் செய்து கொண்டு போய் வர வேண்டுமா? என்னைக் கேட்டாலே சொல்லித் தருவேனே! ஓர் எலுமிச்சம் பழத்தை நறுக்க வேண்டியது. சாறு பிழிய வேண்டியது. இத்தனை சர்க்கரையைப் போட வேண்டியது. நானு ஆற்று ஆற்றினால் சர்பத்து!"

"நீ பண்ணும் சர்பத்தை மாதக் கணக்கில் வைத்துக் கொள்ள முடியுமா?"

"முடியாது. ஆனால் கிடைக்கக்கூடிய பொருள்தானே?"

"எதற்கும் கிராக்கி — மலிவுக் காலம் உண்டோ இல்லையோ? மலிவாக இருக்கும் காலத்தில் வாங்கிச் செய்து வைத்துக் கொள்ளலாமே!"

"அது நியாயம்தான். அந்தக் காலத்திலே அப்படித்தான் நாங்கள் வருஷாந்தரச் சாமான்கள் என்று புளி, வெல்லம், பருப்பு, எண்ணெய் முதலியவற்றைச் சேகரித்து வைத்துக் கொண்டிருந்தோம். மலிவாகக் கிடைக்கிற நாளிலே வாங்கிப் போட்டுவிடுவோம். இப்போ விற்கிற விலையிலே அதெல்லாம் எங்கே சாத்தியம்? எல்லாருமே இந்த நாளில் அன்றாடங் காய்ச்சியாகத்தான் இருக்க வேண்டும்!"

"நீ சொல்றது உண்மைதான். இருந்தாலும், மாம்பழம், திராட்சை, ஆரஞ்சு, தக்காளி போன்ற பழங்கள் காலத்துக்கேற்பக் கிராக்கியிலும் மலிவாக விற்கின்றனவோ இல்லையோ? வாங்கி சிரப்போ ஸ்குவாஷோ செய்து வைத்துக் கொண்டால், வருகிற நியர் விருந்தாளிகளுக்கு எந்நேரத்திலும் கொடுத்து உபசாரம் செய்யலாமே!"

"நூற்றிலொரு வார்த்தை! பாலுக்கும், காப்பிக்கொட்டைக்கும் படுகிற பாட்டிலே, இப்படி ஏதாவது செய்து வைத்துக் கொண்டால், உபயோகமாகத்தான் இருக்கும்! எலுமிச்சம்பழ சர்பத்து செய்வது எப்படி?"

"நான் செய்யக் கற்றுக் கொண்டிருக்கிற சர்பத்துக்கு 'லெமன் ஸ்குவாஷ்' என்று பெயர். இந்தக் காலத்திலே உன் படி, ஆழாக்கு எல்லாம் போய்க் கிலோக் கணக்கு ஆகிவிட்டதே. தெரியுமோ, இல்லையோ?"

"பேஷாத் தெரியும்! என்னதான் புதிசு—புதிசாகப் பெயரை மாற்றினாலும் கணக்கை மட்டும் மாற்ற முடியாது. கணக்கு கணக்காகத்தான் இருக்கும். சொல்லு!"

"ஒரு கிலோகிராம் எலுமிச்சம்பழச் சாற்றுக்கு 1.8 கிலோகிராம் சர்க்கரை வேண்டும். 1.2 கிலோகிராம் தண்ணீர் வேண்டும். சர்க்கரையும் தண்ணீரும் கலந்து திரவமாகும் அளவுக்குக் கொதிக்க வைத்து ஆற வைக்க வேண்டும். பிறகு வடிகட்டி அந்தக் கலவையிலே எலுமிச்சம்பழச் சாற்றைக் கலக்க வேண்டும். 'லெமன் எஸ்ஸென்ஸ்' என்று ஒன்று இருக்கிறது. அதை நாலு தேநீர்க் கரண்டி அளவு கலந்து கொண்டால் ருசியை எடுத்துக் கொடுக்கும். இந்த ஸ்குவாஷ் கெடாமல் அதிக நாட்கள் தாக்குப் பிடிக்கணுமோ, இல்லையோ? அதற்குப் பாதுகாப்பாக ஒரு பொருள். அதை இங்கிலீஷிலே 'கே.எம்.எஸ். பிரிசர் வேடிவ்' என்கிறார்கள். அதிலே 3.2 கிராம் சேர்த்து நன்றாகக் கலந்தபின் பாட்டிலில் அடைத்து வைத்துக் கொண்டால் அதுதான் லெமன் ஸ்குவாஷ்."

"பெயர் கம்பீரமாகத்தான் இருக்கிறது."

"பெயருக்கேற்றபடி ருசியாகவும் இருக்கும். இதையே நீ கடைகளில் போய் வாங்கினால் மூன்று நான்கு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டும். நாமாகச் செய்தால் இரண்டு இரண்டரை ரூபாயில் அடங்கிவிடும்! அது மட்டுமில்லை. அதிகமாகக் கைபடாமல் விஞ்ஞான ரீதியாகவும் தயார் செய்யலாம்."

"....ஆனால் உன் அகத்துக்காரனுக்கு அது பிடிக்காதே! சமைக்கிறது இந்தப் பாட்டி கை. ஆனால் உன் கையாலே நீ எடுத்துப் பரிமாறவில்லை என்றால் அவன் எங்கே சாப்பிடுகிறேன் என்கிறான்? எதற்கும் பெண்டாட்டி கையை அல்லவா எதிர்பார்க்கிறான்!"

"போ, பாட்டி! உனக்கு எதற்கெடுத்தாலும் பரிகாசம்தான்! — அது போகட்டும், உனக்குக் 'கிரேப் ஜூஸ்' பிடிக்குமோ?"

"திராக்ஷை சர்பத்துதானே?"

"ஆமாம். அதுவும் செய்யக் கற்றுத் தந்திருக்கிறார்கள்! இன்று பண்ணப்போகிறேன்!"

"இதென்ன பிரமாதம்? யானைக்கு அர்ரம் என்றால் குதிரைக்குக் குர்ரம். ஒரு கிலோகிராம் திராக்ஷைச் சாற்றுக்கு என்னவோ சொன்னாயே புள்ளிக் கணக்கு.... அப்படி சர்க்கரை, தண்ணீர் வைக்க வேண்டும். அவ்வளவுதானே?"

''அதுதான் இல்லை. இந்தக் கணக்குக் கொஞ்சம் மாறும்.''

''மாறுமா?''

''ஆமாம். ஒரு கிலோ திராக்ஷைச்சாற்றுக்கு இரண்டு கிலோ சர்க்கரை போட வேண்டும். ஒரு கிலோ தண்ணீர் போதும். 'ஸிட்ரிக் ஆஸிட்' மூன்று தேநீர்க் கரண்டி, டோரேவிட் மூன்று நான்கு தேநீர்க் கரண்டி, ஸோடியம் பென்சாயின் 3.2 கிராம். பாக முறை லெமன் ஸ்குவாஷைப் போலத்தான். மாம்பழம், தக்காளி போன்ற பழங்களைக் கொண்டும் 'ஸ்குவாஷ்' மேற்கூறிய முறையில் தயாரிக்கலாம். இவற்றுக்கு டோரேவிட், ஸோடியம் பென்சாயின் தேவையில்லை. கே. எம். எஸ். பிரிசர்வேடிவ் மட்டும் 3.2 கிராம் சேர்க்க வேண்டும். ருசி பிரமாதமாயிருக்கும்! உன் மாதிரி கணக்கு வழக்கு தெரியாமல் செய்தால் ருசி கெட்டுவிடும்!''

''இத்தனை நாளும் சமைக்கிறேனே நான்! கணக்குவழக்குத் தெரியாமலா சமைக்கிறேன்? ஒரு நாளைக்கு உப்பு தூக்கலாக இருக்குமா? புளிப்பு உறைப்பு குறைந்திருக்குமா? எதையும் இஷ்டமாகப் போட. இந்தக் கை பழகியிருக்கிறதாக்கும்! உனக்கும் எத்தனை நாட்களாகச் சொல்லித் தருகிறேன். இப்பத்தானே கல்யாணம் ஆனபிறகு அகத்துக்காரனுக்கு வாய்க்கு வழங்கும் வண்ணம் சமைக்கணும் என்று அக்கறை காட்டுகிறாய்! சர்பத்து ஜெல்லி, ஜாம் செய்யக் கற்று வரவேண்டும் என்றுகூட ஓடுகிறாய்!''

''மெய்தான் பாட்டி! அந்த உணவு—பராமரிப்பு தயாரிப்பு விடுதியிலே இதையெல்லாம் நாம் நேர்முகமாகக் கற்று வரலாம். அதோடு நமக்குத் தேவையானவற்றைத் தயாரித்துக் கொண்டும் வரலாம். ஒரு பாட்டிலுக்குப் பெயருக்கு இருபது காசுகள் வாங்குகிறார்கள். கலைகூட்டிப் பொருளைக் கெடாமல் பாதுகாக்கும் ரசாயனங்களும் குறைந்த விலையில் தந்து உதவுகிறார்கள்!''

''அப்படியா ?''

''இது வரை நானூறு பெண்களுக்கும் மேலாகச் செய்முறைகளைக் கற்றுச் சென்றிருக்கிறார்கள். வகுப்பில் ஒரு தடவைக்குப் பதினைந்து பேர்களுக்கு மேல் எடுத்துக் கொள்வதில்லை. பதினைந்து நாட்களுக்குள் உணவுப் பொருள் பராமரிப்புக் கலையைக் கற்றுத் தந்துவிடுகிறார்கள். இதற்குக் கட்டணம் — கிட்டணம் வசூலிப்பதில்லை.''

''நானும் கற்றுக் கொள்ளலாமோ?''

''தாராளமாக. குமரி முதல் கிழவி வரை யார் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் நூறு பேர் இன்னும் 'க்யூ' வரிசையில் நிற்கிறார்கள். உன் பெயரையும் கொடுத்து வைத்தால் முறை வரும் பொழுது தகவல் தெரிவிப்பார்கள்.''

''பேஷ்! இங்கும் 'க்யூ'தானா ?''

''வித்யாபாரதி போன்ற மாதர் சங்கங்களிலிருந்துகூடச் சில அங்கத்தினர்கள் இங்கே பயிற்சி பெற்றுச் சென்று தங்கள் சங்கங்களில் இப்பணியைத் தொடங்கியிருக்கிறார்கள். இதைச் சிறு தொழிலெனக் கொண்டு பயன் பெறும் பல நிறுவனங்களும் இதன் உதவியை நாடியிருக்கின்றன. இத்துறையில் எல்லாருக்கும் இந்த நிறுவனம் உதவத் தயாராயிருக்கிறது !''

''அப்படியா ? யார் இத்தனை பொறுப்போடு காரியங்களைச் செய்கிறது ?''

''ஸ்ரீ பி. பி. மஜூம்தார் என்று ஒருவர். திரிபுராவைச் சேர்ந்தவர். இந்த விஞ்ஞானத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்துக் கொண்டு பட்டம் பெற்றவர். மைசூரில் இத்துறையில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றுத் தேர்ந்தவர். மத்திய அரசாங்கத்தின் ஊழியராக 1965ஆம் ஆண்டு நம் சென்னை மாநகருக்கு வந்தவர். தமிழ் நாட்டுக் குடும்பப் பெண்களைப் பிரமாதமாகப் புகழ்கிறார். உணவுப் பொருள் பராமரிப்பு விஷயத்தில் அவர்கள் காட்டும் அக்கறையைப் போல் வேறு எந்தப் பகுதியிலும் கண்டதில்லை என்று சொல்லிச்சொல்லி மகிழ்கிறார்.''

''குணம் கண்ட இடத்தில் போற்றுவது தானே பண்பு.''

''பழங்காலத்திலேயே நாம் இந்த முறைகளை யெல்லாம் அறிந்திருந்தோம். இன்று விஞ்ஞான ரீதியில் புதுமை மிளிரக் கற்கிறோம். அன்றையப் பாட்டிமார்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை என்று உன்னைப் போன்றவர்களுக்கும் சர்டிபிகேட் தருகிறார்!''

''நீ சொல்வதிலிருந்து அவர் பேச்சை வைத்துப் பார்த்தால் பத்துப் பேரன்—பேத்தி எடுத்தவர்போல் அல்லவா இருக்கிறது!''

''போ, பாட்டி! என்னதான் இருந்தாலும் உனக்கு இந்த இடக்கு மட்டும் போகவில்லை!'' என்று முற்றுப்புள்ளி வைத்தது இருபத்திரண்டு எழுபத்தெட்டின் பேச்சுக்கு.—ரா. வீ.

நாட்டியமணி யார்?



இப்படி அதிசயமான நடனம் ஆடும் நாட்டியமணி யாரென்று தெரிகிறதா?

(விடை: 50ம் பக்கம் பார்க்க)



அரச கட்டளை



தன் தந்தையின் உயிர் குடித்தவன் தரணி யாள்வதா என்று குமுறி எழுகிறான் குமரன் விஜயன். அவன் கத்தி வீரன். அது மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஆகத்தானே இருக்க வேண்டும்? கொடுங்கோல் மன்னன் தன் குற்றம் உணர்கிறான். மக்களின் குறை தெரிந்தவன்தான் மன்னனாக வேண்டும் என்ற திடீர் முடிவுக்கு வந்து தன் நாட்டையும் மகள் மாங்கனியையும் அந்த நல்லவனிடம் ஒப்படைத்து விட்டு மரணமடையும் மன்னனாக வருபவர் கௌரவ நடிகர் வீரப்பா. மன்னர் மகளையும் மணிமகுடத்தையும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்று சூழ்ச்சிகள் பல செய்கிறான் தளபதி. அந்தத் தளபதி வில்லன் மனோகராகத்தானே இருக்க வேண்டும்? அண்டைநாட்டை ஆளுகிறாள் அல்லிராணி பரம்பரையிலே வந்தவள். அவள் அழகி. கலைகளிலே வல்லவள். அப்படியானால் அது அபிநய சரஸ்வதி சரோஜா தேவியாகத் தானே இருக்க வேண்டும்? வல்லவளின் அண்ணன் வில்லவன் அவளுக்குள் அடக்கம். அப்பாவி அண்ணனுக்காக அரசகட்டிலில் இருக்கிறான் அவன். அந்த வில்லவனாக வருவது அசோகன். இந்த அண்ணனுக்கும் தங்கைக்கும் அரச காவலராக, மதியூகி மந்திரியாக, மகாவீரராக ஒருவர் இருக்கிறார் என்றால் அது நம்பியாராகத்தானே இருக்க முடியும்? குமரி நாட்டுக் கத்திவீரனிடம் தன் உயிரையே வைத்திருக்கிறாள் ஓர் அப்பாவிப் பெண். 'அத்தான், அத்தான்' என்று சிணுங்கிச் சிரித்துக் குதிப்பதற்காகவொரு பாத்திரப் படைப்பு. இருந்துக் கவர்ச்சிக் கன்னி ஜெயலலிதா இருக்கும்போது கவலை எதற்கு ?

இவர்களைத் தவிர இன்னும் பல பாத்திரங்களையும் மோதவிட்டுச் சூழ்ச்சிகள் பல செய்து குழப்பங்களை உண்டாக்குகிறார் தளபதி. நாட்டு மக்களின் வீர உணர்ச்சியையும் விடுதலை வேட்கையையும் தன் ஆட்டத்திறனால் தட்டி எழுப்புகிறாள் ராணி. அபிநய சரஸ்வதி ஆயிற்றே! குமரி நாட்டு வீரனும் அண்டை நாட்டு ராணியும் ஒருவரையொருவர் யார் என்று தெரிந்து கொள்ளாமலே (விந்தைதான்!) காதலிக்கிறார்கள் !

சமீபத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச் சம்பவத்துக்குப் பிறகு வெளிவரும் மக்கள் திலகத்தின் படம் என்ற ஒரே காரணமே கொட்டகை நிறைந்த காட்சிகள் தொடர்ந்து நடைபெறுவதற்குப் போதும். காட்சி ஜோடனை, ஆடையணி அலங்காரம் இவைகளின் சிறப்பை மேனாட்டுப் படங்களோடு ஒப்பிடச் சொல்கிறது. மக்கள் திலகத்தின் படத்தில் மக்கள் எதிர்பார்க்கும் சண்டைக் காட்சிகளில் நல்ல கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

காட்டு ராஜாவாக வரும் நாகேஷ் நம் கருத்தில் நிற்கவில்லை. நாகேஷ், மாதவி பாத்திரம் எதற்காக என்றே புரியவில்லை. மாதவி - ஜெயலலிதா கட்டம் விரசமாகக்கூட இருக்கிறது.

அரச கட்டளை அபாரமாக இல்லாவிட்டாலும் மக்கள் திலகத்தின் ரசிகர்களுக்கு ஏமாற்றமளித்து விடவில்லை.



சுந்தரமூர்த்தி நாயனார்

சிவனருட் செல்வர்களில் ஒருவரும், நால்வர் என்று பெருமையோடு போற்றப் படும் சமயக் குரவர்களில் ஒருவருமான சுந்தர மூர்த்தி நாயனார் வாழ்க்கையைப் படமாக்கி யிருக்கிறார்கள்.

திருவாரூரில் திருமண மேடையிலே பரவை நாச்சியாரை மணக்கப் போகும் வேளையிலே இறைவன் பாடும் பணிக்குச் சுந்தரரை ஆட் கொள்ள 'அடிமை'யாக்குகிறார். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதல்லவா? பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட மன முருக்கும் காட்சிகளை எதிர்பார்த்துப்போனால் ஏமாற்றம்தான். பண்டரிநாத் சுந்தரமூர்த்தி நாயனாராக வருகிறார். அவரிடம் நாயனா ராகவே ஆகிவிடும் பான்மையைக் காண வில்லை. பரவை நாச்சியாராக வரும் ஜோதி லட்சுமியிடம் கொஞ்சம் நடிப்பைக் காண்கிறோம்.

எல்லாம் புதிய நடிகர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும் என்று உருப்படாத ஹாஸ்யக் கும்பலை வைத்து, அவர்களது பத்தாம் பசலி ஹாஸ்யங்களைக் கேட்கவைக் கிறார்கள். சிரிப்பதற்குப் பதில் தலைவேதனை தான் கண்ட பலன்.

பல சமயம் படம் இருட்டடித்து விடுகிறது: படத்துக்குக் கொஞ்சம் உயிர் தருபவை சீர்காழி கோவிந்தராஜனின் சில இன்னிசைப் பாடல்கள்.

மொத்தத்தில், சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் காப்பாற்றியதைப் போல் படத் தையும் அவர்தான் காப்பாற்ற வேண்டும்!

தெய்வமானாள் (நாடகம்)

அவன் பெயர் ரகுராமன்: அவள் பெயர் வைதேகி. அவர்கள் இருவருக்கும் பெயர்ப் பொருத் தம் மட்டும் அல்லாமல் மனப் பொருத்தமும், குணப் பொருத்தமும் இருந்தன. திருமணமும் நடந்தது. அப்புறம்தான் சிக்கல் எழுந்தது. ரகுராமனது சிட்டாட்ட ஆசை. அதுதான் விகவரூபம் எடுத்து அவர்களுடைய இன்ப வாழ்வையே அழித்துவிட்டது.

வைதேகியாக நடித்த கே. ஆர். இந்திராதேவி உலகம் தெரியாத பெண்ணாக வந்த போதும் சரி, கணவன் இறந்த பிறகும் அவன் உயிரோடு இருப்ப தாகவே எண்ணிக் கொண்டிருந்த போதும் சரி, உருக்கமாக நடித்து நாடகத்துக்கு உயிர் கொடுத்து விட்டார். இந்நாடகத்திலேயே பாத்திரத்தோடு ஒன்றிப் பிரமாதமாக நடித்தவர் பூரணம் விசுவநாதன்தான்; வைதேகியின் மாமா, சரக்கு மாஸ்டர் சம்புவைய ராகவே மாறிவிட்டார்.

ரவி, ரகுராமனாக வந்து மிகவும் இயல்பாக நடித்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார்.

அம்பியாக வந்த கூத்தபிரான் மேடையில் தோன்றிய போதெல்லாம் நகைச் சுவையையும் தம் முடன் கொண்டு வந்து கொட்டகை முழுவதும் பரிமாறி எல்லாரையும் களிப்பில் ஆழ்த்தி விட்டார்.

போத்தியின் தோட்டம் சின் மறக்க முடியாத காட்சி. நிஜதோட்டமேயே நிர்மாணித்து விட்டார்கள்!

ஆர். காந்திமதி வேலைக்காரி முத்தம்மாளாக வந்து நன்றாய் நடித்தார்.

ஹாஸ்ய ரஸத்தைப் போலவே சோகமும் நிறைய இருப்பது நாடகத்தின் விசேஷ அம்சம். கணவனை இழந்த பின்பும் சுமங்கலித்வம் கொண்டாடிக் கொண்டு சித்த சுவாதீனம் இழந்தவள் போல் இருந்த வைதேகியைச் சகஜ நிலைக்குக் கொண்டு வரும் பொருட்டு, இறந்து விட்ட அவள் கணவன் நெறி பிசகிவிட்டதாக வேலைக்கார ஸ்திரீயின் மூலம் நிரூபிப்பது வேதனை தருவதாயிருக்கிறது. ஆனால் வைதேகியைக் கடைசியில் தெய்வமாக்க நாடகத்தில் அந்த நிரூபணம் தேவைப்படுகிறதே!

நாடகத்தை ஆக்கிய "மாயாவி" வசனத்தை யும் அழகாக எழுதியிருக்கிறார். டைரக்ஷன் பொறுப் பையும் ஏற்றுச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.





சூரன் பீட்டர்
9
வால்ட் டிஸ்னி
குட்டி வனதேவதையைக் கொண்டு வருவதற்காகக் காப்டன் ஹூக்கின் அந்தரங்கப் பணியாளன் தனியாகக் கப்பலிலிருந்து கிளம்பினான். தீவில் தேவதை எங்கிருக்கிறதென்று அவனுக்குத் தெரியும். இதே சமயத்தில் செவ்விந்தியர்களின் இருப்பிடத்தில் பீட்டரைக் கௌரவிப்பதற்கான
விருந்தில் பாட்டும் கூத்தும் அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தன
கூடு கடத்தப்பட்ட வன தேவதை கேப்டனுக்குக் கொண்டு வரப்பட்டாள்
CONTINUED...

தான் வஞ்சிக்கப்பட்டதைக் குட்டி தேவதை உணர்ந்தாலும் அது காலங்கடந்த செயலாகி விட்டது. பாவம், டிங்கர் பேசாது. அதன் மொழி சங்கீதம்தான். அப்படி இருந்தும் காப்டனுக்கு விளக்கைப் புட்டியில் தன் காலை முக்கி, வரை படத்தில் முத்திரையிட்டுத் தன் அருமைத் தோழனின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுத்து விட்டது.

பொறுமையின் விளைவால் புத்தி கெட்டுப்போன டிங்கருக்குக் கிடைத்த பரிசோ சிறைவாசம். ரகசியத்தை அறிந்து கொண்ட அந்தக் கொடியவன் ஹூக்: அந்தத் தேவதையை விளக்கு வைக்கும் கண்ணாடிக் கூண்டுக்குள் தள்ளி மூடி விட்டான். உள்ளே அகப்பட்டுக் கொண்ட பிறகுதான் டிங்கருக்குத் தான் வஞ்சிக்கப் பட்ட பயங்கரம் தெரிந்தது. விளக்குக் கூண்டின் உட்புறச் சுவரை ஆத்திரத்துடன் இடித்தது. ஆனால் அதைக் கவனிக்க அங்கு யாருமே இல்லை.





கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்!

சிலர் பற்பொடியை விரும்பினால் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



சுகந்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல் துலக்குங்கள்

...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டென்டல் கிரீமையே வாங்குகிறார்கள்.

மூன்றாவது பரிசு நாவல்



மனக் கோலம்

அத்தியாயம் 10

டி.கே.ஐர்

ஜானுவின் அலாதித் தன்மையைப் புரிந்து கொண்டவர்கள் அவளை முழுதும் அறிந்தவர்களாக மாட்டார்கள். வேடிக்கை வேடிக்கையாகப் பேசும் ஜானு, தான்தான் பெரிய அழகி என்ற கர்வம் கொள்ளும் ஜானு, வாய்த் துடுக்கு ஜானு, அலங்காரப் பிரியை ஜானு என்று பல ஜானுக்களைப் பலருக்குத் தெரியும். ஆனால் தான் எடுத்த காரியத்தை முடிப்பதில் தளராத சிரத்தையும் பிடிவாதத்தையும் கொண்டவள் என்பதை அவள் அன்று காட்டி விட்டாள்.

முந்தின இரவு அவள் அம்மாவிடம் அலமேலு அம்மாளைப் பற்றி நேர்முகமாகக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் கிடைக்கவில்லை. தனக்குத் தெரிந்த சமாசாரத்தைச் சொன்னாள். அம்மா அயர்ந்து போய் விடுவாள் என்ற நம்பிக்கையும் வீண் போயிற்று.

இரவெல்லாம் தூங்காமல் அக்காவுடன் பேசிக் கொண்டிருந்த போது, சீதா எல்லா விவரங்களையும் சொன்னாள். சந்தானத்தை அம்மா நடத்திய விதமும், அவள் பேசின பேச்சும் ஜானுவின் காதுகளில் விழுந்தபோது கோபமும் வருத்தமும் மாறி மாறி வந்தன. மூன்று சகோதரிகளுக்கும் சந்தானம் என்றால் தனி அன்பு, அபிமானம் எல்லாம் உண்டு. பருவமடைந்த பெண்களான அவர்களுடன் அவன் இது வரையில் ஒருமுறைகூட, மறைமுகமாகவும் தவறிப் பழகியதில்லை. கூடப் பிறந்த அண்ணன்கூட இந்த மாதிரிப் பாசத்துடன் இருக்க முடியாது என்று அவர்களே எண்ணும்படி நடந்து கொண்டிருக்கிறான். எந்த அவதூறும் அவனைப் பாதிக்க முடியாது என்று ஜானுவே ஆச்சரியப்பட்டாள்.

அவனைப் போய் அம்மா ஏசுவதா? அவன் நினைத்திருந்தால், என்றைக்கோ இந்த அரிசிக்காரன் தெரு ஒட்டு வீட்டை உதறிவிட்டு அழகான வீடு ஒன்றுக்குக் குடி போயிருக்கலாம். அவன் அவ்விதம் செய்யவில்லை. அவர்களுடைய குடும்பத்துடன் ஒட்டிக் கொண்டான் - எதை உத்தேசித்து? எந்த நன்மை தனக்குக் கிடைக்கும் என்று அவன் கூடவே இருக்கிறான்? மூன்று பெண்களையும் சகோதரிகளாகப் பாவித்து, குடும்பத்தில் அடிக்கடி தோன்றும் மன நோய்களுக்கு மருந்தாக நின்று அவன் அவர்களுடன் வித்தியாசம் பாராட்டாமல் இயங்குவானேன்?

இதற்கெல்லாம் ஒரு காரணம்தான் இருக்க முடியும்! அவன் மனத்தில் அந்தக் குடும்பத்தின் மீதே அசைக்க முடியாத அன்பும் பரிவும் ஊறியிருக்கின்றன. தான் இருப்பதற்கும் சாப்பிடுவதற்கும் எவ்வளவு கொடுத்தால் நியாயம் என்று பாகீரதியே ஒப்புக்

கொள்ளுவாளோ, அதற்கு இரண்டு மடங்கு அவனாகவே அளிக்கிறான்.

அவன் இந்த வாழ்க்கையில் அநாதையாகப் போயிருக்கலாம். தாயையும், தந்தையையும் இழந்து, உற்றாராலும் உறவினராலும் ஒதுக்கப்பட்டு, உதவியின்றித் தவித்த அவனுக்கு இந்தக் குடும்பம் ஒரு பெரும் படகாக வாய்த்துவிட்டது. அன்பைப் பெய்து அன்பைப் பெறுவதற்கு இதைவிடச் சிறந்த குடும்பம் இருக்க முடியாது. இவ்வாறு அவன் எண்ணியே இத்தனை நாட்களும் இருந்திருக்கிறான்.

இவ்வளவையும் அம்மா ஒரு நொடியில், அலமேலு அம்மாள் என்கிற ஒரு ஸ்திரீயின் பேச்சைக் கேட்டு நம்பித் தகர்த்து விட்டாள். ஒரு கல்மிஷம் இல்லாத மனத்தை, வாளால் அறுப்பது போல் சித்திரவதை செய்து விட்டாள். இந்த அம்மா போன வாரம் வரையில் சந்தானத்தைப் போன்ற பிள்ளையை இந்த உலகத்தில் வேறு எங்கும் காண முடியாது என்று அல்லவா சொல்லி வந்திருக்கிறாள்? இவ்வளவு சீக்கிரத்தில் இந்த அளவுக்கு அம்மாவின் மனம் மாற வேண்டுமானால் ஒன்று சந்தானமே ஏதாவது பயங்கரமான தீங்கோ, துரோகமோ இழைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், அம்மாவின் மனசு மாறும் அளவுக்கு அலமேலு அம்மாள் தூஷித்திருக்க வேண்டும்!



காலையில் வழக்கத்துக்கு வெகு நேரம் முன்பேயே எழுந்திருந்த அவள் காலைக் கடன்களை முடித்து விட்டுக் கூடத்துக்கு வந்த போது, பால்பாட்டில்களுடன் சந்தானம் வந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

''என்ன ஜானு, இன்னிக்கு ரொம்ப சீக்கிரம் எழுந்துட்டே போலிருக்கே?'' என்றான் அவன். எப்போதும் போல் உதடுகளில் அரும்பி நிற்கும் புன்னகையைப்பார்த்து ஜானு ஆச்சரியப் பட்டாள்.

''ஒரு காரியமாகத்தான்!'' என்ற அவள், ''பாட்டிலைத் தாருங்கள். சீக்கிரம் காப்பி கலந்து கொண்டு வரேன்!'' என்று கையை நீட்டினாள்.

''இந்தா!''

சமையலறையை நோக்கி நடந்த மனத்தில் சந்தானத்தின் எப்போதும் போல் உள்ள பேச்சும், புன்னகையும் எதிரொலித்து ஒளி வீசின. அம்மா நேற்றுத்தான் என்ன வெல்லாமோ இடித்துப் பேசியிருக்கிறாள்! குத்தலாக ஏசியிருக்கிறாள்! இவ்வளவு ஆனபிறகும் ஒரு மனிதனால் எப்படி இது போல் மறந்திருக்க முடிகிறது? திருப்பியும் பேசாமல், வெய்யிலையும் மழையையும் கண்டு கலங்கவே கலங்காமல் தாங்கும் பூமியைப் போல அவ்வளவு வசவுகளையும் எப்படித் தாங்கிக்கொள்ளச் சந்தானத்தால் முடிகிறது?

''இந்தாம்மா, பால்!'' என்று இயந்திரமாகப் பால் பாட்டில்களை வைத்து விட்டு அங்கேயே நின்றான். அந்தக் கணமே, சந்தானம் ஒருவேளை எல்லாவற்றையும் உள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டு வேஷம் போடுகிறானோ என்ற கேள்வி எழுந்தது. ஆனால் மறு விநாடியே தன் மனத்தில் இம்மாதிரியான கேள்வி தோன்றுவதே தவறு என்று பட்டது அவளுக்கு.

பாகீரதி தன் பெண் சமையலறையிலேயே உட்கார்ந்திருப்பதை உணராதது போல், தன் காரியத்தில் ஈடுபட்டிருந்தாள்.

அவள் மனத்தில் நிம்மதி இல்லை. உண்மை எது, பொய் எது என்று கண்டுபிடிக்க முடியாமல் அவள் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. அவளுக்குப் பழகிப் போயிருந்த சந்தானத்தை, என்ன முயன்றும் மனத்தில் வரவழைத்துப் பார்க்க முடியவில்லை. கடந்த சில நாட்களாக அலமேலு சொன்ன விஷயங்கள் உருவாக்கிய சந்தானம்தான் கண் முன் நின்று கொண்டேயிருந்தான். அன்று தனக்கு ரகுபதியைப் பிடிக்க வில்லை என்று பட்ட வர்த்தனமாகச் சொன்ன போதுகூட, அது அவனுடைய சொந்த அபிப்பிராயமாக இருக்கட்டும் என்று விட்டு விட்டாள். ஏமாற்றமும் அதன் விளைவாகச் சிறிது கோபமும் உண்டாயின. தவிர, வெறுப்பு தோன்றவில்லை. ஆனால் இப்போது? அவன் அவளுடைய நெஞ்சுக்கே பெரும் சுமையாக, பாரமாக அல்லவா ஆகிவிட்டான்?

''அம்மா! சீக்கிரம் காப்பி கலந்து தாயேன். சந்தானம் காத்துண்டிருக்கார்...!''

''என்னடீ, இவ்வளவு கரிசனம்? காத்துண்டிருக்கட்டுமே! இதென்ன ஹோட்டலா...?''


இப்போதே தர்க்கத்தில் இறங்கினால், தான் நினைத்துள்ள காரியத்தைச் சுலபமாகச் சாதித்துக் கொள்ள முடியாது என்று நினைத்த ஜானு பதில் பேசவில்லை.

ஒரு வார்த்தைக்கு இரண்டு வார்த்தைகளாக 'நறுக்'கென்று பேசும் ஜானு மௌனமாகி விட்டதைக் கண்ட பாகீரதிக்கு ஆச்சரியத்தைவிட பயமே தோன்றியது. அவளை அறியாமலே, கை அவசரப்பட்டது.

சந்தானத்தின் காப்பியையும் தன் காப்பியையும் எடுத்துக்கொண்டு ஜானு சென்றாள்.

பிரித்திருந்த 'ஹிந்து'வை மடித்து விட்டுச் சந்தானம் நிமிர்ந்தான். அவள் காப்பியை நீட்டிய போது சிரித்துக் கொண்டே வாங்கினான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்? நானே இன்னொருத்தருக்குக் காப்பியைக் கொடுக்கிறேனென்று? சில சமயங்களிலே என் மனசுகூட இரங்கி விடுகிறது!'' என்றாள் ஜானு.



''இரக்கமா ? என் மேலா? ஏன்?'' காப்பியைப் பருக ஆரம்பித்தவன், நிறுத்திவிட்டுக் கேட்டான்.

''அம்மா, நேற்று உங்களை என்னென்னவோ சொல்லுளாமே?''

''அப்படியா?'' இப்போது காப்பியைக் குடித்தான் அவன்.

ஜானுவுக்குக் கோபம் வந்தது.

''அவ்வளவு திட்டுக்களையும் நீங்க மறந்துவிட்டீர்களா?''

''அது எனக்குத் திட்டுன்னு தோணியிருந்தாத்தானே மறப்பதற்கோ, மனசிலே ஊற வைக்கிறதுக்கோ!''

''அப்போ?''

''அம்மா தன் அபிப்பிராயத்தைத் தன் ரீதியிலேயே சொன்னுள். அவ்வளவுதான்!''

ஜானுவுக்கு என்ன சொல்லுவது என்றே புரியவில்லை. இந்த மனுஷன் உண்மையிலேயே எல்லாம் துறந்த ஞானியா? எதுவுமே இவனை ஒட்டாதா?

இருந்தாலும் அவன் கேட்டான் : ''எனக்கு ஒரு சந்தேகம்.... உங்களுக்குச் சூடு சொரணையே இல்லியோன்னு !''

''எனக்குச் சூடும் சொரணையும் இருக்கா இல்லியான்னு உனக்குத் தெரியணுமானு, அதற்கேற்ற சந்தர்ப்பம் உண்டாகணும். உன் அம்மா ஏதோ சொன்னுள் என்கிறத்துக்காக நான் குதிக்கணுமா? உங்க அம்மா உன்னைச் சொன்னுல் அது ஒண்ணையே மனசிலே வைச்சிண்டிருப்பியா?''

''நானும் நீங்களும் ஒண்ணு....? என்னை அவள் பெற்றிருக்கிருள்....!''

''ஆனுல் பழக்கம்? நம்ம ரெண்டு பேரையும் இத்தனை நாளா ஒரே மாதிரிதானே நடத்தியிருக்கிருள்? உன் கலத்தில் தயிரும், என் கலத்தில் மோரும் போட்டதில்லையே அவள்....? ஜானு, உன் அம்மா மீது எனக்குள்ள பக்தியோ, அன்போ, அபிமானமோ, கேவலம் அவள் தன் மனேவியாகூலத்தில் ஏதோ சொல்லிவிட்டாள் என்ற காரணத்தால் சிதைந்துவிடாது....!''

என்றுமே எளிதில் உணர்ச்சிவசமாகிவிடாத ஜானுவின் கண்களில்கூட நீர் துளிர்த்தது.

''அப்போ உங்களுக்கு அம்மா மேலே கோபமே கிடையாதா ?''

''இல்லை !''

''அப்பாடா!'' என்று பெருமூச்செறிந்த அவள், ''சீதாவுக்கு இந்தக் கலியாணம் நிச்சயமாகாமலிருக்க என்ன வழி ?'' என்று கேட்டான்.

''எனக்கு என்ன தெரியும்?''

'' ஏன், இப்படித் தொட்டும் தொடாமலும் பேசுகிறீர்கள்.....''

''இல்லை ஜானு.... உன் அம்மாவுக்கு ஏன் தெரியுமா என் மேலே கோபம்? அவளேதான் ரகுபதியைப் போய்ப் பார்த்து எல்லாம் தெரிஞ்சுண்டு வரச் சொன்னுள். ஆனுல் அவ மனசிலே இருக்கிற ரகுபதிக்கும் நான் எடை போட்டுச் சொன்ன ரகுபதிக்கும் ரொம்ப வித்தியாசம் இருந்தது..''

''அதுவுமில்லாமல், இந்த அலமேலு மாமி வந்து கலகப் மூட்டியிருக்கிருள். அது சரி. உங்களுக்கு முன்னேயே இந்த ரகுபதியைத் தெரியுமா? அவன் ஏதோ சொல்லித்தான் இந்த மாமி ஆவேஷிக்கிருள்னு நெனைக்கிறேன். ஏன்னு கேட்டா, இதுக்கு முன்னுலே உங்களைப் பத்தித் தாழ்வா பேசினதில்லே......!''

''சரி, சரி, விடு... சித்ராவின் சித்தி விஷயத்தைப் பற்றி நீ சொன்னியே, அது உண்மைதானு?''

''ஏன், சந்தேகப்படுகிறீர்கள்? சித்ராவின் அம்மாவேதான் சொன்னுள்! இருநூறு ரூபாய் கேட்டாளாம்....!''

''பின்னை யாராம்....?''

''அது தெரியல்லே! ஒருவேளை இந்த ரகுபதியேதானே என்னவோ ! இன்னிக்கே அதையும் கேட்டு விடுகிறேன்....!''

''வேண்டாம், வேண்டாம்... எல்லாம் நான் தூண்டியும் தூபம் போட்டும்தான் நீ இந்த நடவடிக்கைகளை எடுக்கிறாய்னு அம்மா இரைவாள்!''

''அவ என்ன வேணுமானுலும் இரையட்டும். சீதாவே ரகுபதியைத்தான் கலியாணம் பண்ணிக்குவேன்னு சொன்னுக்கூட அலமேலு அம்மாளின் குணம் தெரிஞ்சப்புறம் நான் பேசாமலிருக்க மாட்டேன். அவனிடமே நேரிலே கூடக் கேட்டுவிடுவேன். எனக்கு என்ன பயம்?''

''உஸ்....சும்மா இரு.''

''நீங்க ஏன் பயப்படுகிறீர்கள் ? ஆமாம்! ரகுபதி எங்கே இருக்கிருர்...?''

''எதற்கு?''

''தெரிஞ்சுக்கப்படாதா...?''

''உன் அம்மா கிட்ட கேளு. விலாசம் இருக்கு....''

''அவள் தரமாட்டாள். நீங்கள் சொல்லுங்கள்''

''ஊஹூம்! என் மண்டையை எல்லாரும் சேர்ந்து உருட்டினது போதும்.''

''ஆல் ரைட்.... போன் டைரக்டரியைப் பார்த்துக்கிறேன். 'ஷா அண்டு ஷா' கம்பெனியின் பிராஞ்சு மானேஜர் தானே...?''

ஜானு காலித் தம்ளர்களுடன் சமையலறைத் திசையில் சென்றுள். சீதா, காப்பி குடித்தவள் எதிரே வந்தாள்.


ASP/LT-2D/67 TAM
யார் சொன்னது லக்மே டால்கம் விலையுயர்ந்தது என்று?
தூவித் தூவி மகிழுங்கள் மேனிமுழுதும்!
தூவித் தூவி மகிழுங்கள் ஆசை தீர. மகரந்த மாரி பொழியட்டும் மெய்குளிர. நாளெல்லாம் நேசக் கதை சொல்லும் நறுமணம். விரும்பிய மாத்திரத்தில் கைக் கெட்டும் விலைநயம். லக்மே டால்கம். உரிமை கொள்வீர்கள் உடலார. உபயோகித்து மகிழ்ச்சிச் சுழலிலே திளைக்க 'லக்மே கரமான' நறுமணவகைகள் நான்கு: லேவெண்டர், நிர்வாண், வெட்டிவேர், சந்தனம்.
Lakmé TALC
Lakmé
லக்மே டால்கம்

"ஞானு, உன்னை அம்மா அப்போதே கூப்பிட்டாள்!" என்றாள் சீதா.

"என்ன அம்மா கூப்பிட்டே?" என்று கேட்டுக்கொண்டே அவள் திடீர் என்று நுழைந்ததும் சமையலறையில் உலை நீர் வைத்துக்கொண்டிருந்த பாகீரதிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஆமாம், இத்தனை நேரமா எங்கே இருந்தே?"

"ஏன், சந்தானம் அறையிலே தான்..."

"அங்கே உனக்கு என்ன வேலை? காப்பி கொடுத்த கையோட திரும்ப வேண்டியதுதானே?"

"இத்தனை வருஷமா இந்தக் கேள்வியைக் கேட்காமல் இன்னிக்குக் கேட்கிறியே ஏன்?"

"இன்னமே அவன் அறைக்கு யாரும் போகப்படாது. ஏதோ பழகின தோஷத்துக்கு நானும் ஒண்ணும் சொல்ல மாட்டேன். ஆனா கொஞ்சம் கொஞ்சமா அறுத்துக்கொள்ளறதுன்னு நான் சங்கற்பிச்சுண்டாச்சு."

"அப்படியா?" — ஞானுவின் குரலில் அலட்சியம் வீசியது.

"ஆமாம்."

"அதாவது இத்தனை நாளா நீ கஷ்டப்பட்ட போதும் நாங்கள் தீபாவளிப் புடவை இல்லாமல் நின்னபோதும் அங்கே இங்கேன்னு அனுப்ப வேண்டிய அவசியம் இருந்தபோதும், அவர் உனக்கு ரொம்பப் பிடிச்சுப் போயிருந்தார்.... இப்போ திடீர்னு வைரியாப் போயிட்டார் இல்லியா?"

"நீ என்னைக் கேள்வி கேட்காதே ஞானு! நீ நான் பெத்த பெண் என்கிறதை மறந்துடாதே!"

"எல்லாம் தெரியும் அம்மா. நீ என்னைப் பெற்றவள் என்கிறதாலே உனக்கு விவேகமும் புத்தியும் அதிகமாயிருக்குன்னு நெனைக்காதே... அந்த அறையிலே இருக்காரே அவர் பத்தரை மாத்துத் தங்கம். தெரிஞ்சுக்கோ. நீ நேத்து அவ்வளவு குத்தலாப் பேசினதுக்கும் அவர் இன்னிக்குச் சகஜமாத்தான் இருக்கார். ஏதோ உன் மனோவியாகூலத்திலே ரெண்டு வார்த்தை உரிமையோடு பேசிவிட்டேன்னுதான் அவர் சொல்லிண்டிருக்கார்..."

அவள் பேசும்போது நடுவிலே வந்த கமலா, ஞானு முடித்ததும், "அம்மா, காப்பி...." என்றாள்.

"நீயே கலந்துக்கோ!" என்ற பாகீரதி ஞானு பக்கம் திரும்பி, "எனக்கு இனிமே அவனைப் பற்றிப் புதிசாத் தெரிய வேண்டாம். அலமேலு அம்மாள் சொன்னப்புறம்தானே இவன் எப்படிப் பட்டவன்னு தெரியறது?" என்றாள்.

சமாதானம் வேண்டாமா?



"குழந்தை வளர்ப்பு" என்ற புத்தகத்தின் மூலம் (இதனைத் தமிழில் டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் மொழிபெயர்த்திருக்கிறார்) உலகப் புகழ் பெற்றிருக்கும் டாக்டர் பெஞ்சமின் ஸ்பாக்குக்கு ஒரே குறை - தாம் குழந்தைகளைப் பற்றி எதை எழுதினாலும் அதை உடனே வெளியிடும் அமெரிக்கப் பத்திரிகைகள், தம் வாழ்க்கை இலட்சியமான உலக அமைதியைப் பற்றி எவ்வளவு நன்றாக எழுதினாலும் திருப்பி அனுப்பி விடுகின்றன - என்பதுதான்! சமீபத்தில் அவர் உலக சமாதானத்தைப் பற்றி ஒரு கட்டுரை வரைந்து "ஹார்ப்பர்ஸ்", "லுக்", "நியூயார்க் டைம்ஸ்" போன்ற பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தார். எல்லாப் பத்திரிகைகளும் அதைத் திருப்பி அனுப்பி விட்டன. ஆனால் இதே பத்திரிகைகள் அவர் எழுதும் "குழந்தை வளர்ப்பு" கட்டுரை ஒவ்வொன்றுக்கும் முப்பதினாயிரம் ரூபாய் கொடுக்கின்றன!

ஆதாரம்: "ஸாட்டர்டே ஈவினிங் போஸ்ட்"

"எப்படிப் பட்டவராம்!" என்று ஞானு சிரித்தாள்.

"அதை உன்கிட்டே நான் சொல்லுவானேன்?"

"அலமேலு மாமி ஒரு பெரிய ஃப்ராடு.... உன் மண்டையிலே நன்னா மிளகாய் அரைக்கப் போகிறாள். பார்த்துக்கொண்டே இரு..."

"அப்போ நான் உன்னையும் அவனையும் உதவிக்குக் கூப்பிடறேன். ம், கமலா, இன்னமே வாசல் பக்கத்து அறையிலே கால் வச்சியோ, ஒடிச்சுப் புடுவேன்.... ஜாக்கிரதை!"


காப்பி தம்ளரை 'லொட்' என்று வைத்துவிட்டு எழுந்த கமலா, புடவைத் தலைப்பால் வாயைத் துடைத்துக்கொண்டே அம்மாவைப் பார்த்து முறைத்தாள். பிறகு ஞானுவை நோக்கி, "ஏன் ஞானு? அம்மா என்ன உளறுகிறாள்?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியல்லே. இன்னமே யாரும் சந்தானத்துடன் பேசப்படாதாம்..."

"அம்மா இப்படி ஓர் ஆர்டர் போட்டிருக்கிறான்னு தெரிஞ்சா சந்தானம் இன்னிக்கே அறையைக் காலி பண்ணிண்டு போயிடுவார்..."

"போனால் போகட்டும்..." என்றாள் அம்மா வெறுப்போடு. **(தொடரும்)**

நவீன வாழ்க்கைக்கு ஏற்றது நெஸ்கா:.பே





நெஸ்காஃபே மட்டும்தான் அலாதி சுவையின்பத்தை அளிக்கவல்லது



தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னிந்திய ப்ளான்டேஷன் பீபெரி காபிக்கொட்டையைப் பதமாக வறுத்து அதன் இயல்பான மணம் கெடாமல் தயாரிக்கப்பட்டதுதான் நெஸ்கா:.பே — உடனே கரையக்கூடிய நூற்றுக்கு நூறு அசல் காபி! ஒரே சமயத்தில் தனித்தனியாக 'ஸ்ட்ராங்'காகவோ 'லைட்'டாகவோ காபியைத் தயாரிக்கமுடிவதால் நெஸ்கா:.பே மிகவும் சிக்கனமானதும்கூட!

NESTLÉ
ஒரு நெஸ்லே தயாரிப்பு

5 வினாடிகளில் தயார்!
ஒரு முழு டீஸ்பூன் நெஸ்காஃபேயை கோப்பையில் போட்டு வெந்நீரை ஊற்றி ருசிக்கேற்றபடி சர்க்கரையும் பாலும் சேர்க்க வேண்டியதுதான். காபி தயார்!

NESCAFÉ*

IS: 2791
ISI

நெஸ்கா:.பே— தனிச்சிறப்புள்ள தரமான காபி

*நெஸ்கா:.பே என்பது நெஸ்லேயின் இன்ஸ்டன்ட் காபியைக் குறிக்கும் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்

JWT-NCE-5144 A

வெள்ளிவிழா இரண்டாவது பரிசு நாவல்



கல்லுக்குள் ஈரம்

ர. சு. நல்லபெருமாள்

அத்தியாயம் 22

மறக்க முடியுமா?

தீக்ஷிதரைக் கோழை என்று ரங்கமணி குறிப்பிட்டதும், தீக்ஷிதர் ''கோழையா? கொலையை வெறுப்பது கோழைத்தனமா? வண்டிக்குப் பக்கத்தில் பிளாட்பாரத்தில் ஆஷ் துரை சுருண்டு விழுந்து துடித்ததை நீ பார்த்திருந்தால் தெரியும். எனக்கு அந்தச் சமயத்தில் வாஞ்சிமீது வெறுப்புக்கூடத் தோன்றியது. ஆனால் அதே சமயம் அவன் தற்கொலை செய்து கொண்டதை அறிந்தபோதுதான் அவன்மீது எனக்கு இரக்கம் தோன்றியது'' என்றார்.

''நான் மட்டும் வாஞ்சியாயிருந்திருந்தால், அந்த வெள்ளைக்காரனின் மனைவியையும் சுட்டுத் தள்ளியிருப்பேன்'' என்றான் ரங்கமணி.

''நல்ல வேளை. வாஞ்சிநாதனுக்குள் ரங்கமணி புகுந்து விடவில்லை.''

''எனக்கு இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பம் எப்போது வாய்க்கும் என்று தெரியவில்லை...'' என்று கூறிப் பற்களைக் கடித்தான் ரங்கமணி.

''அப்படி ஒரு சந்தர்ப்பம் வாய்க்கவே வேண்டாம். கொலைகாரன் என்ற பட்டம் உனக்கு வேண்டாமப்பா!'' என்றார் தீட்சிதர்.

''வாஞ்சிக்கு இருந்த கடமையைவிட எனக்குத்தான் கடமை அதிகம். என் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய நான் இன்னும் ஒன்றும் செய்யவில்லையே, தீட்சிதர்வாள்!'' என்றான் மிகுந்த மன வேதனையுடன்.

'' கொலை செய்துதானா சாமிநாதனின் ஆத்மாவைச் சாந்திப்படுத்த வேண்டும்?''

''பழிக்குப் பழி இரத்தத்துக்கு இரத்தம் வாங்கியே தீர வேண்டும்'' என்றான் ரங்கமணி ஆவேசத்துடன். தீட்சிதர் நீண்ட பெருமூச்சு விட்டார்.

''சர்தாரிடம் சேர்ந்தபிறகு உன்னுடைய வெறி அதிகமாகியிருக்கிறது!'' என்றார் வெறுப்புடன், முகத்தைச் சுளித்துக்கொண்டு.

''எதையோ சொல்ல வந்து வேறொரு பெரிய கதையைச் சொல்லி முடித்துவிட்டீர்களே! சர்தாரைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே! மணியாச்சி சம்பவத்துக்கும் சர்தார் சொக்கலிங்கம்பிள்ளைக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?'' என்று கேட்டான் ரங்கமணி.

''உண்டு, நிறைய உண்டு'' என்று கூறிக்கொண்டு ரங்கமணியின் காதில் இரகசியமாக ஏதோ கூறினார் தீட்சிதர். அதைக் கேட்டு வியப்பினால் ரங்கமணியின் புருவங்கள் உயர்ந்தன.

''அப்படியா....?'' என்று வாயைப் பிளந்தான் ரங்கமணி.

''உம்...'' என்று தலையை ஆட்டிவிட்டுச் சன்னலுக்கு வெளியே தலையை நீட்டி வெற்றிலையைத் துப்பிவிட்டுப் பெஞ்சியில் படுத்தார் தீட்சிதர். ரங்கமணி எதிர்ப் பெஞ்சில் படுத்தான்.

''அப்படியானால் திரிவேணியும், அத்தையும்....?'' என்று சந்தேகத்துடன் கேட்டான் ரங்கமணி.

''சர்தாருடைய பெண்ணும் தங்கையும் தாம். அதைப் பற்றி நீ ஏன் சந்தேகம் கொள்கிறாய் ?'' என்று கூறிவிட்டுக் கண்களை மூடித் தூங்க முயன்றார் தீட்சிதர்.

இரவு வெகுநேரமாகி விட்டது. தீட்சிதரின் குறட்டை ரயில் வண்டியின் ஓட்டத்துக்குத் தகுந்தபடி தாளம் தவறாமல் ஒலித்தது. ரங்கமணி மட்டும் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான். சர்தார் சொக்க

லிங்கம்பிள்ளையைப் பற்றித் திட்சிதர் கூறிய இரகசியத்தை நினைவிலிருத்தி ஜீரணிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தான்.

ஃ ஃ ஃ

எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கியபோது திட்சிதர் கேட்டார்: ''எங்கே தங்கப் போகிறாய்? என்னோடு வருகிறாயா? காங்கிரஸ் ஆபீஸில்தான் நான் தங்குவேன். வாயேன்.''

''எனக்கு நிறைய வேலை இருக்கிறது. நீங்கள் போங்கள். சாயங்காலம் சந்திக்கலாம்'' என்றான் ரங்கமணி.

''எங்கே சந்திக்கலாம்? காங்கிரஸ் ஆபீசுக்கு வருகிறாயா ?''

''நீங்கள் ஹைகோர்ட் பக்கம் வாருங்கள். ஐந்து மணிக்கு அங்கு சந்திக்கலாம்.''

''சரி'' என்று தலையை ஆட்டிவிட்டுத் திட்சிதர் கூட்டத்தில் புகுந்து மறைந்தார். அவர் மறைந்ததும் ரங்கமணி சிறிது நேரம் பிளாட்பாரத்தில் நின்றபடி சுற்றுமுற்றும் பார்த்தான். புத்தகக் கடைப்பக்கம் ஒரு மீசைக்கார இளைஞன் நின்று கொண்டு அவனைக் கவனிப்பது தெரிந்தது. ஒருகணம் அந்த இளைஞனை உற்றுப் பார்த்துவிட்டுத் தன்னுடைய தோல் பெட்டியைத் தூக்கிக் கொண்டு புத்தகக் கடைப் பக்கம் சென்றான் ரங்கமணி. கடையில் புத்தகம் தேடுவது போல் சிறிது நேரம் நின்றான். பக்கத்தில் மீசைக்கார இளைஞன் அன்றையப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான். ஒருகணம் இருவர் பார்வையும் சந்தித்தன.

''பட்டினத்தார் புலம்பல் இருக்கிறதா ?'' என்று கடையில் விசாரித்தான் ரங்கமணி.

கடைக்காரர் ஏதோ ஓர் அதிசயப் பிறவியைப் பார்ப்பதுபோல் ரங்கமணியை உற்றுப் பார்த்தார்.

''பழைய புத்தகக் கடையில் போய்த் தேடு, போ....'' என்று எரிந்து விழுந்தார் கடைக்காரர். இதைக் கவனித்துக் கொண்டிருந்த மீசைக்கார இளைஞன், ''மூர்மார்க்கெட்டில் தேடு'' என்றான்.

ரங்கமணி பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஸ்டேஷனுக்கு வெளியே வந்தான். ஒருமுறை திரும்பிப் பார்த்தான். அந்த மீசைக்கார இளைஞன் அவனைத் தொடர்ந்து வருவது தெரிந்தது. ரங்கமணியின் பக்கத்தில் வந்ததும் அவன் காதில் விழுமாறு, ''என்னைத் தொடர்ந்து வா'' என்று கூறிவிட்டு நடந்தான் மீசைக்காரன். ரங்கமணி அவனைத் தொடர்ந்தான்.

பிறகு ஒரு வாடகைக் காரை நிறுத்தி அந்த இளைஞன் ஏறினான். அவனைத் தொடர்ந்து ரங்கமணியும் காரில் ஏறிக் கொண்டான். ''டவுனுக்குப் போ'' என்று காரோட்டியைப் பார்த்துக் கட்டளையிட்டான் இளைஞன். கார் சிறிது நேரத்தில் ஹைகோர்ட் வாசலை நெருங்கியது. காரை அங்கேயே நிறுத்தி இறங்கிக் கொண்டு லிங்கிச் செட்டித் தெருவுக்குள் நுழைந்தான் இளைஞன். ரங்கமணி ஒன்றும் பேசாமல் அவனைத் தொடர்ந்து நடந்தான். லிங்கிச் செட்டித் தெருவைக் கடந்து மண்ணடிக்கு வந்து, ஒரு சந்துக்குள் புகுந்து, ஒரு வீட்டின் வாசலில் வந்து நின்றார்கள்.

கதவைத் தட்டியதும் வீட்டின் சன்னல் கதவு முதலில் திறந்தது. உள்ளேயிருந்து ஒருவன் எட்டிப் பார்த்துவிட்டுப் பிறகு கதவைத் திறந்தான். இருவரும் உள்ளே நுழைந்தார்கள். வீட்டுக்குள் நுழைந்த பிறகுதான் மீசைக்கார இளைஞன் பேசினான்.

''டில்லிக்கு டிக்கெட் ரிசர்வ் செய்துவிட்டேன். நாளைக்குப் புறப்படலாம். சர்தார் எல்லா விவரமும் எழுதியிருந்தார்'' என்றான்.

ரங்கமணி ஒன்றும் பேசவில்லை. அந்த இளைஞனையே பார்த்துக் கொண்டிருந்தான். ''சர்தார் வேறு ஏதாவது கடிதம் அனுப்பி இருக்கிறாரா?'' என்று இளைஞன் கேட்டான்.

''உங்கள் பெயர் என்ன?'' என்று ரங்கமணி கேட்டான்.

''மேகராஜன்.''

ரங்கமணி தோல் பெட்டியைத் திறந்து ஒரு கடிதத்தை எடுத்து மேகராஜனிடம் கொடுத்தான். அவன் அதை வாசித்துவிட்டு உடனே ஒரு தீக்குச்சியில் நெருப்பைப் பற்ற வைத்து அதை எரித்துச் சாம்பலாக்கினான்.





''வேறு ஏதாவது விசேஷம் உண்டா ?'' என்று ரங்கமணி கேட்டான்.

''ஒன்றுமில்லை. நீங்கள் இங்கேயே தங்கலாம். நாளை நானே உங்களை ரயில் ஏற்றி விடுகிறேன். அது வரை நீங்கள் களைப்பாறலாம். தீட்சிதர் எங்கே தங்குகிறார்....?''

''காங்கிரஸ் ஆபீஸில்.''

''நீங்கள் இந்த இடத்திலிருப்பது அவருக்குத் தெரிய வேண்டாம்'' என்றான் மேகராஜன். பிறகு, ''குளித்துச் சாப்பிட்டு விட்டு இளைப்பாறுங்கள். சாயந்திரம் மூன்று மணிக்கு வருகிறேன். இங்குள்ளவர்கள் உங்களுக்கு வேண்டியதையெல்லாம் கவனித்துக் கொள்வார்கள்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டான்.

ரங்கமணிக்குப் பெருமை தாங்கவில்லை. தமிழ்நாடு முழுதும் பரவியிருக்கும் பாரத மாதா சங்கத்தின் சார்பாக ஓர் இரகசிய காரியத்துக்காகத் தில்லிக்குப் போகிறோம் என்பதை எண்ணிய போது, பெருமையால் பூரித்துப் போனான். இதற்குமுன் ஒரு முறை தில்லிக்குப் போயிருக்கிறான். அப்போது ஊர் சுற்றிப் பார்க்கச் சென்றான். இப்போது ஒரு திட்டத்தோடு செல்கிறான். எவ்வளவு பெரிய பொறுப்பு தன் தலையில் விழுந்திருக்கிறது என்பதை நினைத்த போது, அவன் உடல் சிலிர்த்தது.

இந்தச் சங்கத்தில்தான் எத்தனை பேர்கள் துணிச்சலுடன் பணியாற்றுகிறார்கள்! சென்னை நகர் கிளைக்கு மேகராஜன்தான் தலைவன். தலைவனுக்கு ஏற்ற மிடுக்கும், கம்பீரமும் ஆணையிடும் தோரணையும் உணர்ச்சிகளை வெளிக் காட்டாத அழுத்தமும் எவ்வளவு பொருத்தமாக அவனிடம் அமைந்திருக்கின்றன. ரங்கமணி வியப்பில் மூழ்கி இருந்தான்.

அவனுடைய பயணத்தின் முதல் கட்டமே பிரமாத வெற்றியடைந்து விட்டது. எழும்பூர் ரயில்வே பிளாட்பாரம் புத்தகக் கடையில் ரங்கமணி நடத்திய நாடகம் ஏற்கனவே திட்டமிட்டபடி வெற்றியுடன் முடிந்து விட்டது. இது மாதிரி தில்லியிலும் வெற்றியுடன் நடத்திவிட்டு ஊர் திரும்ப வேண்டும்.

ரயிலில் வந்த களைப்பினால் பகலில் நன்றாகத் தூங்கினான் ரங்கமணி. மாலையில் மூன்றுமணிக்கு மேகராஜன் வந்து சேர்ந்தான். தில்லியில் ரங்கமணி செய்ய வேண்டிய காரியம், சந்திக்க வேண்டிய நபர்கள், அறிமுகமாக வேண்டிய முறை எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான். அனைத்தையும் கவனமாகக் கேட்டுக் கொண்டான் ரங்கமணி.

மாலை ஐந்து மணிக்கு ஹைகோர்ட் வாசலுக்கு ரங்கமணி வந்த போது, தீட்சிதர் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

''எங்கே தங்கியிருக்கிறாய்?'' என்று கேட்டார் தீட்சிதர்.

''தம்புச் செட்டியில்!'' என்றான் ரங்கமணி. இவ்வளவு பச்சையாகப் புளுகுகிறோமே என்று தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான் அவன்.

''தம்புச்செட்டியின் எங்கே ?'' என்று தீட்சிதர் துளைத்துக் கேட்டார். ரங்கமணி திகைத்தான்.

''தீட்சிதர்வாள்! என்னை அநாவசியமாகப் பொய் சொல்ல வைக்கும் பாவத்துக்கு நீங்கள் ஆளாக வேண்டாம். காந்தியாரின் தத்துவப்படி, பொய் சொல்வதும் குற்றம்; பொய் சொல்லத் தூண்டுவதும் குற்றம்'' என்றான் ரங்கமணி.

''அதுவும் சரிதான் !'' என்று தீட்சிதர் சிரித்தார்.

இருவரும் கடற்கரையை நோக்கி நடந்தார்கள். சைனபஜாரிலிருந்து கடற்கரை வீதிக்குத் திரும்பும் ஹைகோர்ட் முனையை நெருங்கிய போது ரங்கமணி நின்றான்.

''இந்த இடத்தில் நடந்த சம்பவத்துக்கு நான் இன்னும் பழி வாங்கவில்லையே !'' என்றான் ரங்கமணி.

''நடந்ததை மறந்துவிடு !'' என்றார் தீட்சிதர்.

''மறக்கக்கூடிய சம்பவமா அது ?'' என்று கூறிக் கொண்டே பற்களை நறநறவென்று கடித்தான் ரங்கமணி.

ரங்கமணியின் நினைவு, முன்பு நடந்த அந்தச் சம்பவத்தை வளைய வளையச் சுற்றி வந்தது. அது நடந்து கிட்டத்தட்ட பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. காலத்தினால் அந்த நினைவை மங்க வைக்க முடியவில்லை.

அப்போது ரங்கமணிக்குப் பத்து வயது. அவனுடைய தந்தை சாமிநாதன், அவனையும் அழைத்துக் கொண்டு தூத்துக்குடிக்குச் சிதம்பரம்பிள்ளையின் வீட்டுக்குப் போயிருந்தார். அப்போதுதான் இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது.

மகாத்மா காந்தி, சட்ட மறுப்பு இயக்கத்துக்கு அடிகோலிவிட்டார். உலகத்தின் கவனம் முழுவதுமே சபர்மதி ஆசிரமத்தை நோக்கி இருந்தது. சட்டத்தை மீறி உப்பு எடுக்க, சபர்மதியிலிருந்து காந்தியடிகள் புறப்பட்டுக் கிட்டத்தட்ட இருநூற்று நாற்பது மைல் நடந்து, தண்டிக் கடற்கரைக்குச் சென்று விட்டார்! அந்தப் புனித யாத்திரையை உலகம் வியப்புடன் கவனித்தது. தண்டி கடற்கரையில் காந்தியடிகள் உப்புக் காய்ச்சிச் சட்டத்தை மீறிய செய்தியைச் சிதம்பரம் பிள்ளை அறிந்தபோது, தம் முகத்தைச் சுளித்தார்.


''இதெல்லாம் ஓர் இயக்கமா?'' என்றார்.

''சட்டத்தைப் பகிரங்கமாக மீற முடிவு செய்துவிட்டாரே, அந்த அளவுக்கு மகாத்மாவின் செயலில் கொஞ்சம் புரட்சி இருக்கிறதே !'' என்றார் சாமிநாதன்.

''இதற்கெல்லாம் வெள்ளைக்காரன் பயந்து விடுவானா? அவன் பனங்காட்டு நரி. கடல் நீரை முழுதும் கொதிக்க வைத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.''

''பம்பாயில் வெளிவருகிறதே, டைம்ஸ்—ஆப்—இந்தியா பத்திரிகை; தண்டி யாத்திரையில் வெயிலுக்காகக் காந்தி, தம் தலையில் களி மண்ணைப் பூசிக் கொண்டு சென்றதை, கேலி செய்திருக்கிறது.''

''ஏன் எழுத மாட்டான்? இவர் இப்படி இந்த மாதிரி அகிம்சையையும், சாத்வீகப் போராட்டத்தையும் கட்டிக் கொண்டு



> ''உங்களிடம் இருப்பது பாதி. உங்களிடம் இருப்பதாகப் பிறர் நினைத்துக் கொண்டிருப்பது பாதி. இது இரண்டும் சேர்ந்ததுதான் செக்ஸ் — அப்பீல்.''
>
> — **சோபியா லாரேன்**
>
> ஆதாரம் : 'மௌன ஒலி'
> தகவல் : பாலி

கிறிற வரைக்கும் இதுவும் எழுதுவான், இன்னமும் எழுதுவான்'' என்று அழுத்துக் கொண்டார் சிதம்பரம் பிள்ளை.

''தண்டி யாத்திரை, நாட்டில் உணர்ச்சியைக் கிளப்பி விட்டிருக்கிறதே. எத்தனை இடங்களில் மக்கள் பொங்கி எழுந்திருக்கிறார்கள் ! இப்படி இந்தியா முழுவதுமே சட்டத்தை மீறி விட்டால், வெள்ளைக்காரன் திணறிவிட மாட்டானா ?''

'' ஏது, நீ பேசுவதைப் பார்த்தால், மகாத்மாவோடு நீயும் சேர்ந்துவிட்ட மாதிரி அல்லவா தெரிகிறது ?''

''காந்தியைப் பூரணமாக மறுக்க முடியவில்லையே. தண்டி யாத்திரைக்கும் சக்தி இருக்கிறது. இல்லையென்றால், மக்கள் இப்படிக் கிளர்ந்தெழுவார்களா ?''

''இந்த முறையில் போராடினால் சுதந்திரத்தை நம் வாழ்நாளில் காண முடியாது. இந்தப் பயல் ரங்கமணி காலத்தில்கூட காணுவானோ, மாட்டானோ?''

''ஏன்? நான் கட்டாயம் சுதந்திரம் அடைந்து விடுவேன் '' என்று ரங்கமணி உற்சாகத்துடன் குறுக்கிட்டுப் பேசினான்.

''சபாஷ்டா, தம்பி! இந்த நம்பிக்கை இருந்தால்கூடப் போதும்; உணர்ச்சி வந்து விடும்'' என்று கூறிக் கொண்டே ரங்கமணியை இழுத்து மடி மீது வைத்துக் கொண்டார் சிதம்பரம்பிள்ளை.

''அடுத்த வாரம் பட்டணத்துக்குப் போகிறேன் '' என்றார் சாமிநாதன்.

''என்ன விஷயம்?'' — சிதம்பரம் பிள்ளை கேட்டார்.

''வேதாரண்யத்தில் உப்பு எடுக்க ராஜகோபாலாச்சாரியார் புறப்படப் போகிறார். அவரைத் திருச்சியில் பார்த்து விட்டுப் பட்டணத்துக்குப் போகலாம் என்றிருக்கிறேன். பட்டணத்தில் பிரும்மாண்டமான ஊர்வலத்துக்கும் பொதுக்கூட்டத்துக்கும் ஏற்பாடு நடக்கிறதாம்'' என்றார் சாமிநாதன்.

'' அநேகமாக நானும் பட்டணம் வந்தாலும் வருவேன்.''

சாமிநாதன் பட்டணத்துக்குப் புறப்பட்டபோது ரங்கமணியும் புறப்பட்டு விட்டான். அப்போது தீக்ஷிதரும்கூடச் சென்றார். வேதாரண்ய யாத்திரையை ராஜாஜி தொடங்குவதைப் பார்த்து விட்டு அன்று மாலையே சாமிநாதனும் தீக்ஷிதரும் சென்னைக்குப் புறப்பட்டு விட்டார்கள். சென்னைக்குப் போய்ச் சேரும் வரை ரங்கமணிக்கு அந்த ஒல்லியான உருவமும், கறுப்புக் கண்ணாடியும்தாம் நினைவில் சுழன்று கொண்டேயிருந்தன.

சென்னை நகரம் அப்போது கொந்தளித்துக் கொண்டிருந்தது. காந்தியடிகளின் சட்ட மறுப்பு, முதலில் வெள்ளைக்காரர்களுக்கு வேடிக்கையாகத்தான் இருந்தது. உப்பைக் காய்ச்சி அந்தக் கிழவர் எதைச் சாதித்து விடப் போகிறார் என்றுதான் நினைத்தார்கள். செயல் அற்பமானாலும், அதன் உள்ளடங்கிய சக்தி, மாபெரும் அசுர சக்தியாகக் கிளம்பி, பாரத நாடு முழுவதையுமே கொந்தளிக்கச் செய்து விட்டது ! வெள்ளைக்கார அரசாங்கம் கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டது.

பிரிட்டிஷ் ஆட்சியின் மிருகத்தனமான அடக்குமுறைகளைக் கண்டிப்பதற்காகச் சென்னையில் தடை உத்தரவையும் மீறி ஊர்வலம் நடத்த ஏற்பாடாகியிருந்தது. ஊர்வலத்துக்குத் தானும் வருவதாகக் கூறிப் பிடிவாதம் பிடித்தான் ரங்கமணி. அப்போது சிதம்பரம்பிள்ளை சென்னைக்கு வந்திருந்தார். ரங்கமணியை அவர் பொறுப்பில் விட்டு விட்டு, சாமிநாதனும் தீக்ஷிதரும் ஊர்வலத்துக்குச் சென்று விட்டார்கள். ரங்கமணி அமைதியின்றித் தவித்தான். ஊர்வலத்தைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

காலையில் ஒன்பது மணிக்கு ஊர்வலம் சிதம்பரம்பிள்ளை தங்கியிருந்த வீட்டின் முன்னால் வந்து கொண்டிருந்தது. மாடி வராந்தாவில் வந்து நின்றார் சிதம்பரம் பிள்ளை. கூட்டத்தில் சென்று கொண்டிருந்த சாமிநாதன் அவரைப் பார்த்து விடவே, ''கப்பலோட்டிய வீரர், சிதம்பரம் பிள்ளைக்கு'' என்று உரக்கக் கோஷமிட்டான். ''ஜே....!'' என்று கூட்டம் அதிர்ந்தது. சிதம்பரம்பிள்ளையைப் பார்ப்பதற்காக அந்த வீட்டின் முன்னால் கூட்டம் நின்றது. சிதம்பரம்பிள்ளையின் உதட்டில் குறுநகை தவழ்ந்தது. கூட்டத்துக்கு ஆசி கூறினார். கூட்டம் நகர்ந்தது. அந்தச் சந்தடியில் ரங்கமணியை மறந்து விட்டார் சிதம்பரம்பிள்ளை. அவன் மெதுவாக முன் வாசலுக்கு வந்து நின்று கொண்டு ஊர்வலத்தை வேடிக்கை பார்த்தான். ஊர்வலத்தில் அவனுடைய தந்தையும், தீக்ஷிதரும் தீவிரமாகப் பங்கு கொண்டு செல்வதைக் கண்டதும், ஊர்வலத்தோடு தானும் செல்ல நினைத்தான். ஒரு முறை வீட்டுக்குள் எட்டிப் பார்த்தான். சிதம்பரம் பிள்ளையைக் காணவில்லை. மெதுவாகக் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு நடக்கத் தொடங்கினான். அது அவனுக்குப் புதுமையாக இருந்தது. உற்சாகத்துடன் கோஷமிடும் கூட்டத்தோடு சேர்ந்து அவனும் கோஷமிட்டான். ''வந்தே மாதரம்'' என்று ஆவேசத்தோடு அவனும் கூப்பாடு போட்டபோது, அவனுக்கு உற்சாகமாகத்தான் இருந்தது. இடையிடையே தந்தையையும், தீக்ஷிதரையும் கவனித்துக் கொண்டான். அவர்களுடைய பார்வையில் பட்டுவிடாமல் கூட்டத்தில் பதுங்கிப் பதுங்கிச் சென்றான் ரங்கமணி.

(தொடரும்)

சரித்திரமே சாட்சி


☐ இரண்டாவது உலக யுத்தம் தவிர்க்கப்பட்டிருக்கலாம்; - ஆனால் விதி உலகை ஆட்டிப் படைத்தது!



1931 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு நாள். முன்னிரவு வேளை. நியூயார்க் நகரத்தில் ஐந்தாவது அவென்யூவும் எழுபத்தி ஏழாவது தெருவும் கூடும் இடத்தில், தான் வந்து கொண்டிருந்த வாடகை மோட்டார் காரிலிருந்து ஒரு நபர் இறங்கினார். வாடகையைக் கொடுத்துக் கார் ஓட்டியை அனுப்பிவிட்டு, எதிர்ப்புறமாகப் போக வேகமாக நடந்தார்.

அப்போதுதான் தன்னுடைய பழைய மாடல் மோட்டார் காரைச் சாலையில் ஓட்டி வந்து கொண்டிருந்த கண்டாசினோ என்ற ஆசாமி சாலையின் குறுக்கே நடக்கும் நபர் திடீரென்று தன் காருக்கு நேராக வருவதைப் பார்த்தான். ஒரு கணத்தில் நூறில் ஒரு பங்கு ஓடியிருந்தாலும் அந்த ஆசாமி சட்டினியாகி யிருப்பார். எப்படியோ கண்டாசினோ பலமாகப் பிரேக்கை மிதித்துக் காரை நிறுத்திவிட்டான். ஆனாலும் அவனால் மோதலைத் தவிர்க்க முடியவில்லை. எதிரே வந்த நபர், கார் மோதிக் கீழே விழுந்து விட்டார்.

கண்டாசினோ ஒரு போலீஸ்காரர் உதவியுடன் கீழே விழுந்தவரைத் தன் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு பக்கத்திலிருந்த பிரபல ஆஸ்பத்திரிக்குப் போனான். தோள்பட்டையில் சுளுக்கு. முகத்திலும் மூக்கிலும் சற்றுப் பலமான உராய்தல். அவ்வளவுதான். அவருக்கு அவசரமாகத் தேவையான சிகிச்சைகளை அளித்துக் கட்டுப் போட்டு முடித்த போதுதான், டாக்டர்கள் அடிபட்ட அந்த நபர் யார் என்று தெரிந்து கொண்டார்கள். பிரபல புள்ளி. இங்கிலாந்திலிருந்து சொற்பொழிவுப் பிரயாணத்துக்காக அமெரிக்காவுக்கு வந்திருப்பவர்!



உடனடியாக அவரைப் பிரத்தியேக வார்டுக்கு மாற்றினர். கலவரம் ஏற்படுத்தாத வகையில் அவர் மனைவிக்குத் தகவல் அனுப்பி வரவழைத்தனர்.

மறுநாள் அவருக்குப் பிரக்ஞை திரும்பியபோது அவர் எதிரே கண்டாஸேறு நின்றுகொண்டிருந்தான். அந்த ஆசாமி யார் என்று தெரிந்து கொண்டதும், ''ஐயா! தவறு முழுக்க முழுக்க என் மேல்தான்! உங்கள் நாட்டில் வலது பக்கமாகவே கார் ஓட்டுவார்கள் என்பதை மறந்துவிட்டேன்'' என்றார் பிரபலஸ்தர் பணிவுடன்.

மோதல் பலமாக இருந்தும் அந்த நபருக்கு ஏன் ஓர் எலும்புகூட நொறுங்கவில்லை என்று டாக்டர்களே ஆச்சரியப்பட்டார்கள். ஏற்பட்டிருந்த காயம்கூட வயதுக்கு மீறிய வேகத்தில் குணமாகிக் கொண்டு வந்தது. ஐந்தாவது நாள் அந்த நபர் படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தார். ''நான் பிழைத்திருப்பது எனக்கே நம்ப முடியாததாக இருக்கிறது'' என்றும் சொன்னார். எட்டாவது நாள் ஆஸ்பத்திரியை விட்டுக் கிளம்பினார்.

அவர் சுகமடைந்து வெளியே வந்த செய்தி அன்று மாலைப் பத்திரிகைகளில் வெளியாயிற்று. அந்தச் செய்திக்கு அருகில் ஐரோப்பாவிலிருந்து கிடைத்த செய்தி ஒன்றும் வெளியாகியிருந்தது.

''புகழ் ஏணியில் மேலே போய்க் கொண்டிருக்கும் ஜெர்மானிய அரசியல்வாதி ஒருவர் பிரயாணம் செய்து கொண்டிருந்த கார், கைரிட்ஸ் என்னும் ஜெர்மானிய ஊரில், மற்றொரு காருடன் பலமாக மோதிக் கவிழ்ந்ததில் அந்த அரசியல் தலைவர் கைவிரலில் ஏற்பட்ட சிறு காயத்துடன் ஆச்சரியப்படும் வகையில் உயிர் பிழைத்தார்'' என்பதுதான் அந்தச் செய்தி!

விதியின் கரங்கள், இந்த இரண்டு நபர்களுக்குமே வெவ்வேறு முடிவுகளைத் திட்டமிட்டுத்தான் அந்த விபத்துக்களிலிருந்து அப்போது மீட்டிருக்கின்றன! சரித்திரமே இதற்குச் சாட்சி!

முந்தியவர் உலகப் புகழ்பெற்ற வின்ஸ்டன் சர்ச்சில். பிந்தியவர் உலகத்தின் வெறுப்புக்குப் பாத்திரமான அடால்ஃப் ஹிட்லர். — **திருவேரகத்தான்**

ஆதாரம்: காரனெட்.

படித்துப் பாருங்கள்

துன்னும் உள்ளம்

இந்நூலின் முன்னுரையைப் படித்தாலே முழு நூலையும் படித்த மன நிறைவு ஏற்பட்டு விடும்! ஆசிரியர் அத்தனை விளக்கமாக இந்நவீனத்தின் கருப்பொருளை முன்னுரையிலேயே விண்டு வைத்து விடுகிறார்.

இயற்கையிலேயே மனிதன் கெட்டவனாகப் பிறப்பதில்லை; பாரம்பரிய குணத்தினால் மனிதன் கெட்டவனாகிறான் என்றால் அதையும் ஒப்புக்கொள்ள முடியவில்லை; சூழ்நிலையின் தூண்டுதலினால் மனிதன் கெட்டவனாகிறான் என்றால் அதையும் இந்நூலாசிரியர் ஒப்புக்கொள்ளவில்லை. வஞ்சகம் செய்தவனும் சரி, வஞ்சிக்கப்பட்டவனும் சரி, வேட்கை காரணமாக உள்ளத்தைத் துன்ன விடும்போது கெட்டவனாகி விடுகிறான் என்கிறார்.

இந்நவீனத்தில் வரும் பானு, இந்துமதி, தேவகி, தணிகாசலம், குருசாமி, கார்த்திகேயன் அனைவருமே துன்னும் உள்ளங்களினால் பாதிக்கப்பட்டவர்கள். இவர்களைக் கொண்டு இந்த நவீனத்தைப் புனைய முற்பட்ட ஆசிரியர் ஆயிரக்கால் மண்டபத்துக்கு அஸ்திவாரம் இடுவது போல் விஸ்தாரமான சம்பவங்களையும் விரிவான உரைநடைகளையும் அமைத்துப் புனைந்திருக்கிறார். தெளிவான நடையில் கதை விறுவிறுப்புடன் செல்கிறது. பானுவின் குழப்பமான உள்ளம், தேவகியின் குழந்தை உள்ளம், இந்துவின் விஷ உள்ளம், குருசாமியின் பரோபகார உள்ளம் — இவ்வளவும் சேர்ந்து இயங்குவதென்றால் கதை நீண்டு வளர்ந்திருப்பதில் வியப்பில்லைதான். குழப்பம் இல்லாமல் கதையைக் கூறியிருக்கும் ஆசிரியர் பாராட்டுக்குரியவர் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்: ''மாயாவி''; பிரசுரம்: கலைமகள் காரியாலயம். சென்னை—4 விலை: ரூ. 7.50.

ஸ்ரீ காமாட்சி அந்தாதி
(அன்பளிப்பு வெளியீடு)

சென்னை, வண்ணையம்பதி காமாட்சி அம்பிகையின் மீது பக்திபூர்வமாக இயற்றப்பட்டிருக்கும் இந்நூல் அருமையாக அமைந்திருக்கிறது. இதன் ஆசிரியர் தமிழ்முகன்.

''வந்தாதி யாய்நின்ற வண்ணைக் காமாட்சியின்மேல்
அந்தாதி பாடுவதற் கஞ்சலித்தேன் - சிந்தாத
நம்பிக்கை யோடு நடக்குமிந் நூலுக்குத்
தும்பிக்கை யானே துணை''

என்ற அழகான காப்புச் செய்யுளுடன் நூலைத் தொடங்கியிருக்கிறார். தும்பிக்கையானின் அனுக்கிரகம் நூல் முழுவதும் பரவியிருப்பதோடு, காஞ்சி காமகோடி பீடம் சங்கராசாரிய சுவாமிகளின் ஆசியுரையும், நம் பாரதத்தின் ஒப்பற்ற தலைவர் ராஜாஜி அவர்களின் வாழ்த்துரையும் இந்நூலுக்குக் கிடைத்திருப்பது பரம பாக்கியமாகும். தமிழ் மணமும், கவிதை மணமும் கமழும் இந்தப் பாடல்களில் தெய்வ மணம் கமழ்வது மகிழ்ச்சிக்குரியது.


வெளியீடு: கே. குசால்தாஸ், ''சாந்தி நிலையம்,'' 6, செல்வ விநாயகர் கோயில் தெரு, வண்ணையம்பதி, சென்னை—21.

பெண்ணழகிகள் பலரும் பெப்ஸோடெண்ட் டூத்பேஸ்ட் உபயோகிப்பதன் ரகசியமென்ன ?

பெப்ஸோடெண்ட் உபயோகிக்கும் பெண் புன்னகை புரிய அஞ்சவேண்டியதில்லை...அவளால் இயற்கையாகச் சிரித்து மகிழ்ந்திருக்க முடியும் ... பெப்ஸோடெண்ட் பற்களை, கண்ணைப் பறிக்கும் வெண்மை பளிச்சிடத் துலக்குவதே இதற்குக் காரணம். புன்சிரிப்பு மலர்ந்தால் போதும், முகமெங்கும் ஒளி சிந்தும். நீங்கள் புன்னகை புரியும் ஒவ்வொரு முறையும், உங்களுக்குள் மறைந்திருக்கும் பிரகாசத்தை வெளிப்படுத்தும் பெருமை பெப்ஸோடெண்டையே சாரும்.



பெப்ஸோடெண்டிலுள்ள 'இரியம் ப்ளஸ்' அற்புத நுரைவளத்தை அளிக்கிறது. அது, உங்கள் பற்களின்மேல் படிந்திருக்கும் மங்கலான திரையை அகற்றி, அவற்றை வெண்முத்துப்போல பளிச்சிடச் செய்கிறது!



பெப்ஸோடெண்ட் கொண்டு துலக்கினாலே
பற்கள் பளிச்சிடுமே அதிவெண்மையினாலே !

HDL-3136

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரம்சிறந்த தயாரிப்பு

வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

அத்தியாயம் 9

மும்முனைப் போர்

எதிர்பாராத வகையில் திடீரென்று கொங்குச் சேரர் தம்முடைய மன்றத்துக்கு வரும்படி வேலவன் கோதையையும் அழலாடியையும் அழைத்தார். அரண்மனை முழுதும் இந்நிகழ்ச்சி ஒரு பெரிய பரபரப்பை உண்டாக்கியது.

''ஆதனுருடைய மற்கூடம் மிஞிலியின் தாக்குதலுக்கு உள்ளாகப் போவது அறிந்து நம்முடைய துணைப் படையைப் பூழிநாட்டுக்கு அனுப்பி யிருக்கிறேன். மிஞிலியின் படையினருக்கும் நமது துணைப் படைக்கும் நடுவே பெரும் போர் விளை ப்ய போகிறது. துளு நாட்



மிஞிலி மேலும் வலிமையான படையை அனுப்புவான். நம்முடைய துணைப் படைக்கு உதவுவதற்காக நானும் இணைப் படைகளை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறேன். இந்நிலையில் நீங்கள் இருவரும் இன்றிரவே புறப்பட்டுச் சேர வஞ்சி சேர்ந்து படையெடுப்பு ஏற்பாடுகளை உடனே விரைவுபடுத்தவேண்டும். நம்முடைய ஆனைப் படையணிகள் உங்களைப் பின் தொடர்ந்து வரும். வேலவன் கோதை கடற் படையிலே கலந்து கொள்ள வேண்டும் என்றும், அழுலாடி




டவர் வந்து தாக்குவது வரை காத்திராமல் நமது படையினர் அவர்களை எதிர்த்துச்சென்று தாக்கப் போகிறார்கள். இதையறிந்து ஆனைப் படையை நடத்திச் சென்று நார்முடிச் சேரலோடு மூலப் படையிலே கலந்து கொள்ள வேண்டும் என்றும் ஏற்பாடு.''

தலைவலியா?

ஸாரிடான் 'ரோஷ்' சாப்பிடுங்கள்

வலி நீங்கி...



...உங்களுக்குப் புத்துணர்ச்சி அனுபவமாகும்!

அதுவே ஸாரிடானின் தனிப்பட்ட தன்மை! வலியையும் அத்துடன் மனதில் உண்டாகும் 'பளு'வையும் போக்குவது மட்டுமல்லாமல், இதத்தையும் புத்துணர்ச்சியையும் கூட அளிப்பதற்காக ஸாரிடான் ஒரு தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்படுகிறது. ஸாரிடான் சாப்பிட்டதும் அனுபவமாகும் அற்புதமான மாறுதலைப் பாருங்கள்! உங்கள் மூளை மீண்டும் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பிக்கிறது...வேலையில் உற்சாகம் ஏற்படுகிறது...சிநேகிதர்களுடன் களித்து மகிழ முடிகிறது! ஒரே ஒரு ஸாரிடான் வலியைப் போக்கி இதத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும். ஸாரிடான் எப்பொழுதும் உங்கள் கைவசம் வைத்திருங்கள். குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை போதும்.

தலைவலி, பல்வலி, உடல் வலி, அசௌகரியமான நாட்களில் வலி உடன் நிவாரணம் பெற ஒரே ஒரு ஸாரிடான் போதும்!

'ரோஷ்' தயாரிப்பு:

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

VT. 5626.(A).

இவ்வகையாகப் பேசத் தொடங்கினார் கொங்குச் சேரர்.

''ஆதன் ஆசிரியருடைய மற்கூடத்தைத் தாக்க வேண்டிய காரணமும் சூழ்ந்ததோ!'' என்று வியப்போடு கேட்டான் அழலாடி.

''தம்பி! உன்னுடைய ஆசிரியருக்கு உன்னைப் போன்ற உண்மையான தலை மாணக்கர்கள் பலர் வாய்த்திருப்பது போலவே இரண்டொரு கயவர்களும் வாய்த்திருக்கிறார்கள்!'' என்று கூறினார் மன்னர்.

''மன்னர் பெருமானே! நாகமல்லன் என்று ஒரு நச்சுப் பாம்பு அந்த மற்கூடத்திலே வாழ்ந்து வந்தது. அந்த நச்சுப் பாம்பினால் என்றைக்காவது ஒரு நாள் பெரிய கேடு விளையப் போகிறது என்பது ஏற்கனவே எனக்குத் தெரியும். ஆனாலும் ஆசிரியர் அந்த மல்லனை அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. இப்போது—''

''அந்த நாகமல்லன் இப்போது மிஞிலியின் காவலில் இருக்கிறான். அவனுக்குத் தெரிந்துள்ள அரசியல் ஆயங்களை யெல்லாம் மிஞிலியிடம் வெளிப்படுத்தி விட்டான். அதன் விளைவாகப் போர் நிகழ்ச்சிக்கு ஒரு எதிர்பாராத வேகம் உண்டாகி விட்டது. என்னைக் கேட்டால் இப்படி ஒரு திருப்பம் உண்டானதும் நல்லதுதான் என்றே சொல்லுவேன். மும்முனைப் போருக்கு ஏற்பாடு செய்து கொண்டே காலம் கடத்துவதை விட, எங்கோ ஒரு திசையிலே போரைத் தொடங்கி விட்டால் அது நிலைச்செருவாக நடந்து கொண்டிருக்கும். அதே நேரத்தில் மும்முனைகளையும் மையம் செய்து கொண்டு எதிரியை வன்மையாக மூன்று பக்கங்களிலிருந்தும் தாக்கிப் பிடித்து மூச்சுத் திணறும்படி செய்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.''

இவ்வாறு சொல்லிச் சிரித்தார் கொங்குச் சேரர். வேலவன் கோதை கேட்டான்:

''அண்ணலே, நம்முடைய கொங்கு நாட்டுத் துணைப் படை மற்கூடத்தைப் பாதுகாக்கும் பணியைக் காரணமாகக் கொண்டு, துளு நாட்டின் எல்லையிலே ஒரு திசையில் போரை நடத்திக் கொண்டிருக்கும் என்பதைப் புரிந்து கொண்டேன். ஆனால் முக்கியமான மும்முனைப் போரை எப்படி இயக்குவது என்பது குறித்துச் சேர மன்னரின் முடிவு என்னவோ?''

''வேலவன் கோதை! இன்றுள்ள நிலையில் தமிழகப் போரணிகளிலே கடற்போரிலே வல்லமை பெற்றுள்ள தலைவர்கள் உன்னையும் செங்குட்டுவரையும் தவிர வேறு யாருமில்லை. செங்குட்டுவனுக்கு முன்னர் இத்தனை ஆற்றலோடு வேறு யாரும் கடற் போர் செய்ததில்லை என்று எதிர்காலத்து வரலாற்று ஆசிரியர்கள் வியந்து பாராட்டக் கூடிய வகையிலே நீயும், செங்குட்டுவனும் வெள்ளைத் தீவுப் போரைக் கடல்மீது நடத்தி மாபெரும் வெற்றி கண்டவர்கள். எனவே இப்போது நீயும் செங்குட்டுவனுமே கடற் போரை ஏற்று நின்று நடத்த வேண்டுமென்பது நார்முடிச் சேரலின் முடிவு. எனக்கு இன்று வந்துள்ள அவசரச் செய்தியிலே தம்முடைய போர்த் திட்டத்தை மிக நுட்பமான முறையிலே விளக்கி யிருக்கிறார் சேர மன்னர்!'' என்றார் கொங்குச் சேரர்.

''மன்னர் பெருந்தகையே! நானும் இளவரசர் செங்குட்டுவரும் சேர்ந்து கடற் படையை நடத்தி எங்கு செல்வது என்று திட்டம் தீட்டியிருக்கிறார் அரசர்?'' என்று கேட்டான் வேலவன்.

''தம்பி! நீயும் செங்குட்டுவனும் கடற் கரை யோரமாகச் சென்று துளு நாட்டைத் தாக்க வேண்டும். துளு நாட்டுத் துறைமுகமான நறவுப் பட்டினமும், கடற் கரைப் பக்கத்திலேயுள்ள மேற்குத் திசை ஊர்களான வியலூர், கொடுகூர் முதலிய நகரங்களும் உங்களுடைய தாக்குதலுக்குக் குறியாக அமைய வேண்டும். அதே சமயம் கிழக்குப் பக்கத்திலிருந்து புன்னாட்டு வழியாகப் படையெடுத்துப் போய்த் துளு நாட்டின் கிழக்கு நகரங்களான கடம்பின் பெருவாயில், வாகைப் பெருந்துறை முதலிய இடங்களை ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தாக்க வேண்டும். இரண்டு முனைகளிலே இப்படிப் போர் நடக்கும். மூன்றாவது முனையாகத் துளு நாட்டின் தெற்குப் பக்கத்திலிருந்து அழலாடியின் தலைமையிலான ஆனைப் படை ஒன்று, சேர மன்னரின் மூலப் படையோடு சேர்ந்து துளு நாட்டின் நடுவிலே புகுந்து, துளு நாட்டின் இதய மையத்தைத் தாக்கி நன்னனையும் மிஞிலியையும் அங்கு இங்கு நகராதபடி தாக்க வேண்டும்! இதுவே சேர மன்னருடைய மும்முனைப் போரின் திட்டம். இந்த மும்முனைப் போருக்கு முன்னோடியாகவே மற்கூட முனையிலே நமது கொங்குப் படை ஒரு சிறிய போரைத் தொடங்கியிருக்கிறது. நம்முடைய துணைப் படையும் அதன் இணைப் படைகளுமாகச் சற்றுச் சற்றாக விரிந்துகொண்டே போய் நிலைச் செருவாகப் பலநாள் இந்தப் போர் நடக்கும். இதற்கு நடுவிலே

மணி அல்ல ; சிகாமணி !



வெறும் நாட்டிய மணி அல்ல; நாட்டிய கலா சிகாமணி என்னும் பட்டம் பெற்றுள்ள ஜ. கிருஷ்ணய்யர் பி. ஏ., பி. எல். அவர்கள் தாம் அப்படி ஒரு காலத்தில் நடனமாடி ரசிகர்களை மகிழ்வித்தவர்.

(ஆரோக்கிய தீபிகை, 1932)

தான் அந்த மும்முனைப் போர் 'சட சட' என்று நெரிய வேண்டும். நீங்கள் இருவரும் சேர வஞ்சி நகரத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டால், பிறகு மற்ற ஏற்பாடுகள் எல்லாம் 'மள மள' என்று தொடரும். ஒருவேளை மம்முனை யிலே நமது துணைப் படைகள் நடத்து கிற போரே எதிர்பாராத வகையில் விரிவும் வேகமும் கொண்டு பெரும் போராக மூண்டுவிட்டாலும் அதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டுமே என்று தான், உங்கள் இருவரையும் இவ்வளவு விரைவோடு இங்கிருந்து சேர நாட்டுக்கு அனுப்ப முனைந்தேன்.''

இவ்வாறு சொன்னார் கொங்குச் சேரர். அவருடைய இந்த அறிவிப் பின்படி அன்றிரவே வேலவன் கோதை யும் அழலாடியும் அவர்களோடு சில புகழ்பெற்ற கொங்கு வீரர்களுமாகச் சேர நாட்டுக்குப் புறப்பட்டார்கள்.

ஃ ஃ ஃ



சேரநாட்டு அரண்மனையிலே மஞ்சத்தின் மீது இதுவரை வீற்றிருந்த 'வீர முரசம்' என்ற போர் முரசம் மாளிகையிலிருந்து புறப்பட்டு முன்னே சென்றது. தமிழரின் போர் மரபுப்படி வீரம் பொருந்திய புலியைத் தாக்கி அந்தப் புலியைத் தன்னுடைய கொம்புகளினால் கீறிக் கொன்ற பெரிய காளை மாட்டின் தோலினால் செய்யப்பட்ட அரச முரசு அது! மஞ்சத்திலிருந்து அது புறப்பட்டு எழுந்து ஒலிக்கத் தொடங்கிவிட்டாலே, பெரும் போர் மூண்டுவிட்டது என்று பொருள்!

நாட்டுப் படை, காட்டுப் படை, துணைப் படை, பகைப் படை, கூலிப் படை, மூலப் படை என்ற அறுவகை யான படைகளும் ஒருமித்தன. இந்த அறுவகைப் படைகளிலும் ''தொல் படை'' என்று புலவர்கள் எல்லோரும் பாடி வியந்துள்ள மூலப் படையை நார்முடிச் சேரல் மன்னனே முன் னின்று நடத்தினான். விற்படை, வேற் படை, மற்படை, வாட் படை ஆகிய நான்கு வகையான அணிக ளோடு, ஆனைப் படையை அழலாடி தலைமை தாங்கி நடத்திச் சென்றான். இந்தச் சேரப் பெரும் படையானது துளு நாட்டின் தெற்குப் பக்கத்திலே சென்று நாட்டின் நடுப் பகுதியிலே புகுந்து நன்னர்களைக் கலக்குவதற்காகப் புறப்பட்டது! மும்முனைப் போரின் திட்டப்படி சேரன் செங்குட்டுவனும் வேலவன் கோதையும் துளு நாட்டின் மேற்குப் பகுதியிலே கடல் மீது படை செலுத்திச் சென்றார்கள். இளைச் சேரனோ என்றால், கிழக்குப் பக்கத் திலே புகுந்து ஒரு பெரும் படையுடன் துளு நாட்டின் கிழக்கு எல்லையைத் தாக்கினான்.

எங்கோ மற்கூடத்தைச் சுற்றி நின்று கொங்குச் சேரரின் படையானது பாது காவலைத் தொடங்கியது. அதையே தொடக்கமாகக் கொண்டு இவ்வாறு மும்முனைப் போர் வேகம் கொண்டு, மூண்டது. தமிழகத்தின் வரலாற்றிலே சேரர்களின் புகழ்மிக்க சாதனைகளுக்கு நிலைக்களனாக நின்று நிலவிய மும்முனை வீரம் அது!

புலித் தோலால் செய்த குப்பா யங்கள் அணிந்து சென்றனர் வேலவன் கோதையும் அவனோடு சென்ற கடற் படை வீரர்களும். கரடித் தோலால் செய்த மெய்க் காப்புக் கேடயங்களோடு சென்றார்கள் அழலாடியும் மற்ற ஆனைப் படை வீரர்களும். 'கப்பணம்' என்று அழைக்கப்பெற்ற இரும்பு நெருஞ்சிற் கருவிகளைச் சிதறி, எதிரிகளின் ஆனைகள் தங்களை நெருங்கி வராதிருப்பதற்காகப் பாப்புச் செய்தவாறு கழுமுள், ஈட்டி, முகண்டி, ஞாயில், புதை, கணையம், பிண்டி, உளி, இடங்கணி முதலிய பல விந்தைக் கருவிகளைப் பூட்டிய இயந் திர ஊர்திகளைச் செலுத்தியவாறு சென் றது நார்முடிச் சேரலின் மூலப் படை!

தமிழகத்தின் வரலாற்றிலே 'நீடித்த செரு' என்று கூறுகிற நெடுநாட் போர் களிலே மிகவும் முக்கியமான ஒரு



ஒவ்வொரு துளியிலும் ஊக்கம் துள்ளும்

மற்றெந்த உணவு பானத்தையும் விட அதிக மால்ட் அடங்கியது ஒவல்டின்! மால்ட் என்பது சக்தி தரும், இயற்கையின் ஒப்பற்ற ஊட்டப் பொருள்களில் ஒன்றாகும். 1932 முதல் எல்லா ஒலிம்பிக் ஆட்ட விழாக்களிலும் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு பானமாக ஒவல்டின் விளங்குவதில் வியப்பில்லை.

அதிக மால்ட் தவிர, பால், வைட்டமின்கள், வலிமையூட்டும் இதர சத்துக்கள் யாவும் அடங்கியது ஒவல்டின்.

அதிகத் தெம்புதரும் மால்ட் அடங்கியது ஒவல்டின்

உழைப்பாளிகளுக்கும், வளரும் குழந்தைகளுக்கும் இன்றியமையாத, உன்னதமான உணவுபானம் ஒவல்டின்.

ஒவ்வொரு நாளும் அருந்துங்கள் ஒவல்டின்.

ஒவ்வொரு துளியிலும் ஊக்கத் துள்ளல் அளிப்பது ஒவல்டின்.



ஒவல்டின்

ஒவல்டினை பாரதத்தில் ஜகத்ஜித் டிஸ்டிலிங் & அலைட் இண்டஸ்ட்ரீஸ் லிட்., நிறுவனம், லண்டனிலுள்ள ஏ. வாண்டர் லிமிடெட் அனுமதி பெற்றுத் தயாரிக்கிறது.

ASPJDA-9

போர் அது! துளு நாட்டு நன்னர்களை அடியோடு ஒழித்து மொழுக வேண்டும் என்று தீர்மானித்துச் சேர மன்னன் தனது ஆற்றல் முழுவதையும், தனது கிளை முழுவதையும், தனது சுற்றம் முழுவதையும் ஒன்று திரட்டி, ஒருசேர இணைத்து, மூன்று முனைகளிலே ஒருபடித்தாகத் தாக்கி நெருக்கிய வீர மிக்க போர் அது! அதன் தன்மைகளை, விரிவுகளை, விளைவுகளை, இன்னல்களை, இடர்களை, சாதனைகளை, வெற்றிகளையெல்லாம் புலவர்கள் காப்பியங்களிலே நிலைநிறுத்தினார்கள். மேனாட்டு வணிகர்கள் தங்கள் பயண ஏடுகளிலே பொன் எழுத்துக்களால் பொறித்தார்கள்.

புன்னாட்டிலே இருந்த நீலக்கல் சுரங்கத்தை நாடி வந்த யவன வணிகர்கள் எத்தனை பேர்! ரோமாபுரி அரசிகளும், அலெக்சாந்திரியாப் பட்டினத்துச் சீமாட்டிகளும் அந்த நீலக் கற்களை எத்தனை ஆர்வத்தோடு நாடினார்கள்! மேல்நாட்டு வணிகர்கள் நடத்திய வாணிபம் எத்தனை வளமாக இருந்தது! அதைத் தொலைத்துச் சேர மன்னர்களின் செல்வத்தையும் செல்வாக்கையும் துடைத்து மொழுகத் தோன்றிய வெள்ளைத் தீவுக் கொள்ளைக்கூட்டமும், அவர்களுடைய கூட்டாளிகளான நன்னர்களும் எப்போது ஒழிவார்கள் என்று மேற்கு நாட்டு மன்னர்கள் எல்லாம் கவலையோடு காத்திருந்தார்கள் அல்லவா? கடம்பன் ஒழிந்தான் செங்குட்டுவன் நிகழ்த்திய கடற் போரிலே! இப்போது நன்னனும் ஒழிவதற்கான இந்த மும்முனைப் போர் தொடங்கி, நீண்ட நாட்கள் நிலைச் செருவாக நடந்தது.

மிஞிலி ஏதேதோ சூழ்ச்சிகள் செய்து பார்த்தான். ஆய் எயினன் என்ற சேரத் தலைவனைப் பாழி என்ற இடத்திலே எதிர்த்துப் போரிட்டுக் கொன்று முடித்தது போலவே, சேரர் படை முழுவதையும் அழித்து, ஒழித்துவிடலாம் என்று மனப்பால் குடித்தான். ஆனால் அவன் எதிர்பார்த்த முறைகளுக்கெல்லாம் மாறாக, மேலாக, மூன்று பக்கங்களிலே மூன்று வலிமை மிக்க பெரும் படைகள் வந்து தாக்கியதும் அவனுக்கு மூளை குழம்பியது. எண்ணங்கள் இடறின.

கடல் மீது வந்த செங்குட்டுவனையும் வேலவன் கோதையையும் எதிர்த்துப் போரிடுவதற்காகத் துளு நாட்டின் ஒரு பெரிய கடல் அணி சென்றது. கிழக்குப் பக்கம் வந்த படையைத் தாக்குவதற்கு இன்னொரு மூலப் படை அணி சென்றது. நார்முடிச் சேரல் — நடத்திவந்த சேரர்களின் ஆணைப் படையோடு கூடிய பெரும் படையை மிஞிலியும் நன்னனுமே சென்று எதிர்த்தார்கள்!

மூன்று அணிகளையும் மூன்று வகையான தலைமையிலே இயக்குவது என்பது மிஞிலி இதுவரை கற்பனை செய்து பார்த்திராத புதிய போர் அநுபவம். தனிப் பெருந் தலைவனாக இதுவரை துளுநாட்டுப் படை முழுவதையும், தனது ஒருமுக ஆணையிலேயே இயக்கி வந்த மிஞிலி இப்போது நிலைகலங்கித் தடுமாறினான்.

கடற் படைப் பட்டினமும் துளு நாட்டின் முதன்மையான துறைமுகமுமான நறவு என்ற புகழ்ப் பட்டினம் முதலில் வீழ்ந்தது. செங்குட்டுவனும் வேலவனும் அந்தத் துறைமுகத்தைக் கைப்பற்றி மேற்குத் திசை வழியாகத் துளுநாட்டுக்குள்ளே புகுந்தார்கள்! - கிழக்கே இருந்து தாக்கிய கிளைச் சேரனுடைய படையானது கடம்பின் பெருவாயில், வாகைப் பெருந்துறைவழியாக மேலே மேலே முன்னேறித் துளு நாட்டின் நட்டநடுவான பகுதியிலே போர் செய்து கொண்டிருந்த மூலப் படையோடு இணையத் தொடங்கியது. வியலூர், கொடுகூர் முதலிய முதன்மையான நகரங்கள் ஒவ்வொன்றாகப் பிடிபட்டன என்ற துயரச் செய்திகள் ஒவ்வொரு நாளும் மிஞிலியையும் நன்னனையும் தளர்த்திக் கொண்டே வந்தன. நின்று சிந்தனை செய்வதற்கு நேரமில்லாதபடி அழலாடியின் ஆணைப் படையானது, நார்முடிச் சேரலின் நேர்முகமான அரச ஆணையிலே மேலே மேலே எவ்வி முன்னேறிச் சென்று, மிஞிலியையும் நன்னனையும் நேருக்கு நேராக வளைக்கத் தொடங்கிற்று! மிஞிலியை முன்னே முகப்பு அணியிலே செல்ல நிறுத்தி, அடுக்கு அணியின் கடக வளையிலே நின்று போரிட்டான், துளுநாட்டு மன்னன் நன்னன்!

சேரர்களுடைய மூலப் படை இதோ நந்தி வளைவைத் தாண்டி முன்னேறியது. மிஞிலி மிஞிலி மிஞிலி என்று மூலப் படை அணிகளிலே கூச்சல் எழுந்தது. பூட்டுப் பூட்டாகக் கொளுகி இறுக்கும் முறையிலே, மூலப் படை அகர வளையமிட்டு மிஞிலியின் அணியை நான்கு புறமும் வளைத்துக் கொண்டது. அந்த வளைவின் பொட்டுச் சூழலிலே அரசக் கொம்பனிலே ஏறி நின்று நார்முடிச் சேரல் ஆர்த்தான்!

இந்த அரச அணியைத் தொடர்ந்து அதன் நிழலைப் போன்று அடுத்து வந்து கொண்டிருந்த மாபெரும் ஆணைப்

படையிலே கொங்கு நாட்டுக் கொம்பன் ஆனைகள், கிம்புரி என்னும் பூண் பிடித்த மருப்புக்களைக் கொண்டு அணிகளைப் பிறிக் கொண்டே வளையமிட்டு, அடர்ந்து, பாய்ந்து, இதோ நன்னனுடைய அணிவட்டத்தை ஆற்றலோடு தாக்கின. வாளேந்தியவாறு கொம்பன் ஆனையின்மீது நின்று காலனைப் போன்று கூக்குரல் இட்டுச் சீறிய அழலாடி, இதோ திமிறியை மத்தகத்திலே நாட்டி வல்லிய விட்டத்தைக் காலால் அழுத்தினான். அலைகளைக் கிழித்துக் கொண்டு செல்லும் திமிங்கிலத்தின் வேகத்தோடு நன்னனுடைய அணியை இரு கூறாகக் கிழித்துக் கொண்டு சாடியது அந்தக் கொங்கு நாட்டுப் பெரும்போர் ஆனை. ஒரு பெரிய 'பிளிறல்' கேட்டது. அப்படியே கீழே குதித்து அந்தப் படை அணிகளிலே திமிறிய நன்னனை அப்படியும் இப்படியும் பாய்ந்து, நெருக்கி, அணியின் மற்றப் படைகளையெல்லாம் ஒரு உழக்கு உழக்கி நன்னனை மட்டும் தனியாகப் பிரித்து நிறுத்தியது அந்தக் கொம்பன் ஆனை. வாளை ஓங்கிக் கொண்டே பாய்ந்த நன்னன் மீது இதோ ஒரு பெரிய மின்னல் பாய்ந்து தாக்கியது போலே ஒரே பாய்ச்சல் பாய்ந்தான் அழலாடி! மின்னல் மின்னி நிற்கும் ஒரு விநாடி நேரந்தான் அது! பேய்கள் அலறுவது போன்று ஓர் அலறல்! அடுத்த விநாடி நன்னனுடைய தலை அழலாடியின் வாளிலே புரண்டது! கொடுமையின் செந்துளிகளிலே நனைந்த அந்த வாள் உலர்ந்து உறையும் முன்னாக, அதை உறையிலே செருகிக் கொண்டு ஆனையின் மீது துள்ளி ஏறினான் அழலாடி. அவனை நோக்கி அப்படியே ஆனந்தக் களிப்புப் பொங்கப் பாய்ந்தோடி வந்தது அரச ஆனை; அதன் மீது நார்முடிச் சேரல்.

சேரர் படை நாவலித்தது. துளு நாட்டுப் படையிலே சிதறித் திணறிய குமைவிலே படைகள் சாய்ந்தன, சரிந்தன, அங்குமிங்கும் நிலை கலங்கி ஓடின.

மேற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் மேலும் மேலும் சேரர்களின் படைகள் குவிந்தன! தனித்தனியாக மூன்று முனைகளிலே போரிட்ட சேரப் படைகளும் இப்போது ஒன்று சேர்ந்து விட்டன! வெற்றி வெறியிலே ஆனையின் மீது நின்ற அழலாடியை நோக்கிப் பாய்ந்து வந்தான், போர்க் குதிரை ஒன்றிலே காற்றின் வேகத்தோடு வேலவன்கோதை!

''மிஞிலி எங்கே? எங்கே மிஞிலி?'' என்ற கூக்குரல்களினூடு செங்குட்டுவன் அடர்ந்தான். மேற்குப் பக்கத்திலிருந்து வந்த இந்தப் படையை அன்போடு சேர்ந்து அணைத்தது கீழைச் சேரர்களின் கிழக்குப் படை!

மிஞிலி, மிஞிலி, மிஞிலி என்று ஒரே சமயத்தில் எல்லாரும் மிஞிலியைத் தேடினார்கள். நான்கு திசைகளிலும் சிதறி ஓடிய அந்தத் துளு நாட்டுப் படைகளிலே மிஞிலியைக் காணோம்!

''இதோ மிஞிலி!'' என்று ஒரு பெரிய ஓசை கேட்டது. அவ்வாறு ஓசை எழுப்பியவன் வேறு யாருமில்லை. வேலவன்தான்! அலகைபோன்று ஆர்த்துச் சாடினான் அவன்!

வெற்றியோடு முன்னேறிய சேரத் தலைவர்கள் அனைவரும் ஓசை கேட்ட இடத்துக்கு வந்தார்கள். ஆனால் என்ன வியப்பு! அந்த அணியின் நடுவிலே வாள் பாய்ந்து குருதி கொட்டிக் கீழே மடிந்து கிடந்தான் துளு நாட்டுத் தானைத் தலைவன்!

''என்னுடைய வாளுக்குத் தப்பி விட்டான்!'' என்றான் வேலவன்.

''என்னுடைய வாளும் இல்லை இது!'' என்றான் அழலாடி.

''துளுநாட்டுப் படையினரின் வாளாகவே இருக்கலாம் அது!' அவர்களிலேயே ஒருவன் அவனைக் குத்திக் கொன்றிருப்பான்'' என்றான் செங்குட்டுவன்.

சேர வீரர்கள் அந்தத் தானைத் தலைவனின் உடலை அப்படியே எடுத்து ஒரு வெண் புரவியிலே சாய்த்தார்கள்.

''உன்னுடைய வாளுக்கு உரிய உடல் இந்தப் பெரும் படையிலே ஒரே ஒரு உடல்தான்! அந்த உடலை உன் வாள் ஊடுருவிவிட்டது. வாழ்வில் நீ எடுத்துக் கொண்ட உறுதிமொழியை நிறைவேற்றி விட்டாய்! மிஞிலியைக் கொன்ற வாள் எதுவாக இருந்தாலும் நன்னனைக் கொன்றது உனது வீர வாளேதான்! அதுவே நமது வெற்றி!''

இவ்வாறு அழலாடியைப் பார்த்துச் சொன்னார் கொங்குச் சேரர். அவர் மேலும் சொல்லுவார்:

''அழலாடி, உன்னுடைய வாளில் தோய்ந்த நன்னனின் செந்துளிகள் உலர்ந்து உறைவதற்குள் சிறைக்கூடத்திலேயுள்ள குலபாணிக் கிழவரைப் போய்ப் பார்க்க வேண்டும் அல்லவா! நீயும் வேலவன் கோதையும் சிறைக் கூடத்துக்குள் செல்லுங்கள். நாங்கள் மனைமன்றம் செல்கிறோம்! இனி நன்னனைத் தேடிப் பார்க்கிறோம்!''

சேரப் படைகள் வெற்றி முழக்கத்தோடு துளு நாட்டு அரண்மனையிலே புகுந்தன.

(தொடரும்)


இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை...
சாந்தி
ஸ்ரீபத்மநாபா
மகாலட்சுமி
மற்றும் தென்னகமெங்கும்!
இணையற்ற
பொழுதுபோக்குச்
சித்திரம்!
மேகலா
பிக்சர்ஸ்
வாலிப விருந்து
'முரசொலி' மாறன் M.A.
சுதர்சனம்
அமிர்தம்
R. தேவராஜன்
B. நாகராஜன்
S.P. ராமநாதன்
முருகேசன்



சிவனருட் செல்வர்

— திருமுருக கிருபானந்தவாரியார்

சிறிய மந்திரி பதவிக்கு எத்தனையோ போட்டி உள்ள காலம் இது! பெரிய அரச பீடம் தமக்கு வருகிறதே என்று பெருமாக்கோதையார் மகிழ்ந்தாரில்லை! அமைச்சர்கள் கூறியதைக் கேட்ட பெருமாக்கோதையார், 'சிவத் தொண்டுக்கு இடையூறாக இவர்கள் மொழிந்தார்கள். அன்பு நிலை மாறாமல் அரசும் புரிவதற்கு இறைவன் திருவருள் இருக்குமாயின் இறைவரிடம் விண்ணப்பம் செய்து அறிவோம்' என்று கருதினார்.

அவ்வாறே ஈசனிடம் வினவினார்.

''நீ அரச பதவி ஏற்றுக் கொண்டு உலகில் உள்ள உயிர்களுக்கு இனித் தொண்டுகளைப் புரிந்து வருவாய். எல்லா உயிர்களும் கூறிய அனைத்தும் நீ அறியும் ஆற்றலையும், பெருவலியையும், எல்லையில்லாத கொடையையும், ஆயுதம், வாகனம் முதலிய அரசர்க்குரியனவற்றையும் உனக்கு அளித்தோம்'' என்று கூறிய சிவபெருமான் அவற்றை அவருக்குத் தந்தருளினார்.

இருமாக் கோதையார் சேரமான் பெருமானாகி இறைவருடைய திருவருளைக் கொண்டு புறப்பட்டுக் கொடுங்கோளூரை அடைந்தார். நாளும் கோளும்\ நன்னிலையுற்ற ஒரு நாளில் அவருக்கு முடிசூட்டினார்கள்.

எல்லா உயிர்களும் தத்தம் குறைகளைக் கூறக் கேட்டு அவ்வவ்வுயிர்களுக்கு உற்ற துன்பத்தை மாற்றியதனால் சேரமான் பெருமாள் நாயனாருக்குக் கழறிற்றறிவார் என்ற பேரும் உண்டாயிற்று.

மகுடாபிஷேகம் ஆனபின் திருக்கோயில் சென்று இறைவர் முன் பணிந்து எழுந்து யானை மீது ஏறி நாயனார் நகர் வலம் வந்து கொண்டிருந்தார். உவர் மண் பொதி சுமந்த வண்ணான் ஒருவன் எதிரில் வந்தான். மழை பொழிய அதனால் கரைந்த உவர்மண் அவன் உடம்பில் நிறைந்தது. பின்னர் உலர்ந்து வெளுத்திருந்தது. பவனி வருகிற சேரர்கோன் சிவனடியார் திருவேடத்தினை நினைந்து யானையை விட்டு இறங்கிச் சென்று அவ்வண்ணான் முன் தொழுதார். அடியார் திருவேடத்தில் இவருக்கு இருக்கும் அளவற்ற அன்பு நிலையைக் கண்டு அமைச்சர்கள் அதிசயித்து அஞ்சலி செய்தார்கள்.

சேரர் பெருமான் பின்னர் யானை மீது ஏறி நகர் வலம் வந்து, மணிமண்டபம் சென்று, வெண் சாமரம் இரட்ட, அரியணை மீது வீற்றிருந்தார். சோழ மன்னனும், பாண்டியனும் அவரிடத்தில் அன்பு காட்டினார்கள். அரசர் பலரும் கப்பங்கட்ட அகத்தும், புறத்தும் பகைவர்களை ஒடுக்கிச் சிவ சமயம் வளர அரசுபுரிந்து வந்தார் சேரமான் பெருமாள் நாயனார். அரசாளும் பயனும், தவப்பேறும், செல்வமும், சீரும் எல்லாம் கூத்தப் பெருமான் திருவடியே என்று தெளிந்த அறிவினால் எண்ணி, தூக்கிய திருவடியை நாளும் அருச்சித்து வழிபட்டு வந்தார்.

சிவாகமத்தில் கூறிய முறைப்படி அம்பலவாணரை வழிபாடு செய்தார். அவ்வழிபாட்டின் முடிவில் நடராஜப் பெருமானுடைய சிலம்பு ஒலி கேட்டு இன்புறுவார். சிவனடியார்கட்கும், புலவர்கட்கும், வறியவர்கட்கும் நிரம்பவும் தானதருமங்களைச் செய்து மகிழ்



வார். சிவபெருமானுக்குரிய வேள்விகள் பல புரிந்தார்.

இச்சமயத்தில் பாண்டி நாட்டில் மதுரையம்பதியில், நாளும் இன்னிசை பாடித் தம்மை வழிபடும் சிறந்த அடியாராகிய பாணபத்திரருக்குப் பெரும் செல்வம் தர சோமசுந்தரக் கடவுள் திருவுள்ளம் பற்றினார். சொக்கலிங்கப் பெருமான் பாணபத்திரரின் கனவில் எழுந்தருளி, ''அன்பால் என்பால் பாடித் திருத்தொண்டு புரியும் உன் வறுமை நீரப் பொன்னுடைகளும், மணிப்பூண்களும், நவநிதியும் தரப் பணித்துச் சேரர் மன்னனுக்கு ஒரு கடிதம் தருகிறோம். அவ்வோலையை எடுத்துக் கொண்டு, சிறிதும் காலம் தாழ்த்தாமல் போய் வா'' என்று கட்டளையிட்டுத் திருவோலையைத் தந்தருளினார்.

பாணபத்திரர் கண்விழித்து எழுந்து, இறைவன் தந்த திருவோலையை எடுத்துக் கண்ணில் ஒற்றி, அத்திருமுகத்தைச் சென்னி மேல் வைத்து, அப்பொழுதே புறப்பட்டார். கொடுங்கோளூரை அடைந்து இறைவருடைய திருமுகத்தை மன்னரிடம் தந்து பணிந்தார். ''என்னையும் ஒரு பொருளாக எண்ணி எம்பெருமான் திருமுகம் கொடுத்தருளினாரே. எம்பிரான் இருவருள்தான் என்னே!'' என்று விம்மிதமுற்று அத்திருமுகத்தைப் படித்தார் சேரமான் பெருமான்.

அத்திருமுகத்தைப் பல படிகள் எழுதுவித்தார் மன்னர் பெருமான். கருவூலத்தில் இருந்த நவநிதிகள் முழுவதையும் மிச்சமில்லாமல் எடுத்துப் பொதிகளாகக் கட்டி எருதுகளின் மேல் ஏற்றிக் கொண்டு வரச் செய்தார். அப்பொருள் முடிப்புக்களையெல்லாம் பாணபத்திரருக்குக் காட்டி, யானை, குதிரை, தேர் முதலியவையும் தந்து அரசையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பாணபத்திரரைப் பணிந்தார். பாணபத்திரர் அவைகளைக் கண்டு அதிசயித்தார். சேரமானை அரசாளுமாறு செய்து, நிதிக் குவியல்களுடன் விடைபெற்றுப் புறப்பட்டார். நகர் கடக்கும் வரை உடன் சென்று கண்ணீர் சொரிந்து வழி அனுப்பி வைத்தார் மன்னர்.

ஒரு நாள் சிவபூசையின் முடிவில் நாயனாருக்குச் சிலம்போசை கேட்கவில்லை. அதனால் பெருந்துயரமுற்றார். ''இனி இந்த உடம்பு இருந்து என்ன பயன்? ஆளும் நாயகனே! கேளும் கிளையும் இருந்து என்ன பயன்? மாளுவேன்!'' என்று துணிந்தார். இறைவனைப் பணிந்து, உடைவாளை உருவி மார்பில் நாட்ட முயன்றார். அப்போது கலீர் என்று சிலம்போசை கேட்டது. முன்னை நாட்களிலும் ஒலி மிகுந்த அச்சிலம்போசையைக் கேட்டு உள்ளம் உவந்தார் நாயனார். 'ஐயனே அருட்கடலே! சிலம்பொலி முன்கேளா தொழிந்த காரணம் யாதோ?'' என்று இறைவனைக் கேட்டார்.

''சேரனே! நாமே தடுத்தாட்கொண்ட சுந்தரன் தில்லையம்பதியில் பொன்னம்பலத்தில் வந்து நம்மை வழிபட்டுச் செந்தமிழ்ப் பதிகம் பாடினான். நாம் அப்பாடலின் சுவையில் ஈடுபட்டிருந்தபடியால், உன் பூசை முடிவில் சிலம்பொலியைத் தரச் சற்றுத் தாமதித்தது; வருந்தற்க!'' என்று அசரீரியாக இறைவர் கூறியருளினார்.

சுந்தரரை இவருக்கு அறிவிக்கும் பொருட்டே இறைவர் இவ்வாறு இசைத்தருளினார்.

இதனைக் கேட்ட சேரர் பெருமான், 'இத்தகைய பெருமை மிகுந்த சுந்தரரைக் காணுமலும், அவரைப் போற்றுமலும் அடியேன் இருக்கலாமோ? தில்லையம்பதி சென்று பொன்னம்பலவாணரைப் போற்றி செய்து, வன்றொண்டரையும் வணங்கி வருவேன்' என்று எண்ணினார். திரமுள்ள வீரர்களும் நால்வகைப் படைகளும் பூமி நெளியும் வண்ணம் உடன் செல்லத் தில்லைக்குச் சென்றார் சேரமான்.

சிற்றம்பலத்துக்கு முன் சென்று பலன்கள் ஒருவழிப்பட, எடுத்த திருவடியைக் கண்டு காதலாகிக் கசிந்து பன்முறை பணிந்தார்; துதி செய்தார். இறைவருடைய திருச்சிலம்போசையைக் கேட்டு உள்ளம் உவந்தார். பலநாள் தில்லையிலிருந்து காலந்

தோறும் கனகசபை சென்று அம்பலவாணரை வழிபட்டு இன்புற்றார்.

அதன்பின் நாவலூரர்ப் பெருந்தகையாகிய நம்பியாரூரரை வணங்கி மகிழ எண்ணி, திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார். ஆடலரசரைப் போற்றி, அறிவின் எல்லையாகிய தில்லையின் எல்லையை இறைஞ்சிப் போகின்றார். வழியில் ஞானசம்பந்தர் திருவவதாரம் செய்த சீர்காழியை அடைந்து தோணியப்பரைத் தொழுதார். திருவாரூரை அவர் அடைந்த நேரத்தில் சுந்தரர் நாகைக்காரோணம் போய் இறைவரைப் பாடிப் பொன்னும் மணியும் ஆடையும் கஸ்தூரியும் குதிரையும் பெற்றுத் திருவாரூரை அடைந்திருந்தார். சேரர் பெருமான் வரவைக் கேள்விப்பட்ட அவர், அன்புடன் எதிர்கொண்டார். சுந்தரர் திருவடி மீது வணங்கினார் சேரர் பெருமானார். சுந்தரரும் எதிர்வணங்கி அவரை எடுத்துத் தழுவிக் கொண்டார். இருவரும் அன்பு வெள்ளத்தில் முழுகிக் கரையேற மாட்டாராகித் தத்தளித்தார்கள். உயிரும் உடம்பும் ஒன்று பட்டார்கள். அவர்களுடைய தோழமையின் மேன்மையைக் கண்ட அடியார்கள், 'சேரமான் தோழர்' என்று நம்பியாரூரருக்கு நாமம் சூட்டினார்கள். ஒருவருக்கொருவர் தேன் போன்ற தித்திக்கிற இன்னுரை கூறி மகிழ்ந்தார்கள். சேரர் கோமானை அழைத்துக்கொண்டு சுந்தரர் தியாகேசருடைய திருக்கோயில் சென்றார். சேரமான்பெருமான் நாயனார், 'திருவாரூர் மும்மணிக் கோவை' பாடியருளினார்.

தோழருடன் சுந்தரர் பரவையாருடைய திருமடத்துக்கு எழுந்தருளினார். தம்பிரான்தோழர் பரவையாரை நோக்கிச் சேரர் வேந்தருக்கு விருந்தமைக்குமாறு பணித்தருளினார். இருவனைய பரவையார் அரசர்க்கு அமைக்கும் சிறப்புக்கு மேற்பட்ட முறையில் அடியார்க்கு விருந்து அமைத்தார். ஒன்றாக அமர்ந்து அமுது செய்ய கழறிற்றறிவார் அஞ்சினார். ஆரூரர் அவரது திருக்கரத்தைப் பற்றி அழைத்துத் தம் அருகில் இருத்தினார். இருவரும் பரவையார் படைக்கும் அமுதினும் இனிய உணவினை உண்டனர். பின்னர் பஞ்சவாசத்துடன் தாம்பூலம் தரித்துக் கொண்டனர்.

ஒரு மனமுடைய இருவரும் இவ்வாறு சில நாட்கள் திருவாரூரில் இருந்து மன மகிழ்ந்தார்கள். வன்றொண்டர் பாண்டி நாடு சென்று மதுரை முதலிய திருத்தலங்களை வணங்குவதற்கு எண்ணினார். சேரர் பெருமானும் அன்று தமக்குத் திருமுகம் அனுப்பிய ஆலவாயண்ணலை ஆரூரருடன் சென்று வணங்குதற்கு இணங்கி அவருடன் புறப்பட்டார். பல தலங்களைச் சேவித்துக் கொண்டு அவர்கள் மதுரையம் பதியை அடைந்தார்கள்.

மதுரையை அரசு புரியும் பாண்டிய மன்னன் நகரை அலங்கரித்து எதிர்கொண்டு அவர்களை வரவேற்றார். பாண்டியனுடைய புதல்வியை மணந்து மதுரைக்கு வந்திருந்த சோழ அரசரும் உடன் சென்று உபசரித்தார். இப்படி மூவேந்தரும் ஒன்றுபட்டு நம்பியாரூரருடன் சொக்கலிங்கப் பெருமான் திருக்கோயிலுள் சென்றார்கள். காலங்கள் தோறும் ஆலவாயண்ணலை வணங்கி, இன்பக் கடலில் முழுகினார் சேரமான். அங்கிருந்து பல தலங்கள் சென்று சிவபெருமானை வணங்கினார். சுந்தரரும், வளவனும் உடன் சென்றார்கள்.

பின்னர் பாண்டியனையும் சோழனையும் நிற்குமாறு கூறி வன்றொண்டருடன் சேரர்கோன் புறப்பட்டுப் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு சோழ வள நாட்டை அடைந்தார்.



க்ஷேத்திராடனம் முடித்து, வன்றொண்டரையும் அழைத்துக் கொண்டு மீளவும் கொடுங்கோளூர் வந்து சேர்ந்தார் சேரமான். திருநகர மக்கள் அரசரையும் ஆரூரரையும் எதிர்கொண்டு தொழுதார்கள். சேரர் பெருமான் நேரே திருமாளிகை செல்லாமல், திருவஞ்சைக் களத்தில் எழுந்தருளியுள்ள இறைவரை வழிபட்டார். பின்னர் திருமாளிகை சென்று தேவிமார்கள் செம்பொற்கலச நீர் வார்க்க, வன்றொண்டர் மலரடியைப் பூசித்து விருந்து செய்து உபசரித்தார்.

வன்றொண்டர் சில நாட்கள் அங்கு தங்கியிருந்த பின் திருவாரூர்த் தியாகப் பெருமானைக் காண விரும்பிப் புறப்பட்டார். அவரைப் பிரிய மனமின்றிச் சேரர்கோவும் புறப்பட்டார். ஆரூரர் அவரைத் தடுத்து, ''நீர் இங்ஙனம் இருந்து அரசு புரியும்'' என்று பணித்தருளினார். சேரமான் பெருமாள் நாயனார், அன்று முதல் கருவூலத்தில் நிறைந்திருந்த செல்வம் முழுவதையும் ஆடை அணிகளையும் பொதிகளாகக் கட்டி நம்பியாரூரருக்கு வழங்கி, ஆட்கள் மூலம் அவருடன் அனுப்பினார்.

வன்றொண்டர் திருவாரூர் சென்று தங்கியிருந்து இரண்டாம் முறையாகத் தோழரைக் காண நினைந்து மகோதைக்கு வந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் ஒருநாள் திருவஞ்சைக் களம் போய், பெருமானை வழிபட்டு அதோடு உலக வாழ்வை முடித்துக் கயிலை போகத் திருவுளம் கொண்டார். அரனார் ஆணையின்படி மாலயனதி வானவர்கள் ஐராவதம் என்ற வெள்ளானையுடன் திருவஞ்சைக் களம் வந்து வன்றொண்டரை வணங்கி அழைத்தார்கள். சுந்தரர் திருவருளைச் சிந்தித்து யானை மீது ஏறிப் புறப்படும் போது தமது தோழரை நினைந்தருளினார். அந்த நிலையை அடைந்த சேரமான்பெருமாள் ஒரு புரவியின் மீது ஏறித் திருவஞ்சைக் களம் வந்தார். யானை மீது தோழர் விண் வழி போவதைக் கண்டார். புரவியின் செவியில் ஐந்தெழுத்தை ஓதினார். அப்புரவி ஆகாய வழி பாய்ந்து சென்றது. யானையை வலம் வந்து சேரர்கோன் வன்றொண்டரை வணங்கி முன்சென்றார்.

சேரர்கோனை விட்டுப் பிரியாத சேனை வீரர்கள் வாள் கொண்டு உடலை அறுத்து, வீர யாக்கை பெற்று வான் வழியே அவருடன் சென்றார்கள். நம்பியாரூரர் திருக்கயிலை சென்று திருக்கோயிலுட் புகுந்து, தாய்ப் பசுவைக் கண்ட இளங்கன்று போல் உருகி, மரகதக் கொடியுடன் விளங்கும் பவளமலையைக் கண்டு பணிந்தார். சிவபெருமான் திருவருள் புரிந்தார்.

''ஐயனே ! சேரமான் பெருமாள் வந்து திருவாயிலில் நிற்கின்றார்'' என்று சுந்தரர் விண்ணப்பம் புரிந்தார். பெருந்தேவர்களைக் கொண்டு சேரர் கோவை அழைத்தார்.

சேரர் வேந்தர் சாட்சாத் சிவ பெருமான் திருமுன்பு சென்று பல முறை பணிந்து அன்பினால் அகங் குழைந்து நின்றார்.

ஆலமுண்ட அண்ணலார் புன்முறுவல் செய்து, ''சேரனே ! உம்மை அழையாமுன் வந்தனையே ?'' என்றார்.

சேரர்கோமான், ''ஐயனே ! அடியேன் நம்பியாரூரரைப் போற்றிக் கொண்டு வந்தேன். உமது திருவருளாகிய வெள்ளத்தில் முழுகினேன். அந்த வெள்ளம் என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்தது. மற்றொரு விண்ணப்பமும் உண்டு. தேவரீரைத் திருவுலாவினால் துதி செய்துளேன். திருச்செவி சாய்த்துக் கேட்டருள வேண்டும்'' என்று வேண்டினார்.


சிவமூர்த்தி அதற்கு இசைந்தருளினார். திருக்கயிலாய ஞான உலாவைச் சேரமான் பாடினார். சிவபெருமான் கேட்டு மகிழ்ந்து, ''வன்றொண்டனும் நீயும் சிவகணத் தலைவர்களாக இருங்கள்'' என்று பணித்தருளினார்.

கயிலைமலையில் சேரமான் பெருமான் பாடிய ஞான உலாவைக் கேட்ட மாசாத்தனார் திருப்பிடவூரில் அதனை வெளிப்படுத்தினார். சேரர் கோன் சிவகணத் தலைவராய் என்றும் அகலாத சிவானந்தம் பெற்று இன்புற்றிருந்தார்.

(தொடரும்)

ஸ்ரீஹரியின் வெளியூர் பயணம்

டாக்டர் ஸ்ரீஹரி நாளது 12–6–67 பகல் சென்னையை விட்டுப் புறப்பட்டு 14–6–67 டெல்லி சேர்ந்து அங்கு சௌத் இந்தியா கிளப், மந்திர் மார்க்-டெல்லி–1 (போன்: 46059) என்றவிடத்தில் தங்குகிறார். 16–6–67 மாலை அவ்விடமிருந்து புறப்பட்டு 18–6–67 காலை ஹைதராபாத் சேர்ந்து ஸுல்தான் பஜார் ரோட்டில் நியூ தாஜ்மஹால் ஹோட்டலில் தங்குகிறார். 19–6–67 மாலை அங்கிருந்து புறப்பட்டு 20–6–67 சென்னை வந்து சேருகிறார்.



"இங்கேயெல்லாம் தடுக்கி விழுந்தால் லேடி டைப்பிஸ்டுகளாகவே இருப்பார்கள்; அதனாலே நீ கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கணும்...."

"நான் தடுக்கி விழவே மாட்டேன் சார்!"

- கலாசாமி


நன்றி மறவாத நாய்!

அமெரிக்காவில் உள்ள ப்ளோரிடாவில், ஜாயா ஜார்டன் என்றவர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாராம் ஒரு நாள். திடீரென்று 'லேடி' என்ற அவரது நாய் அறைக் கதவைக் காலால் தகதகவென்று பிராண்டிக் குரைத்தது.

நாய் செய்யும் அமர்க்களத்தைக் கேட்டு ஜாயி விழித்தெழுந்து பார்த்தால், அவர் காரும் கார் ஷெட்டும் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன.

உடனே தீயணைக்கும் படையினரை அவர் வரவழைத்தார். தண்ணீர் பீச்சும் குழாய்களால் தீ அணைக்கப்படுவதைப் பார்த்தது 'லேடி'. திடீரென்று இறந்தது. மாரடைப்பால் மரணம் என்று மிருக வைத்தியர்கள் கூறினர்.

தன் எஜமானின் சொத்தைத் தக்க சமயத்தில் காப்பாற்றிய நாய் ஏற்பட்ட சந்தோஷத்தை அதனால் தாங்க முடியவில்லை! எனவே, அதன் இருதயமே நின்று விட்டது!



இப்படி நடப்பது எங்கே?



1. பருத்திப் பயிர் அறுவடைக் காலம். அதற்கும் விடுமுறை.
2. சர்வகலாசாலை வட்டத்திற்குள் பிரசவ விடுதியும் உள்ளது.
3. எந்த வரம்புமில்லாமல் ரயில் கூரை மேலும் எப்போதும் பயணம் செய்யலாம்.
4. "புகை பிடிக்கலாம் பெட்டி", "புகை பிடிக்காதே பெட்டி" என மாறி மாறி ரயில்களில் உள்ளது.
5. பதின்மூன்று அபசகுனமான எண்ணிக்கையாதலால் 'பன்னிரண்டரையாவது தெரு' என ஒரு தெருவுக்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

விடை: (1-2) ரஷ்யா. (3) பிஜித் தீவு. (4) இங்கிலாந்து. (5) வாஷிங்டன்.

ஆதாரம்: அமெரிக்கா முதல் அந்தமான் வரை.

தகவல்: அ. ஐ. ரங்கராஜன்

குப்பைக்கு யோகம்!


வீடுகளில் உள்ள குப்பைகளுக்கும் கழிவுப் பொருள்களும் சந்திக்கு வராமல் வீட்டுக்குள்ளிருந்தே பூமிக்கு அடியில் செல்லும் குழாய்கள் வழியாக எடுத்துச் செல்லக் கூடிய நவீன முறை ஒன்று ஸ்வீடனில் உள்ள ஸன்டிபர்க் என்னும் நகரில் உருவாகியுள்ளது. "வாக்குவம் லைன்" முறையில் இயங்கும் இம்முறை இப்போதைக்கு 250 வீடுகளுக்குச் சேவை செய்கிறது. ஆனால் விரைவிலேயே 5000 வீடுகளுக்கு இந்த இணைப்பு வசதி கிடைக்கும்.

ஒவ்வோர் வீட்டிலும் கழிவுப் பொருள்கள் எறிவதற்கான தொட்டி இருக்கிறதல்லவா, அந்தத் தொட்டிக்கு அடியில் ஒருபுறமாக இயங்கும் வால்வ் அமைப்புள்ள குழாய் இணைக்கப்படுகிறது. சுழல் விசிறிகளும், வடிகட்டிகளும் கொண்ட இயந்திர அறை ஒன்றின் இயக்கத்தால் அவ்வப்போது குழாய் வால்வுகள் மின்சக்தியால் உந்தப்பட்டுத் திறந்து கொள்கின்றன. குழாய்மூலம் கீழே செல்லும் குப்பையைக் கன வேகமான காற்று இழுத்துச் செல்லும். வினாடிக்கு 80-90 அடி தூரம் தள்ளிவிடுகிறது. கழிவுப்பொருளின் நாற்றம் தாங்கிய காற்று வடிகட்டிகளின் வழியாக வெளியேறுகிறது. கழிவுப்பொருள் எல்லாமாக மத்திய குப்பைத் தொட்டி ஒன்றில் சேர்ந்து விரைவாக அழிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு வால்வாக இயங்கிய பின் எல்லாக் கழிவுப் பொருள்களும் நிர்மூலமாவதுடன் சுழல்விசிறிகள் தாமே நின்றுவிடுகின்றன. கனமான கழிவுப்பொருள்களான டப்பாக்களையும் பாட்டில்களையும்கூடக் குழாய்கள் இழுத்துச் சென்று விடுகின்றன.

தகவல்: மீனாட்சி கிருஷ்ணா ஆதாரம்: காமர்ஸ்

ஹாலிவுட் நடிகை எலிஸபெத் டெய்லர் எந்த நிகழ்ச்சிக்கும் குறித்த நேரத்துக்கு வர மாட்டாராம். அதைப் பற்றி அவரது கணவர் ரிச்சர்ட் பர்டன் லைஃப் பத்திரிகையில் குறிப்பிடுகிறார்: ''எலிஸபெத் எந்த நிகழ்ச்சிக்காவது பதினைந்து நிமிஷங்கள் தாமதித்து வந்தால் அரை மணி முன்னதாகவே வந்துவிட்டதாக நினைத்துக் கொள்கிருள்.''



கண்ணாடி ஜாக்கிரதை!

கண்ணாடி டம்ளருக்குள் சூடாகப் பாலையோ காப்பியையோ ஊற்றுவதாக இருந்தால், முதலில் அந்த டம்ளருக்குள் ஒரு ஸ்பூனைப் போட்டு விட்டுப் பிறகு ஊற்ற வேண்டும். இப்படிச் செய்தால் கண்ணாடி உடையாது என்று உறுதி கூறுகிறது 'சவ்ஸ் விக்லி' பத்திரிகை!

தகவல்: ''பாபு''



புத்தக வெளியீட்டாளர்கள் எவ்வளவு தூரம் அப்பாவிகளாக இருக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்த அமெரிக்காவில் ஒருவர் டால்ஸ்டாயின் ''போரும் அமைதியும்'' என்ற பிரசித்தி பெற்ற நாவலின் முதல் நாற்பது பக்கங்களை நகல் எடுத்து அவற்றைப் பல பிரசுரகர்த்தர்களுக்கு அனுப்பி, ஒரு கடிதமும் எழுதினார். ''நான் ஒரு நாவலைத் தொடங்கியிருக்கிறேன். இத்துடன் அதன் முதல் நாற்பது பக்கங்களை அனுப்பியிருக்கிறேன். இதை நீங்கள் வெளியிடுவதாக இருந்தால், பாக்கியையும் எழுதி அனுப்புகிறேன்'' என்று அக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

''நாவலை நன்றாக ஆரம்பித்திருக்கிறீர்கள். மீதியையும் அனுப்புங்கள். புத்தகமாக வெளியிடுகிறோம்'' என்று உடனே பதில் வந்தது பிரசுரகர்த்தர்களிடமிருந்து!

'அணி' ஆதாரம்: ஸாடர்டே ரிவியூ



முக்கியமான தேர்தல்: மும்முரமாக வேட்பாளர்கள் பிரசார வேலை செய்து கொண்டிருந்தனர். வேட்பாளர் ஒருவரை எதிர்த்து ஒன்பது பேர் போட்டியிட்டனர். தேர்தல் முடிந்து ஓட்டு எண்ணிக்கை நடந்து கொண்டிருந்தது. நமது வேட்பாளர் முடிவுகளைப் பற்றிச் சிறிதும் அச்சமோ, கவலையோ, பரபரப்போ அடையாமல் ஜம்மென்று அன்று மாலை ஒரு திரைப்படத்துக்குப் போய் விட்டார். படம் முடிந்து வருவதற்குள் தேர்தல் முடிவுகள் வந்துவிட்டன. எந்த விதத் துடிப்பும், மகிழ்ச்சியும், ஆரவாரமும் இன்றித் தாமரை இலைத் தண்ணீர் போல, அமைதியாக அவர் அமர்ந்திருந்தார், தேர்தல் முடிவு அவருக்கு அறிவிக்கப் பட்டபோதும்.


...''செய்ய வேண்டிய பணியைச் செய்யவேண்டிய நேரத்தில் செவ்வனே செய்து முடித்து விட்டேன். பலன் எப்படி இருந்தால் என்ன?'' என்று நிருபர்களுக்கும் பதில் தந்த வேட்பாளர்: அன்றைய பிரசிடெண்ட் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற—கென்னடி! தகவல்: சிவசக்தி



உங்கள் ரப்பர் தோட்டங்களைப் பாதுகாக்க ஸோவாஸ்பிரே ஆயில் உபயோகியுங்கள்

கோட்டயத்திலிருக்கும் ரப்பர் ஆராய்ச்சிக் கூட்டத்தினரால் 1965ம் ஆண்டில் ரப்பர் தோட்டங்களில் நடத்தப்பட்ட விரிவான பரிசோதனைகளின் மூலமாக, ரப்பர் இலைகளை அரித்துத்தின்னும் ஃபைடோப்தோரா பாமிவோரா புடுல் என்ற ஒருவகை காளான்களை ஒழிப்பதற்கான தாமிர விஷ மருந்தைக்கரைக்க ஸோவாஸ்பிரே ஆயில் மிகவும் தகுதியானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற் கூறப்பட்ட காளான்களால் ஏராளமான இலை உதிர்வு ஏற்பட்டு மர வளர்ச்சி தடைபடுகிறது. எனவே லேடக்ஸ் ரப்பர் உற்பத்தியும் குறைந்துவிடுகிறது.

பருவமழை துவங்குமுன் ரப்பர் இலைகளின் மீது ஸோவாஸ்பிரே ஆயில்கரைக்கப்பட்ட தாமிர காளான் மருந்தை தெளிப்பதன் பயனாக ரப்பர் மரங்களில் இலைகளுக்கு நோய் வராமல் பாதுகாப்பு கிடைக்கிறது. கேரள ரப்பர் தோட்டங்களில் ஸோவாஸ்பிரே ஆயில் உபயோகித்து மருந்து தெளித்ததில் விசேஷ பயன் கிடைத்தது. இவ்வுன்னதமான, வெளிர் நிறமுள்ள ஸ்பிரே ஆயில் மெழுகுபோல் எளிதில் உருகும் தன்மையுடையது. பிசுக்குக் குறைவு, எளிதில் ஆவியாகக் கூடியது. ஆனால் எளிதில் பிராணவாயுச் சேர்க்கையினால் எரிந்துவிடாது. இந்த குணங்களுடன் கிருமி கீடங்களையும் காளான்களையும் ஒழிக்கும் திறமையும் அதிகரித்திருப்பதனால், தாமிர காளான் மருந்துகளை கரைப்பதற்கு இணையற்ற சாதனமாக விளங்குகிறது. கேரள ரப்பர் தோட்டங்களில் ஒரு எண்ணெயில் கரைத்த காளான் மருந்துக்கான தேவையின் பெரும் பகுதியை ஸோவாஸ்பிரே ஆயில் பூர்த்தி செய்கிறது.



இந்தியனாயில் உங்களுக்கு வேண்டிய ஸோவாஸ்பிரே ஆயில் தேவைகளைப் பூர்த்தி செய்யும். கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி விசாரியுங்கள்:

இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிமிடெட்,
(மார்கெடிங் டிவிஷன்) 255, மகாத்மா காந்தி ரோடு,
எர்ணாகுலம்-5

இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிட்.



hta-IOC-6821 TAM





அழைப்புக் கதை

கிரி பேசிவிட்டான்!

ஆர். சூடாமணி

சகிக்க முடியாத அலட்டு படர்ந்து விட்டது. திடீரென்று இதயத்தினுள் புயற்காற்று வீசி விட்ட மாதிரி உள்ளெங்கும், நினைவின் தளமெங்கும் எல்லாம் ஆடிவிட்ட பிச்சமாக ஒரு வெறிச்சென்ற சூனியம். இது எவ்வளவு அறிவீனமான உணர்ச்சி என்பது எனக்குத் தெரியாமலில்லை. ஆனால், பாதையோரப் புதரில் முள் குத்தும் போது அதற்கு உள்ளத்தில் எதிர்விளைவு தோன்றுவது மடமை என்று அறிந்திருந்தாலும் தோலில் மனம் கூசுவதில்லையா? முள் இறங்கிய இடத்தில் ரத்தினப் பொட்டாகக் குருதி எழுவதில்லையா?

யோசிக்கப் போனால் கிரியின் தவறு ஏதுமில்லை. அவன் பிரேமாவின் இருபதாம் வயதில் வந்து சேர்ந்து கொண்டவன்தானே! இனி வரப் போகும் காலம்தான் அவனுக்குச் சொந்தமே தவிர, அவளுடைய இந்த இருபது ஆண்டுகளும் அவனுக்கு அந்நியமானவைதாம். அவற்றில் விளைந்த அவள் குழந்தைத் தன்மை, அவள் விளையாட்டு, அவள் வளர்ச்சி, சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்ட கிரியின் கட்டங்கள், முன்னேற்றங்கள், முதிர்ச்சி—இவையும் பிறவும் அவனுக்கு என்றும் அந்நியம் தான். குழந்தையாய் இருந்த போது 'ர' உச்சரிப்பு வராமல் ''உன் பேரென்னம்மா?'' என்ற கேள்விக்கு ''ப்லேமா'' என்று பதில் கூறியிருந்தவள் முதல் முறையாக மழலை திருந்தித் தன் வன்மையைக் கண்டு கொண்ட தினம் வியப்பு நிறைந்த உவகையுடன் ஓடி வந்து ''எனக்கு வந்துடுத்து! இப்போ கேளு?'' என்று, ''உன் பேரென்ன?'' என்ற கேள்வியை வலிய வருவித்துக் கொண்டு, ''ப்ரேமா! ப்ரே.... ரே... ரேமா!'' என்று பெருமையை யெல்லாம் அந்தப் புதிய உச்சரிப்பில் பொருத்திப் பதில் இசைத்த காட்சியை அவன் அறிய மாட்டான். நான் தான் அறிவேன். ''எங்கக் காவை அழைச்சுண்டு போக வந்துட்டயா? பாருடன்னே'' என்று பிஞ்சுக் கைகளால் என் மார்பில் குத்தி முகம் சிவக்கக் கோபித்து நின்ற குழந்தையை அவன் அறிய மாட்டான், நான் தான் அறிவேன். பூத்த முழு மலரை அவன் கைகளில் ஒப்படைத்தாகி விட்டது என்றாலும் அதற்கு முன் சின்னஞ் சிறு மொட்டு நின்றிருந்த காட்சியையும் அதில் ஒவ்வொன்றாக இதழ்கள் அவிழ்ந்து கொண்ட ஆக்கப் பருவங்களையும் பார்த்திருந்தவன் அவனல்ல, நான் தான். அப்படி மூகையாக அறிந்தவனின் கண்களில் மலருக்குப்பின் என்றும் அந்த மூகையேதான் காட்சியளிக்கும் என்பதைக் கூட அவன் அறியாமற் போய் விட்டானே என்பதுதான் என் குறை.

பிரேமாவுக்குக் கல்யாணமாகி விட்டது என்பதால் மட்டுமே அவளைப் பெரியவளாகக் காணவோ நடத்தவோ என்னால் முடியவில்லையே !

எண்ணங்களின் கனத்தில் தலை நோவு எழுந்தது.

''சாந்தா! கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொண்டு வர்றயா?'' என்று குரல் கொடுத்தேன். உள்ளே எட்டிப் பார்த்த சாந்தாவின் முகத்தில் புதுமையான வியப்பு, பிறகு பரிவு கரந்த இரக்கம். இந்தக் கேள்வி அவளுக்குப் புதிது. இத்தனை ஆண்டுகளில் நான் மைத்துனன் மணியின் வீட்டுக்குச் சென்றிருந்த சமயங்களிலும் சரி, பிரேமா என் வீட்டுக்கு வந்திருந்த சமயங்களிலும் சரி, எனது இம்மாதிரி தேவைகளுக்கு நான் பிரேமாவை அழைப்பதுதான் வழக்கம். சிறிய பணிகளுக்குச் சின்னக் குழந்தைகளை ஏவுவதுதானே சகஜம்? சாந்தாவை நான் மணம் புரிந்து கொண்ட போது மணிக்குப் பதினைந்து வயது, பிரேமாவுக்கு மூன்று வயது. ''இந்தாம்மா, பாப்பா ! கீழே விழுந்த அந்தக் காகிதத்தை எடுத்துக் கொடு'' என்பது போல் நாற்காலியை விட்டு எழுந்திருக்க மனமின்றி அவளைப் பணி கொண்ட பழக்கம் நாளடைவில் நிலைத்து விட்டது. அவளுக்குப் பழங்களும் மிட்டாயும் வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு, ''வெயில்லே வந்தது களைப்பாயிருக்கு பிரேமா, உள்ளேயிருந்து அத்திம்பேருக்குக் கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் கொண்டு வர்றயா ?'' என்று சிறுமியிடம் கேட்பேன். அவள் குதித்துக் கொண்டு ஓடுவாள். ஆண்டுகள் சென்ற போதும் அவள் என் வரையில் குழந்தைதான். ''பிரேமா, நான் காப்பி குடிச்சுட்டு வந்துட்டேன், எனக்காகக் கலக்க வேணும்னு உள்ளே சொல்லிடறயா?'' ''பிரேமா, நேற்றுப் பேப்பரைக் கொஞ்சம் மாடியிலேயிருந்து எடுத்துண்டு வாம்மா, ஒரு விஷயம் பார்க்கணும்''. ''பிரேமா! இந்தத் தம்ளரை உள்ளே கொண்டு போய் வெச்சுடு'' என்பது போல் அவளை ஏவல் கொண்டபோதெல்லாம் அந்த வளரும் பெண்ணைக் குழந்தையாய்க் கருதிய சலுகையில் விகல்பமே தோன்றவில்லை. என் மாமனாரும் மாமியாரும் இறந்த பிறகு மணியும் பிரேமாவும் என்னை ஒரு மூத்த சகோதரனாகவே கொண்டு விட்டனர். எங்கள் நெருக்கம் முன்பைவிட அதிகமாகியது. மணியின் குடும்பத்துடன் பிரேமா வசித்து வந்தாள். என் வீடும் உள்ளூரிலேயே இருந்ததால் போக்குவரவு குறையவில்லை.

இன்று நான் திடீரென்று சாந்தாவை அழைத்து எனக்குத் தண்ணீர் கொண்டு வரச் சொன்ன போது அவளுக்கு மட்டுமா வியப்பு? எனக்கும்தான். என் பேச்சு என் காதுகளிலேயே அதிர்ச்சியுடன் ஒலித்தது. பேச்சு! வெறும் ஒலிக் கோவைதான். ஆயினும் மாறுபட்ட ஒரு மன நிலையையே பிணைவுபட்ட மனத்தையே – காட்டிவிடும் வல்லமையல்லவோ அதனுடையது! இது நாள் வரை நிலவியிருந்த சகஜத்தில் விரிசல் விழுந்துவிட்ட ஏக்கத்தை அது வெளியிட்டு, அந்த உணர்வைப் புரிந்து கொண்ட துயரத்தில் சாந்தாவின் முகமும் என் குரலும் கருமை கொண்ட போது பேச்சின் கொடுங்கோன்மையை எண்ணி வெதும்பாமலிருக்க முடியவில்லை.

இந்த வித்தியாசத்தை விளைத்துவிட்டதே கூட ஒரு பேச்சுத்தானே ! நேற்று மணி பேசி விட்ட பேச்சு. அதைக் கேட்டதிலிருந்து பிரேமாவின் முகத்திலிருந்து சிரிப்பு விலகி விட்டது. என்னுள் துடிப்புக் கனன்று விட்டது. சாந்தா ஒருத்திதான் அதிகப் பாதிக்கப்படாதவள் போல் இருந்தாள். இப்போது என்மேல் அவள் பதித்த பார்வையிலிருந்த இரக்கமும் என்னை ஏதோ சமாதானப் படுத்த முயல்வது போலத்தான் இருந்தது.

''தண்ணீர் என்னையா கேட்டீர்கள்?''

அவள் குரல், தூங்கும் மகனை மெதுவாக நினைவுக்குத் தட்டி எழுப்பும் கரம்போல் வந்தது.

''ஆமாம்.''

அவள் சிறிது நேரம் அசையாமல் நின்றாள். நீரினுள் இட்டு அளைந்த கையை மறுபடியும் வெளியே எடுக்க மறந்துபோய்விட்டது போல் அவள் முகபாவம் தேங்கிக் கிடந்தது.

''ரொம்பத் தாகமாயிருக்கு சாந்தா. சீக்கிரம் போய்த் தண்ணீர் கொண்டாயேன்.''

நிழலசைவாக அவள் உருவம் அங்கிருந்து சரிந்தது. பிறகு உள்ளேயிருந்து அவள் குரல்.

''இந்தா பிரேமா, இந்தத் தண்ணீரை உன் அத்திம்பேர்கிட்டே எடுத்துண்டு போய்க் கொடு.''

எனக்குத் திக்கென்றது. அதன் எதிரொலி போல் அங்கும் உணர்ச்சியில் இடறி விழுந்த ஒரு மௌனம்.

''வேணாம் அக்கா. நீயே கொண்டு போய்க் கொடுத்துடேன்.''

''எனக்கு அலுப்பாயிருக்குடி.''

''எனக்கும்தான். நான் போய்க் கொஞ்ச நாழி ஒய்வாய்ப் படுக்கப் போறேன்.''

''இதைக் கொடுத்துவிட்டு அப்புறமாய்ப் போய்ப் படுத்துக்கோ.''

''வேணாம், அக்கா.....''


''அசடு! நான் சொல்றதைக் கேளு. உனக்குக் கூடாததை நான் சொல்வேனா?''

ஸ்தம்பித்துப் போன மௌனம். அதன் ஆழத்தில் என் உள்ளத் துடிப்புக்கள் ஒலித்து இடியாய் முழங்கின. கதவருகே புதுப் புடவை சலசலத்தது.

''தண்ணீர்.''

குனிந்த தலை நிமிராமல் பிரேமா வந்து தம்ளரை என் அருகிலிருந்த மேஜை மீது வைத்தாள். கவிழ்ந்த முகத்தின் மேல் வகிடும் மூக்கு நுனியுமே தெரிந்தன. ஆனால் அவற்றில் இருந்த நோவு எனக்குத் தெரியும். எனது இதயக் கூசலின் மறுபாதி தானே அங்கே? சகஜமாய்ச் சிரித்துக்கொண்டு ''எப்போ பார்த்தாலும் தண்ணீர் குடிக்கிறாளே, ஒட்டகமா நீங்க?'' என்று என்னைப் பரிகசிக்கும் சலுகைச் செல்லும் இதந்த கதவு போன்ற குழந்தைக் குரலும் மறைந்து விட்டன. துடுக்கிட்ட விழைந்த பார்வையின் விரைவில், பேச அருகப் போனதில், முகத்தை நேராகப் பார்க்கக் கூசும் தயக்கத்

அவேதனில்
ஏன்
அற்புத
'எபேப்'
சேர்க்கப்
பட்டுள்ளது?



தலைவலி, நோவுகள்,
ஜலதோஷம், ஃப்ளு
முதலியவற்றிலிருந்து
உங்களுக்கு, மேலும்
துரிதமான, தீமையற்ற,
நிச்சயமான நிவாரணம்
அளிப்பதற்கு தான்.



அற்புத 'எபேப்' அடங்கிய
ஸ்க்விப்®

அவேதன்®

சில நிமிடங்களுக்குள்
செயல் புரிந்து, மணிக்
கணக்காகப் பயனளிக்கிறது!

சாப்பிடும் அளவு: 1-2 டேப்லெட்டுகள்

பின் வரும் உபாதைகளுக்கு அவேதன் சாப்பிடுங்கள்: தலைவலி, பல்வலி, தசைநார்களின் வலி, ஜலதோஷம் ஃப்ளு, பெண்களின் அசௌகரியமான நாட்கள், மற்றும் இதர வலிகள்

SQUIBB®

சாராபாய் கெமிகல்ஸ்

® இ. ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்பொரேட்டடின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்குகளும். சாராபாய் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

(Shilpi SC-36A/66 Tam.

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது

[illegible]

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்




[illegible]



[illegible]

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலிநிவாரணியாகும்.





புதிய

மைக்ரோஃபைன்ட்

ஆஸ்ப்ரோ

அதி வேகமாக
வலியை வெளியே
இழுத்துவிடுகிறது

நிக்கோலஸ் (N) தயாரிப்பு

திக் புதியதோர் உணர்வின் தவிப்பு பர பரத்தது. அண்ணன் — தங்கை போன்ற தந்தை — மகள் போன்ற, எங்கள் நெருக்கத் தில் அன்பு அருவமான புனித மணமாய்க் கலந்திருந்ததே தவிர, அதில் ஆண் — பெண் என்ற கோணத்தின் தூலச் சுவட்டுக்கு இடமே கிடையாது. நேற்றுத்தான் அப்படி ஓர் அர்த்தத்தை நினைத்துவிட்ட தன்மை கிரியின் பேச்சில் தொனித்து விட்டது. எத்தனையோ ஆண்டுகளின் பழக்கத் தொடர்ச்சியாக நேற்று பிரேமா என்னிடம் ஏதோ வேடிக்கையைக் கூறிப் பகிர்ந்து கொண்டபோது இருவருமாய்ச் சேர்ந்து சிரித்தோம். அறையில் அப்போது வேறு யாரும் இல்லை. அந்தத் தனிமைதான் அவனுக்குப் பெரும் ஆட்சேபமாகிவிட்டது. அண்டவெளியின் தனிமையில் தூய்மை குலையும் காற்று உண்டோ? ஆனால் கிரிக்கு அது புரியவில்லை. அவன் பேசிவிட்டான்.

அதன் விளைவு இதோ இந்தக் குழந்தை என் முன் தன்னைப் பெண்ணாக உணர்ந்து கூசித் தவிக்கிறாள். இந்தப் புதிய உணர்விலே அவளுள் ஏ வேதனைதான் நிறைந்திருந்தது. புண்பட்டுவிட்ட துடிப்பு, புண்படுத்திவிட்ட கணவனிடம் சினம் ஆயினும் ஏதும் செய்ய முடியாத திகைப்பின் ஆற்றாமை. நானும் தவித்துக் கொண்டுதான் இருந்தேன். சாந்தா எதற்காக இவளை இங்கு அனுப்பியிருக்கிறாள்? கிரி பார்த்து விட்டால் விபரீதம்தான். நேற்று முதல் பிரேமாவும் நானும் ஒருவரை யொரு வர் பார்க்கவே சங்கடப் பட்டுக் கொண் டிருந்தோம். நாங்கள் பார்த்துக்கொண்டால் பழகிக் கொண்டால் பழைய சலுகையுடன் தான் பழகுவோம். மரியாதையோ, ஒழுக் கமோ எங்களது பழக்கத்தின் எளிமையில் விகல்பமாகத்தான் தோன்றியது. அது கிரிக்குப் பிடிக்கவில்லை யென்றால் நாங்கள் பார்த்துக் கொள்ளாததே மேல். அவனுக் காக நான் திடீரென்று அவளைப் பெரியவ ளாய் நடத்த முடியுமா? அல்லது அவள் தான் என் முன் குழந்தையாய் இருப்பதை மாற்றிக் கொள்ள முடியுமா?

நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். அவள் தண்ணீரை வைத்து விட்டு வேக மாய் அங்கிருந்து சென்று விட்டாள். கரை கட்டி நின்ற துக்கத்தின் விளிம்பில் நாங்கள் நெஞ்சை மூடிக் கொண்டு ஒதுங்கிக்கொண் டோம். "ஒட்டகமா நீங்க?" என்ற சிரிப்புக் கேள்வியின் இல்லாமை எங்கள் கோவிலின் தெய்வத்தை மூளியாக்கி விட்டது. கள்ள மில்லாத ஓர் இடத்தில் ஒரு பிரச்னையை வளர்த்துவிட்டான் கிரி.

மாலை நான்கு மணி இருக்கும். கூடத்துக் குள் நான் நுழைந்தபோது பிரேமா, கிரி, மணி அவன் மனைவி நால்வரும் அமர்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தார்கள்.

சற்றே கலகலப்பில் விரிந்திருந்த பிரேமா வின் முகம் நான் உள்ளே அடி வைத்ததும் காய்ந்த பூமி நீரை இழுத்துக் கொள்வது போல் மலர்ச்சியை உள்ளே உறிஞ்சிக் கொண்டு இறுகிப் போயிற்று. தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்டு உடலைச் சுருக்கிச் சேர்த்து உட்கார்ந்தாள். யார் கண்ணிலும் படாத சிறு புள்ளியாய் மறைந்துவிட விழைந்தவள் போல்.

என்னைக் கண்டதும் மணி, "நீங்க வாங்க ளேன் ஸார், ஆட" என்றான்.

"வேணும் மணி. நீங்க நாலு பேர்தான் இருக்கிறீர்களே, மேலே ஆடுங்கள். நான் வரல்லே" என்றவாறு மெதுவாகத் திரும்ப ஆரம்பித்தேன்.

"எனக்கு ஆடி அலுத்துப் போச்சு. நானே எழுந்திருக்கணும்னு இருந்தேன், நீங்களும் வந்தீர்கள். என் சீட்டை வச் சிண்டு ஆடுங்களேன்" என்ற மணி கிரியின் பக்கம் திரும்பி "எங்க அத்திம்பேர் ரொம்ப நன்னா சீட்டாடுவார் ஸார்! நாங்களெல்லாம் அவரோடு ஆட உட்கார்ந்து விட்டால் நேரம் போவதே தெரியாது" என்றான். நேற்று கிரி பேசியிருந்ததை மணி செவி யுற்றிருக்கவில்லை. நடந்த விஷயம் ஒன்றுமே அவனுக்குத் தெரியாது.


கிரி மௌனமாயிருந்தான்.

முகத்தில் பாய்ந்த வெம்மையை ஒற்றி எடுக்க விரும்புகிறவன் போல் நான் கைக் குட்டையால் துடைத்துக் கொண்டவாறே, "இல்லே, மணி, எனக்கு இப்போ ஆடணும் போல் இல்லே. நீயே தொடர்ந்து ஆடு" என்றபோது நான் விலக்கிக் கொண்ட கண் களின் விளிம்புக்கு அப்பால் பிரேமாவின் உருவம் என் உள்ளச் சுமையின் அடையாளம் போல் கனத்துக் கொண்டிருந்தது.

"ரொம்ப பிகு பண்ணிக் கொள்ளறீங் களே ஸார்! சும்மா வாருங்கள். எனக்குக் கொஞ்ச நேரம் ரெஸ்ட் கொடுக்கக் கூடாதா?"

தகுந்த ஒரு மறுதளிப்புக்காக நான் யோசித்த நொடி நேர மௌனத்தைப் பிரேமா என் இசைவு என்று எண்ணி எழுந்து நின்றாள்.

"எனக்கும் சுவாரசியமா யில்லே அண்ணா!



கேள்வியும் பதிலும்!

ஆபிரகாம்லிங்கன் மிகவும் உயரமான மனிதர். இதை அவர்களுடைய நண்பர்கள் அடிக்கடி கேலி செய்வதுண்டு. அதுவும் லிங்கனுக்குக் கால்கள் மிகவும் நீளம். ஒரு முறை ஒரு நண்பர் இதைக் கேலி செய்வதற் காக லிங்கனிடம், "லிங்கன்! பொதுவாகக் கால்கள் எவ்வளவு நீளமிருக்க வேண்டும்?" என்று கேட்டார்.

"சாதாரணமாக இடுப்பிலிருந்து தரை யைத் தொடும் அளவுக்குஇருந்தால் போதும்" என்று பளிச்சென்று பதில் வந்தது லிங்கனிட மிருந்து.

— கேசியார்

''எப்ப இது பிரேமா?'' என்றான் மணி.

''தலை வலிக்கிறது அண்ணா!''

அவன் போக ஆரம்பித்தான். கிரி நிமிர்ந்து பார்த்தான். ''தலை வலியா! அப்போ சாயங்காலம் நம்ம சினிமா புரோகிராம்? அதுக்கு வரமுடியுமா பிரேமா?''

அந்தக் கேள்வி காதில் விழாதது போல் பிரேமா சென்றுவிட்டாள். அந்தப் புதிய உறவினனின் விருப்பத்தை மீறிப் பழைய சலுகைகளை நிலைநாட்டிக் கொள்ள இயலவில்லைதான். ஆயினும் என்னை அன்னியன் போல் நடத்த வேண்டிய அவசியத்தை விளைத்துவிட்டவனை அவளால் மன்னிக்கவும் முடியவில்லை. அந்தக் குழந்தையும் ஒரு பெண்தான். அந்தப் பெண்மை அடிபுண்டிருந்தது.

தூயதான ஒன்று இன்னும் தூய்மையாகவே இருந்தபோதிலும் நாங்கள் மருண்டு விலகி நிற்க வேண்டிய நிலையில், அந்தப் பயத்தினால் அன்பின் தெய்வீகத்தையே அவமானப்படுத்தும் நிர்ப்பந்தத்தை எங்களுக்கு ஏற்படுத்தியுள்ளவனிடம் நாங்கள் சினம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அந்தச் சினத்தின் பின்னே தாள இயலாத வேதனை. ஆயினும் சீட்டாட உட்கார்ந்தேன். இப்போது நான் மறுத்தால் பிரேமா இல்லாததனால் நான் ஆடவில்லை என்று அர்த்தம் விழுந்து விடுமோ என்பதாக ஒரு மருள்.

மனக் குழப்பங்களுக்கு முதல் முடிச்சே வேறொருவர் தந்துவிட்டால் நாமாக மேலே மேலே சிக்கலாக்கிக் கொள்வதுதானு கஷ்டம்!

இரண்டு மாதங்களாயின.

பிரேமா புக்ககத்தில் வசித்துக் கொண்டிருந்தாள். ஊரின் மறு கோடியில் அவள் வீடு. அவள் என் வீட்டுக்கு வராமலும், நான் அங்கு செல்லாமலும் இருந்ததற்கு இந்தத் 'தொலைவு' மட்டுமா காரணம்?

அன்று காலை நான் அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். ஒரு டாக்ஸியிலிருந்து கிரியும் பிரேமாவும் இறங்கினர்.

மலைத்து அகன்ற என் கண்களின் பார்வை யோரங்களினின்று ஒதுங்கிக் கரையேறி, மறைந்துவிடும் பாவனையில் பிரேமா, ''அக்கா!'' என்று அழைத்தவாறு வேகமாய் உள்ளே சென்று விட்டாள். நான் கிரியை வரவேற்பதில் ஈடுபட்டேன்.

அவனைக் கண்டதில் உள்ளூற ஒரு திருப்தி. என் சொந்தக் குழந்தைகளை விட மூத்த என் முதல் குழந்தையாகக் கருதி வந்த அவனைப் பாராமலேயே இருந்த குறைக்கு ஓர் ஆறுதல்!

''எனக்கு மாற்றலாயிடுத்து ஸார். அடுத்த வாரம் பம்பாய்க்குப் போகிறேன். பிரேமா ஊருக்குப் போகு முன் தன் மனிதர்களோட கொஞ்சம் இருக்கணும்னு ஆசைப்பட்டாள். போன வாரம் அவள் அண்ணா வீட்டுக்கு நாலு நாட்கள் அனுப்பியிருந்தேன். இன்னிக்கு அக்காவோடு இருக்கட்டும். சாயங்காலம் வந்து அவளை அழைச்சுண்டு போறேன். நீங்க ஆபீஸிலேந்து வரதுக்குள்ளேயே நான் வந்துட்டுப் போயிடறதனால் இப்பவே உங்ககிட்டே 'போய்ட்டு வரேன்'னு சொல்லிண்டுடறேன்.''

அடியினால் கூசி மௌனமானேன். அக்காவின் வீட்டில் மட்டும் ஒரே நாள்! அதுவும் ஒரே பகல் பொழுது! நான் வெளியில் கிளம்பும் சமயம் அவனே அழைத்து வந்திருக்கிறான். மாலையில் நான் திரும்பி வரும் முன் கூட்டிப் போய்விடுவான்.

வாலிபன். சிறு பையன். முதிராக் கனவொளி முகத்தில் இன்னும் பூரணமாய் மறையவில்லை. ஆயினும் அவன் ஆளை யிடுகிறான். என் நரைத்த தலை தாழுகிறது.

அவன் சென்று விட்டான்.

உள்ளே திரும்பினேன். தவிப்புடன் என் கண்கள் பிரேமாவைத் தேடினும் அவளை நினைத்துத் தம்முள் கூசிக்கொண்டு இடுங்கிப் போயின. சகோதரியுடன் பேசிக் கொண்டிருந்தவளின் முகத்தை ஒரு தரம்தான் நிமிர்ந்து பார்த்தேன். நான் அறிந்திருந்த சிறுமியின் பொலிவையும் உற்சாகத்தையும் காணோம். ஏக்கம்தான் படர்ந்து கிடந்தது. எழும்பும் மலர்ச்சியை மூடி போட்டுப் புழுக்கிவிட்ட நசிவு. எப்போதேனும் மேல் விளிம்பில் ததும்பித் தென்படும் ஓர் உணர்ச்சிக் குமிழிதான். மற்றப்படி அந்த முகம் மூடிய புத்தகமாய்த் தன்னுள்ளேயே எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டிருந்தது.

எத்தகைய வாட்டம்? ஏன்? என் விஷயத்தில் கிரி வெளியிட்ட குணத்தின் தன்மையைத்தான் அவன் ஒவ்வொரு விஷயத்திலும் அவளிடம் காட்டி வருகிறானோ? கணவனே அப்படி இருந்தால் பிறகு ஏது விமோசனம்? எது அழுக்குற்றாலும் தண்ணீர் கொட்டிக் கழுவலாம். தண்ணீரே அழுக்குப் படிந்திருந்தால் எதைக் கொண்டு அதைக் கழுவுவது?

''என்னம்மா பிரேமா, சௌக்கியமாயிருக்கிறாயா?'' என்று சுவரைப் பார்த்துக் கேட்டுவிட்டு அவள் பதிலுக்குக் காத்திராமலேயே ''ஆபீசுக்குப் போயிட்டு வரேன் சாந்தா'' என்று கூறியவாறு வெளிப்பக்கம் விரைந்தேன்.

மாலை நான் வீடு திரும்பியபோது பிரேமா கிளம்பிப் போயிருப்பாளென்று எண்ணினேன். ஆனால் உள்ளே இரு சகோதரிகளின் குரல்களும் ஏதோ உரையாடல்களில் ஒலித்துக்கொண்டிருந்தன. கிரி இன்னமும் வரவில்லை போலிருக்கிறது.

நாற்காலியில் அமர்ந்து கொண்டேன். தாகத்தில் நாவு துடித்தது. கூடவே, முன்பு போல் ''பிரேமா, கொஞ்சம் தண்ணீர் கொண்டா'' என்று சலுகையுடன் உரைக்க விழைந்த தாபத்திலும் நாத் துடித்தது. ஆனால் என்ன பயன்? ''ஒட்டகமா நீங்க?'' என்ற பரிகாசமின்றி அந்த நீர் தாகம் தணிக்காதே!

உள்ளே பிரேமா கேட்டுக் கொண்டிருந்தாள். ''அத்திம்பேர் உடம்பு இளைச்சாப்பலே இருக்கே அக்கா! ஏன் அப்படி? உடம்புக்கு ஒன்னுமில்லையே?''

''இதை உன் அத்திம்பேரையே கேளேன்! அவரோட பேசாதவளா என்ன நீ?''

எல்லாம் தெரிந்தும் சாந்தா இப்படிச் சொல்லிச் சிரிக்கிறாளே! பிரேமாவின் மௌனம் என் நெஞ்சில் உறுத்தியது.

''சாந்தா! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாயேன்!'' என்று குரல் கொடுத்தேன்.

''வந்துவிட்டீர்களா? அடி பிரேமா, நீ அத்திம்பேருக்குத் தண்ணீர் கொண்டு போய்க் கொடு.''

மௌனம் தொடர்ந்தது.

''போயேண்டின்னு?''

''சும்மா இரு அக்கா.''

''நீ போகவேண்ணு அவர் நாக்கு வறண்டே இருக்க வேண்டியதுதான். ஏன்னு நான் கொண்டு போகப் போறதில்லே. காப்பி தான் கலக்கப் போறேன்.''

''அக்கா, உன்னே என்ன செய்யறதுன்னு எனக்குத் தெரியலே.''

''ஒண்ணும் செய்ய வேணும். சொல்றபடி கேளு. போதும். தண்ணீரையும் டிபனேயும் எடுத்துண்டு போ. நான் காப்பி கொண்டு வரேன்.''

''ஐயோ அக்கா...'' அந்தக் குரலில் சற்றே நடுக்கம் தொனித்தது.

''என் பேச்சைக் கேளு பிரேமா.''

பேச்சு! கிரியின் பேச்சு என் நினைவில் சுரீரென்று சுட்டது. தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்தேன்.

அறைக்குள் அரவம். பிரேமா டிபன் தட்டையும், தண்ணீரையும் மேஜைமேல் வைத்தாள். எனக்குப் பதைத்தது. இந்தச் சமயத்தில் கிரி வந்துவிடாமல் இருக்க வேண்டுமே!

தூய்மையையும் பயப்படச் செய்யும் உலகின் தன்மை என்னுள் கல்லாய்க் கனத்தது.

பிரேமா திரும்பினாள். இதற்குள் கையில் காப்பித் தம்ளருடன் சாந்தா உள்ளே நுழைந்தாள்.

''நில்லுடி பிரேமா. அதுக்குள்ளே எங்கே ஓடறே? மூணு பேருமாய் உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசலாம் வா. நீ பம்பாய்க்குப் போய்விட்டால் அப்புறம் உன் அத்திம்பேரும் நானும்; உன்னே அடிக்கடி பார்க்க முடியுமா?''

''நீங்க ரெண்டு பேரும் பேசுங்கள் அக்கா. நான் கொஞ்சம் உள்ளே போய்ட்டு வரேன்.''

''நாங்க பேசறதுதான் இருக்கவே இருக்கே! இப்படி உட்காரு.'' சாந்தா என் பக்கம் திரும்பினாள். ''குழந்தை வந்திருக்காள். நீங்கபாட்டுக்குப் பேசாமே முகத்தைத் தூக்கிண்டிருந்தால் என்ன அர்த்தம்?''

''மாப்பிள்ளை எப்போ வரேன்னு ஏதாவது சொன்னாரா?'' என்றேன்.

''அதை அவளேயேதான் நேராகக் கேட்கக்கூடாதா? மாப்பிள்ளை வரபோது வரட்டும். நாம மூணு பேருமாய் அதுவரைக்கும் சீட்டாடலாம் வாருங்கள்.''

''சும்மா இரு சாந்தா.''

''ஏன்? ஆட்டத்திலே தோற்றுப்போயிடுவோமோன்னு பயமா யிருக்கா?'' என்று சாந்தா சிரித்தாள். எனக்கு எரிச்சலாயிருந்தது.

''போதும் அக்கா. என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே'' என்றபோது வேதனை கலந்த கோபத்தால் பிரேமாவின் கண்களில் நீர் ததும்பியது.

''எல்லாம் தெரிஞ்சும் நீ இப்படிப் பேசினால் நான் எங்கேயாவது வெளியே கிளம்பிப்போயி டுவேன், சாந்தா!'' என்றேன் ஆத்திரமாக.

''அசட்டுத்தனமாக ஏதாவது உளறுகிறீர்கள்.'' சாந்தாவின் குரலில் திடீரென்று ஆழமும் கம்பீரமும் நிறைந்தன. ''நானும் தான் பார்த்துண்டே வரேன். ஆனாலும் உங்க ரெண்டு பேருக்கும் மூளையே கெட்டுப் போச்சு. அவன்தான் ஏதோ சொன்னு னென்றால் இப்படியா ஒருத்தரை ஒருத்தர் விலகிண்டு ஓடணும்? பிரேமாவாவது சின்னவள். உங்களுக்கு யோசனை எங்கே போச்சு?''

நான் அவளை நிமிர்ந்து பார்த்தேன். என் முகத்தைத் தீர்க்கமாய் நோக்கிச் சாந்தா பேசினாள்.

''அவன் சின்னப் பையன். கல்யாணமான மூன்றாம் நாள் ஏதோ சொன்னால் அதுக்கு என்ன அர்த்தம்? பெண்டாட்டியை அடைந்துவிட்ட பெருமை. கணவன் தனத்தில் ஒரு லயிப்பு. புதுசாய்ப் பொங்கிக் கொண்டிருக்கும் அந்த உணர்வு மனசை வெள்ளாம் நிரப்பி விடுகிறது. அதிகாரம் பண்ணச் சொல்கிறது. 'அவள் என்னுடையவள்' என்கிற பெருமையும் சந்தோஷமும் மற்றவாளோடு அவள் பேசக் கூடாது, சிரிக்கக் கூடாது அப்படின்னு ஒரு உணர்ச்சியாய் வெளிப்படறது. அவ்வளவுதான். அது பொறுமை யில்லே. சிறுமையான மனப்பான்மை யில்லே. கல்யாணங்கிற உறவு மனிதனுக்கு எத்தனை முக்கியமாயிடறது என்கிறதைத்தான் அது காட்டறது. அது ஒரு வேகம். அப்படிப் பேசிவிட்டதுக்காக அவனே நாலு நாள்பொறுத்து வெட்கப்படாமல் இருந்திருக்க மாட்டான். அந்த ஒரு கடந்துபோற மனநிலைக்கு எத்தனை முக்கியத்வமும் கொடுக்கிறதாம்? அதுக்காகப் பிரேமாவோட பேசாமலும் பழகாமலும் இப்படி நீங்க நடந்துக்கிறது நன்னாவே யில்லே. அவளை மட்டும் நீங்க குழந்தைன்னு நினைச்சாப் போறது. கிரியையும் சின்னவன்னு நினைச்சுப் பார்த்து அவன் பேசியதைப் புரிஞ்சுக்கணும். அப்போத்தான் விஷயத்தை இப்படிப் பெரிசு பண்ணாமல் இயல்பாய் நடந்துக்க முடியும்.''

என்னுள் ஏதோ அதிர்ந்து விழித்துக் கொண்டாப் போல் இருந்தது. கண்களை அகல விரித்து அவளைப் பார்த்தேன். பிறகு பிரேமாவைப் பார்த்தேன். அவள் முக இறுக்கத்திலும் ஏதோ புதியதோர் அசைவு. தெளிவைத் தேடும் கேள்விக் குறியில் அவள் கண்கள் சாந்தாவை வளைத்தன.

டெலிபோன் மணி அடித்தது. நான் ரிஸீவரை எடுத்தேன்.

''நீங்கதானே ஸார்? கிரி பேசறேன். நான் இன்னிக்கு வரலே. பிரேமாவுக்கு ஒரே நாளில் அங்கேயிருந்து வந்துட்டால் குறையா யிருக்கும். தன் அக்காவோடும் உங்களோடும் அவள் ஆசை தீர நாலு நாட்கள் இருக்கட்டும். அடுத்த புதன்கிழமை நீங்களே அவளை அழைச்சுண்டு வந்துவிட்டுடுங்கோ. முடியுமா ஸார்?''

இதுவும் பேச்சுத்தான். ஆனால் — எத்தனை வித்தியாசம்!

''பிரேமா, தண்ணீரை இப்படிக் கொடு.'' என்றேன் எளிமையாக, செய்தியை விவரித்த பின்.

''ஒட்டகமா நீங்க?'' என்று சிரித்தவாறு அவள் தம்ளரை எடுக்க விரைந்தாள்.



(பட்டோடி - ஷர்மிளா டாகூர், சோபர்ஸ் அஞ்சு மகேந்திரு ஜோடிகள் மன்னிப்பார்களாக)

கிரிக்கெட் காதல்

'அய்க்கண்'

முதல் 'இன்னிங்ஸ்'

இன்னும் முக்கால் மணிதான் இருந்தது. கடைசி நாள் ஆட்டம் தொடங்க. 'மாட்ச்' ஆரம்பிக்கக் கால்மணி முன்பே அவன் மைதானத்தில் இருக்க வேண்டும். அவனுக்காக, அவன் கோஷ்டி ஆட்டக்காரர்கள் காத்துக் கொண்டிருப்பார்களே !

அவசர அவசரமாக மோட்டார் சைக்கிளில் ஜெம்பிரஜன் சேதுராமன். ஆள் நடமாட்டம் அதிகமில்லாத தார் ரோட்டிலே 'ஸ்பை ஸ்மாஷர்' போல் பறந்து கொண்டிருந்தான்!

எதிரே சிறிது தூரத்தில், ஸ்கூட்டரில் ரீடா பரியா !

ரீடா பரியா வியட்நாமிலிருந்து, மேல் நாட்டிலிருந்து இங்கே எப்பொழுது வந்தாள்? அதுவும் ஸ்கூட்டரில்?

கூர்ந்து பார்த்ததும் அவனுக்குப் புரிந்தது. அவள் 'மிஸ் வோர்ல்டு' அல்ல—ஆனால் அவளையும் மிஞ்சக்கூடிய ஓர் அற்புத அழகி!

மெல்லிய 'ஷிபான்' புடவை, பட்டம் போல் விரிந்து விரிந்து காற்றாட, 'ரசிக்'கின் ஆட்சிக்கு அடங்காத பருவமும் இளமை வாளிப்பும், 35, 24, 35 அளவுகளுள்ள உடலமைப்பும், அழகு முகமும்.... 'என்னை விட அழகிகள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள்' என்று ரீடா சொன்னாளாமே, அது இவளைக் குறிப்பிட்டுத்தான் சொன்னதோ ? அவளையே வைத்த கண் வாங்காது பார்த்தவாறு வந்து கொண்டிருந்த சேதுராமன், இடதுபுறம் திரும்புவதையும் மறந்து நேராகப் போய்க் கொண்டிருந்தான் !

டமார்!

தன் மீது ஸ்கூட்டர் மோதியதும் கண்ணை மூடிக் கொண்ட அவன் எங்கோ தூக்கி எறியப்படுவதை உணர்ந்தான். மறுவினாடி—'மெத்'தென்ற மெத்தையில் படுத்திருப்பது போல் தெரிந்தது அவனுக்கு. 'டன்லப்பில்லோவில்கூட ரோடு போட்டிருப்பார்களா?' என்று வியப்புடன் கண்ணைத் திறந்தான்.

''டாம்.... இடியட்.... முட்டாள்!'' என்ற கூச்சல் தன் மேலிருந்து தெறித்து சிறுவனைக் கேட்டுத் திடுக்கிட்டு, அந்தப் பெண் மீது விழுந்திருந்த அவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தான்.

எதிரே — அவள் எழுந்து அலங்கோலமாகி விட்ட தன் உடைகளைச் சரி செய்து கொண்டிருந்தாள். சற்றுத் தூரத்தில் அவனுடைய வலுவான மோட்டார் சைக்கிள், மென்மையான ஸ்கூட்டரை அமுக்கி நசுக்கிக் கொண்டிருந்தது.

''கன்ட்ரி புரூட்ஸ்! பாதையைப் பார்த்து வரக்கூடாது? நான்சென்ஸ்.'' — லிப்ஸ்டிக் போட்டிருக்கிறதோ என்று சந்தேகப்படும்படி வெந்திருந்த அவளுடைய உதடுகள் துரத்தின.







''ஏ, இடியட்! பார்த்தால் படித்த பெண்மாதிரி தெரிகிறது. 'ராங் சைடு'லே வந்து மோதிவிட்டு என்னையே விரட்டுகிறாயே?'' என்று சொல்லுவதற்குப் புரண்ட நாக்கைக் கடித்துக் கொண்டான். 'சே, இந்த அழகுச் சிலையைப் பார்த்துத் திட்டினால் நல்லாயிருக்குமா? நாக்கே அழுகிப் போகாதா?'

''ஐ ஆம் எக்ஸ்ட்ரீம்லி சாரி! எக்ஸ்யூஸ்மீ! நான்தான் 'ராங் சைடி'லே வந்திட்டேன் போலிருக்கு'' என்று குறிப்பாக, அவள் வந்து திரும்பிய திசை வழியேபார்வையையோட்டினான்.

அவளும் அவன் பார்வையைத் தொடர்ந்தாள். அவள் தான் தவறான பாதையில் வந்து அவனோடு மோதியிருக்கிறாள் என்பது புரிந்தது. தன் நடுக்குத்தனத்துக்கு வருத்தப்பட்டுத் தலை குனிந்து கொண்டாள்.

'நாம் தவறு செய்திருந்தும் இவர் எவ்வளவு கண்ணியமாக நடந்து கொள்கிறார்?'

''அடடே! உங்கள் கையில் ரத்தம் வருதே!'' — உடனே தன் கர்சீப்பை எடுத்து அவளிடம் பாய்ந்து சென்றான் சேது.

''நோ......நோ......வேண்டாம்! நானே...!''

''பரவாயில்லை! நீங்களே கட்டிக் கொள்ளுங்கள்...'' என்று சொல்லி விட்டு, அவனே அவளுடைய கையில் கட்டுப் போட்டான்.

'ரியலி ஹி இஸ் எ நைஸ் ஜென்டில் மென்' என்று நினைத்தாள் அவள்.

''மெனி தாங்க்ஸ் ஸார்!'' அவள் 'தாங்க்ஸ்' சொல்லும் அழகை ரசித்தான் அவன்.

''என்ன சார்! டாஸ் ஆயிட்டுதா?'' இனிமையான காஷ்மீரில் பாகிஸ்தானியன் நுழைந்தது போல், அங்கே பிரசன்னமானார் ஒரு போலீஸ் காரர்.

'டாஸ்' முடிந்து, 'டாஷ்கண்ட்' அல்லவா ஏற்பட்டிருக்கிறது?

போலீஸைக் கண்ட அவளுடைய உடல் இலேசாக நடுங்குவதைக் கவனித்தான் சேது.

''ஒன்றுமில்லை, சார்! 'டர்னிங்'கிலே டயர் வழுக்கிவிட்டது. அவ்வளவுதான்!''

போலீஸ்காரர் போய் விட்டார். அவள் நிம்மதியாக மூச்சு விட்டாள். இந்த முறை, அவள் தன் கண்களாலேயே அவனுக்கு நன்றி சொன்னாள்.

சேது, தன் மோட்டார் சைக்கிளையும் அது தழுவிக் கொண்டிருந்த ஸ்கூட்டரையும் தூக்கி நிறுத்தினான். அவளுடைய ஸ்கூட்டர் இளம்பிள்ளை வாத நோயாளி போல் நிற்க முடியாமல் கீழே விழுந்தது.

''ஐயையோ! நேரமாகிறதே! நான் 'கிரிக்கெட் மாட்ச்'சுக்குப் போயாகணுமே! என் அப்பா அங்கே எனக்காகக் காத்துக்கிட்டிருப்பாரே?'' என்று பதறினாள் அவள்.

''நானும் கிரிக்கெட் மாட்சுக்குத்தான் போகிறேன். 'இப் யூ டோன்ட் மைண்ட்' என் சைக்கிளிலே உங்களுக்கு 'லிப்ட்' கொடுக்கிறேன். உங்க ஸ்கூட்டரை அதோ அந்தப் பெட்டிக் கடை பக்கத்தில் நிறுத்திவிடலாம்'' என்று யோசனை சொன்னான் சேது.

அவள் சில விநாடிகள் தயங்கினாள்; பிறகு யோசித்தாள்.

வேறு வழியில்லை. அவள் இன்று கட்டாயம் கிரிக்கெட் மாட்ச் பார்த்தாக வேண்டுமே!

'காட்ச்' - 'ஸ்லிப்'

இரண்டு நிமிஷங்கள் கழித்து, அவளையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டது சேதுராமனுடைய மோட்டார் சைக்கிள்.

பின்னால் அமர்ந்து 'சீட்'டைப் பிடித்துக் கொண்டாள் அவள். அவளுடைய மென்மையான அழகுக் கைகள் தன்னுடைய தோளைப் பிடிக்காதா என்று நினைத்து எதிர்பார்த்து, வேகத்தை அதிகப்படுத்தினான். ஆனாலும் அவளுடைய கை அவன் தோளைத் தொடவேயில்லை!

அடுத்து ஒரு திருப்பம் — அந்த 'ரோடு' ஒரே குண்டும் குழியும் மேடுமாக இருந்ததால் மோட்டார் சைக்கிள் குதித்துக் குதித்துக் குலுங்கி ஓடியது.

முன்பெல்லாம் அந்த ரோட்டில் போகும் போது திட்டிக் கொண்டே செல்லும் சேது, அன்று மட்டும் அதை வாழ்த்திக் கொண்டே சென்றான். அவள்தான் மோட்டார் சைக்கிள் குலுங்குவதில் விழுந்து விடாமலிருக்க, அவன் தோளை இறுகப் பிடித்திருந்தாளே!

கிரிக்கெட் மைதானம் நெருங்கிக் கொண்டிருந்தது. 'அடடா, இந்த ரோடு இன்னும் நீண்டு நீண்டு....போகக் கூடாதா?' என்று நினைத்தான்.

''எக்ஸ்யூஸ் மீ! 'இது டெஸ்ட் மாட்ச்' இல்லியே — சாதாரண மாட்ச்தானே? இதைப் பார்க்க ஏன் நீங்க இவ்வளவு ஆர்வம் காட்டுறீங்க?'' என்று பேச்சை ஆரம்பித்தான் சேது.

''இந்த 'லீக் மாட்சி'லே சிவராமன் என்று ஒருவர் பிரமாதமாக ஆடுகிறாராமே. பட்டோடி மாதிரி ஸ்டைலிஷ் பாட்ஸ்மனாமே!''

'எனக்கு எதிராக விளையாடும் கோஷ்டியிலுள்ள விளையாட்டுக்காரனையல்லவா இவள் புகழ்கிறாள்?' என்று நினைத்துச் சேதுராமன் முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

''பௌலிங்கூட நன்றாகச் செய்வாராம்— மொத்தத்தில் 'ஆல் ரவுண்டர்' என்று என் அப்பா ரொம்பப் பாராட்டுவார்...'' என்று மேலும் பேசிக்கொண்டே சென்றாள் அவள்.

புதுமுகத்தின் புகழைக் கேட்கும் பழைய நடிகை போல, சேதுராமனுடைய நெஞ்சம் எரிந்து கொண்டிருந்தது.

''அவனுடைய ஆட்டத்தைப் பார்ப்பதில் உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை?''

''அவர்தான்.... என்னுடைய... என்... ஒன்றுமில்லே. என் அப்பா அங்கே வந்து எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்.''— வெட்கத்தில் அவளுடைய தலை குனிந்ததையும் பேச்சு தடுமாறியதையும், பேச்சை மாற்றுவதையும் கவனித்தான் சேது.

'சரிதான்.... அந்தச் சிவராமனுக்கும் இவளுக்கும் திருமணம் நடக்கப் போகிறதுபோல் இருக்கிறது. இவளைக் கண்டதும் கொண்டேனே காதல், சே.... சரியான முட்டாள் தான் நான்!'

'பீல்டிங்'

மைதானத்தின் முன் வந்து நின்றது மோட்டார் சைக்கிள்.

''தாங்க்யூ வெரி மச்!'' என்று சொல்லி விட்டுக் குதித்துக் கொண்டே 'கேட்'டை நோக்கிச் சென்றாள் அவள். மோட்டார் சைக்கிளை ஓரமாக ஓரிடத்தில் நிறுத்தச் சென்றான் சேது.

சுற்றுமுற்றும் பார்த்தாள் அவள். அப்பாவைக் காணோம்!

'ஒரு வேளை என்னை இங்கே வரச் சொன்னதை மறந்து விட்டாரோ?' என்று நினைத்தாள் அவள்.

ஞாபக மறதியிலே, 'வால்ட் டிஸ்னி'யின் 'ஆப்ஸெண்ட்—மைண்டட் புரொபசர்' அவளுடைய அப்பாவிடம் பிச்சை வாங்க வேண்டும்!

'ஐயோ.... அப்பா! இந்நேரம் எந்த மைதானத்தின் வாசலில் நின்று கொண்டிருக்கிறாரோ பாவம், பாவம்.' — மனத்துக்குள் சிரித்தவாறு, 'கேட்' அருகே சென்று, மணிபர்ஸைத் திறந்து டிக்கெட்டை எடுத்தாள். தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு!

அந்த டிக்கெட்டுகள் சினிமா ரிஸர்வேஷன் டிக்கெட்டுகள்!

காலையில் அவளுடைய அப்பா, கிரிக்கெட் மாட்ச் டிக்கெட்டுக்குப் பதிலாக ஞாபகமறதியாக சினிமா டிக்கெட்டை அவள் பர்ஸில் வைத்து விட்டு, ஆபீஸ் போயிருக்கிறார்!

என்ன செய்வதென்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள் அவள். அப்பொழுது அங்கே வந்தான் சேது.

''என்ன, வெளியே நிற்கிறீங்க?... உங்க அப்பா வரலியா?''

அவனிடம் விஷயத்தை விளக்கினாள் அவள்.

''அதனால் என்ன? நான் உங்களை உள்ளே அழைத்துப் போகிறேன். சிறிது நேரத்தில் உங்க அப்பா வந்து விடலாம் அல்லவா? என்னுடன் வாருங்கள்!''

'டைமண்ட் கிளப் காப்டன்' சேதுராமனைத் தெரியுமாதலால், 'கேட் கீப்பர்'

சென்ற ஆண்டு வீட்டுக்கு ஓட்டுக்கூரை, இவ்வாண்டு தனக்கொரு சைக்கிள், அடுத்த ஆண்டு... பணம் நல்ல வழியில் பயன் படுகிறது!

வளமையைப் பெருக்குகிறான் ராமு. முற்போக்கான விவசாயி அவன். உயர்ந்த விதைகளை உபயோகிக்கிறான். விஞ்ஞான முறையில் பயிர்களை மாற்றுகிறான். நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்திக்கொள்கிறான். தவிர, ராலீஸ் தயாரிக்கும் சமநிலை உரக் கலவைகளால் நிலத்தைச் செழுமையாக்குவதுடன் டாடா பைஸன் தயாரிக்கும் பூச்சி மருந்துகள் மூலம் பயிர்களைப் பாதுகாக்கவும் செய்கிறான். இரண்டுமே சுலபமாகக் கிடைக்கின்றன. அதிகப்படியான, தரத்திலுயர்ந்த விளைச்சலுக்கு வழிசெய்கின்றன.

TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES

உரங்கள், பூச்சி மருந்துகள் மூலம் வளமை



SH81-RF-83 TAM

அவனுக்கு வணக்கம் தெரிவித்து இருவரையும் உள்ளே அனுமதித்தான்.

அவளை நாற்காலி ஒன்றில் உட்கார வைத்துவிட்டு, ஆட்டக்காரர்களுக்கான அறைக்குச் சென்றான் சேது. அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

'பௌலிங்'

ஆட்டம் தொடங்கியது.

சேதுராமனின் எதிர்க்கட்சி, 'பாட்டிங்'; இரண்டாவது இன்னிங்ஸ்.

இரண்டு விக்கெட்டுகள் வீழ்ந்ததும், சிவராமன் மைதானத்துக்குள் நுழைந்தான் 'பாட்' செய்ய.

அவனைக் கண்டதும் சேதுவுக்கு 'அவள்' நினைவு வந்தது. 'தன்னுடைய காதல் கதையின் வில்லனல்லவா அவன்?'

சிவராமனுக்கு எதிராக 'பௌல்' செய்யச் சேதுவே முன் வந்தான். எப்போதும் 'மீடியம் பேஸ் பௌல'ரான சேது, அன்று புயல்வேகத்தில் 'ஸ்பின் பௌல்' செய்வதைக் கண்டு, அவனுடைய கோஷ்டி ஆட்டக்காரர்களே மூக்கில் விரல் வைத்து விட்டார்கள்! அவனுடைய ஆத்திரம் அவர்களுக்குத் தெரியுமா? இரண்டு 'மெய்டன் ஓவர்'களுக்குப் பிறகு, அவன் வீசிய பந்து சிவராமனின் 'விக்கெட்'டைத் தூக்கி எறிந்தது.

சிவராமன் 'டக்'. ஒரு ரன்கூட இல்லை!

மைதானத்தில் ஒரே கரகோஷம். ஆரவாரம். கையை உயர்த்தியவாறு கரகோஷத்தை ஏற்றுக் கொள்ளும் அரசியல் தலைவன் போல, சுற்றிலும் பார்த்த சேதுவினுடைய கண்கள், நாற்காலியில் உட்கார்ந்திருந்த 'அவளி'டம் சென்று நிலைத்தன.

என்ன ஆச்சரியம்! சிவராமன் 'டக் அவுட்'டானதைப் பற்றிக் கவலையே இல்லாமல், கைதட்டுகிறாளே! பக்கத்தில் இருக்கும் பெரியவரிடம் — அவர்தான் அவளுடைய அப்பா போல் இருக்கிறது — ஏதோ சொல்லிச் சிரிக்கிறாளே!

அடுத்து அடுத்து — யானை புகுந்த தோட்டத்தில் கரும்புகளைப் போல், மடமடவென்று விக்கெட்டுகள் சாய்ந்து விட்டன. சேதுராமனே எட்டு விக்கெட்டுகளையும் எடுத்து விட்டான்!

'பாட்டிங்'

லஞ்ச்' இடைவேளைக்குப் பிறகு, சேதுராமனுடைய கோஷ்டி தன் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கியது. அவன் கட்சி வெற்றி பெறுவதற்கு இன்னும் நாற்பத்தி மூன்று 'ரன்'களே தேவை.

முதல் மூன்று விக்கெட்டுகள், முப்பத்திரண்டு ரன்களிலேயே பறிபோய் விட்டன. அடுத்துச் சேது 'பாட்' செய்ய வந்தான். அன்றைய கதாநாயகனாக அவனை எல்லாரும் கரகோஷத்துடன் வரவேற்றனர்.

அவன் கண்கள் அவள் இருந்த இடத்தை நோக்கி ஓடின. அவளும் கைதட்டி வரவேற்றுக் கொண்டிருந்தாள்.

எதிர்க்கட்சி, 'சிவராமன் அண்ட் கோ' வீசிய பந்துகளை மடக்கி, அடித்து விளாசினான் சேது. அவன் அடித்த அடியின் வலி பொறுக்க முடியாமல், பந்து பயந்து மைதானத்தை விட்டே ஓடிக் கொண்டேயிருந்தது! சிக்ஸர்களாகவும் பவுண்டரிகளாகவும் அடித்து ஒன்றரை மணி நேரத்தில் செஞ்சுரியைத் தாண்டி விட்டான்.

அவனுடைய கட்சி அமோக வெற்றி பெற்று விட்டது.

கூட்டத்தினரின் கரகோஷம், ஆரவாரம், அபிமானிகளின் பாராட்டு, கைகுலுக்கல் எல்லாம் முடிந்து, ஆட்டக்காரர்கள் அறைக்குத் திரும்பி வந்தான் காப்டன் சேது.

'மாட்ச் வின்னர்'

உள்ளே அவளும் அவள் தந்தையும் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

"கங்கிராஜுலேஷன்ஸ் டியர்! ஐ ஆம் வெரி ஹாப்பி நௌ....." என்று மகிழ்ச்சியால் குதித்தாள் அவள்.

"கங்கிராட்ஸ்....சேது!" என்று அவனுடைய கையைப் பிடித்துப் பலமாகக் குலுக்கினார் அவர்.

"நீங்கள் யாரென்று...." — மெதுவாக முனகினான் சேது.

"நான்தான் உன் அப்பா ராமநாதனுடைய பள்ளிச் சிநேகிதன் அப்பாத்துரை. இப்போ நிர்மலா ஆட்டோமொபைல்ஸ் முதலாளியாயிருக்கிறேன் — இவள் என் ஒரே மகள் நிர்மலா. இவளுக்கும் உனக்கும் கல்யாணம் பண்ணிக்கலாம்னு ராமநாதன் எழுதியிருந்தான். உன்னைப் பார்க்கிறதுக்குத்தான் நிர்மலாவை இந்த 'மாட்ச'க்கு வரச் சொல்லியிருந்தேன். ஆனால் அதை மறந்துட்டு வீட்டுக்குப் போயிட்டேன். 'ஐ ஆம் வெரி ஆப்ஸெண்ட் மைண்டட்'. பிறகு இங்கே வந்ததும், நிர்மலா உன்னைப் பற்றி எல்லாம் விவரமாகச் சொன்னாள்...." என்று பேசிக் கொண்டே போனார் அவர்.

"ஆனால் நிர்மலா, சிவராமனையல்லவா?" என்று இழுத்தான் சேது.

"அதுதான் சொன்னேனே, எனக்கு ஞாபக மறதி அதிகம்னு. சேதுராமன் என்கிற பெயரை மறந்திட்டு, சிவராமன்னு நிர்மலாகிட்டே சொல்லிவிட்டேன் போலிருக்கு!.... அதிலே இன்னும் ஒரு வேடிக்கை பாரு! சிவராமன்னு உன் எதிர்க்கட்சியிலே ஒருத்தன் இருக்கிறான்!" என்று சிரித்தார் அப்பாத்துரை. நிர்மலாவும் சேர்ந்து கொண்டாள் அந்தச் சிரிப்பிலே.

"சரி, சீக்கிரம் புறப்படு, சேது! இன்னிக்குச் சாப்பாடு நம்ம வீட்டிலேதான்" என்று கிளம்பினார் அவர்.

வாசல் அருகே போகும்போது, "சினிமா ரிசர்வேஷன் டிக்கெட் இரண்டையும் என்ன செய்வது?" என்று அவள் காதில் மட்டும் விழும்படியாகக் கேட்டான் சேது.

நிர்மலா, பேசாமல், இரண்டு கைகளையும் கழுத்தைச் சுற்றிக் காட்டி, வலது கையை மடித்து வளைத்துக் காட்டினாள். 'தாலி கட்டிய பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்பது அந்த அபிநயத்தின் அர்த்தம்

தேசியப் படை முகாம்களில் - நடப்பதென்ன?

மே 22ந் தேதி 'இந்து' நாளிதழில் கோடைக்கானல் தேசிய மாணவர் படை முகாமைப் பற்றிய செய்தியில், அம்முகாமின் நடவடிக்கைகள் மிகச் சிறந்த முறையில் நிறைவேறின என விவரிக்கப்பட்டிருந்தது.

அதே நாளிதழில் அடுத்த நாள் 23–5–67 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் திரு அஸ்வினி குமார் என்பவர், சென்ற ஆண்டில் வட இந்தியாவில் நடந்ததோர் என். ஸி. ஸி. முகாமில் தாம் கலந்து கொண்டதாகவும் அதில் மாணவர்கள் பயிற்சி ஒன்றையும் பெறாமல் பயனற்ற பேச்சுக்களிலேயே காலம் கழித்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

'முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவிக்கும் இதில் உண்மை எது? மாணவர் முகாம்களில் உண்மையில் நடப்பதென்ன ?' என ஆராயப் புகாமல், சமீபத்தில் (மே திங்கள் 7ம் நாளிலிருந்து 16 வரை) உதகமண்டலத்துக்கருகில் நடந்ததோர் 'என். ஸி. ஸி. வருடாந்திரப் பயிற்சி முகாமில்' கலந்து கொண்ட நான் விருப்பு வெறுப்பின்றி நடந்ததை நடந்தபடியே உங்கள் முன் வைக்க விழைகிறேன்.

சென்னை 3, 14 – பெட்டாலியனைச் சேர்ந்த மாணவர்களாகிய நாங்கள் 6ம் தேதி காலை 10-47க்கு சென்னை இராயபுரத்திலிருந்து தனி ரயிலில் புறப்பட்டு 7ம் தேதி காலை 11-20க்கு முகாமை அடைந்தோம். அன்று முழுவதும் ஓய்வு. மறு நாள் காலை ஒன்பது மணி அளவில் முகாமின் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தினார். அதன்பின் சுமார் மூன்று மணி நேரம் ஒரு விரிவுரை வகுப்பு நடந்தது. அதோடு 'கேம்ப்'பின் முதலிரண்டு நாட்கள் கழிந்து விட்டன.

அடுத்த இரண்டு நாட்கள் துப்பாக்கி சுடும் பயிற்சி. நான்கு மணி நேரம் பயிற்சி நடந்ததாகச் சொல்லப்பட்டது. ஆனால் உண்மையில் நாங்கள் பயிற்சி பெற்ற நேரம் முப்பது நிமிடங்கள்கூட இருக்காது. பயிற்சி மைதானத்திலேயே எஞ்சிய மூன்று மணி முப்பது நிமிடங்களும் பயிற்சி பெற்றுக் களைத்த எங்களுக்கு ஓய்வாம்! அதாவது 'பயிற்சி மைதானத்தில்' அமர்ந்திருக்கும் நேரம் முழுவதும் பயிற்சி பெற்றதாக அர்த்தமாம்! எங்கள் முகாமில் நாற்பது நிமிடங்கள் கொண்ட ஏழு வகுப்புகள் நாள்தோறும் நடைபெறும் எனப் பயிற்சித் திட்டம் தெரிவித்தது. ஆனால் ஒரு நாள்கூட அந்தத் திட்டம் பின்பற்றப்பட்டதாக எனக்கு நினைவில்லை!

உடற் பயிற்சி, ஆயுதப் பயிற்சி, துப்பாக்கிப் பயிற்சி, 'எல். எம். ஜி.' பயிற்சி, போர்க்களப் பயிற்சி, 'மேப்' பயிற்சி முதலியன எங்கள் முகாமின் திட்டத்தில் அடங்கியிருந்தன. ஆனால் நடைமுறையில் பின்பற்றப்பட்டதோ....

'உடற் பயிற்சி' வகுப்பு பத்து நாட்கள் முகாமில் இரண்டே நாட்கள்தான் நடைபெற்றன : அதுவும் பதினைந்தே நிமிடங்கள்.

துப்பாக்கிப் பயிற்சி சிறந்த முறையில் அளிக்கப்பட்டது. சும்மா சொல்லக் கூடாது. ஆனால் 'காலேஜ்' பரேடுகளில் அளிக்கப்பட்ட பயிற்சியைவிடச் சிறந்தது எனக் கூறிவிட இயலாது.

'எல். எம். ஜி.' – அதாவது எடை குறைந்த இயந்திரத் துப்பாக்கி – பயிற்சி அளிக்கப்படவில்லை. பயிற்சியாளரே அதன் பாகங்களைச் சுட்டிப் பெயர் கூறியதோடு சரி.

போர்க்களப் பயிற்சி, மேப் பயிற்சி முதலியன இடம் பெறவேயில்லை.

எங்கள் முகாமின் ஐந்தாவது நாள்– 'அவுட்டோர் பயிற்சிகள்' எனப்படும் 'ரூட் மார்ச்'. அதாவது திட்டத்தின்படி 'முகாமுக்கு வெளியே சென்று செய்யப்படும் பயிற்சிகள்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. சென்ற இடத்தில் யாதொரு பயிற்சியும் இன்மையால் இது 'ரூட் மார்ச்' எனப்பட்டது. ஆனால் 'ரூட் மார்ச்' எனப்படுவது மிடுக்கோடு சொல்லப்பட்ட முறையில் 'ஸ்டெப்' தவறாமல் செல்வது. கடைசியில் நாங்கள் சென்றதோ 'பிக்னிக்'. ஆம்! எங்கள் விருப்பமான முறையில் நடந்து சென்றோம். சென்ற இடத்தில் வயிறார உண்டோம். பின் 'இசை' முதலிய கேளிக்கைகள் வாயிலாகக் காலத்தை இனிதே கழித்தோம். மாலையில் முகாம் திரும்பினோம்.

மாணவர்கள் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, ஆறாம் நாள் ஒரு பிரிவும், ஏழாம் நாள் ஒரு பிரிவுமாக 'ரேஞ்சு'க்குச் சென்றனர். ஒரு மாணவன் பத்து ரவுண்டுகள் சுட எடுத்துக் கொண்ட அதிகபட்ச நேரம் ஐந்தே நிமிடங்கள். 'ரேஞ்சு' நடைபெற்ற இடம் சென்று வர ஆகிய நேரம் ஒரு மணி நாற்பது நிமிடங்கள்தான். எஞ்சிய நேரம் முழுவதும் ஓய்வே. மேலும் 'ரேஞ்சு'க்குச் செல்லாத பிரிவு முழு நாள் ஓய்வினை மேற்கொண்டது.

எட்டாம் நாள் உதகமண்டலத்தைச் சுற்றிப் பார்க்க விடுமுறை அளிக்கப்பட்டது.

ஒன்பதாம் நாள் பகல் முழுவதும் ஓய்வே. மாலையில் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பத்தாம் நாள் முகாமை விட்டுக் கிளம்பி விட்டோம்.

ஆக மொத்தத்தில் துப்பாக்கி சுடும் பயிற்சி ஒன்றைத் தவிர வேறு ஒன்றையும் இப்பத்து நாள் முகாமில் புதிதாக நான் அறிந்து கொள்ளவில்லை. இந்த 'ரைபிள்' பயிற்சியும் கல்லூரி பரேடில் பெற்றதே.

பயிற்சி எதையும் பெறாவிட்டாலும், முகாம் வாழ்க்கையின் அநுபவத்தையாவது பெற முடிந்ததல்லவா என்றால் 'அதுவுமில்லை' என்பதே என் பதில். கல்லூரி விடுதி வாழ்க்கை போலவேதான் எங்கள் முகாமின் வாழ்க்கையும் இருந்தது.

என்னைப் பொறுத்த வரை, நான் இம்முகாமில் கலந்து கொண்டதால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட செலவு வீண் என்றே உறுதியாகக் கூறுவேன். மக்கள் பணத்தின் ஒரு பகுதி என்னுடைய பயனற்ற முறையில் செலவழிக்கப்பட்டதை எண்ணி வருந்துகிறேன்.

சென்னை
26–5–67 "என். ஆர். கே."

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor : T. Sadasivam.


எல்லா
வேலையும்
என்
தலையிலே!
எல்லா வேலையும் நானே செய்ய
வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்...
எனக்கோ ஒரே சோர்வு. குழந்தைகள்,
சமையல், வீட்டுவேலை
எல்லாவற்றையும் எப்படி
நானே சமாளிக்க முடியும்...
என் கணவர் ஒரு நாள்
ஹார்லிக்ஸ் வாங்கி
வந்தார். ஹார்லிக்ஸ்
பருகினால் இழந்த
சக்தியை மீண்டும்
பெறலாம் என்றார்!
Horlicks
இப்பொழுது
என்னைப்
பாருங்கள்!
திட
ஆரோக்கியத்
துடன் தெம்பும்
சுறுசுறுப்புமாய்
இருக்கிறேன்.
எல்லாம் ஹார்லிக்ஸ்
செய்த நன்மை!
Horlicks
போஷாக்குக் குறைவினால்
ஏற்படும் சோர்வும்
தள்ளாமையும் நீங்க
ஹார்லிக்ஸ் பருகும்படி
டாக்டர்கள் சிபாரிசு
செய்கிறார்கள். ஆடைச்
சத்து மிகுந்த பால்,
கோதுமை மாவு,
மால்ட்டட் பார்லி இவற்றின்
போஷாக்குச் சத்துக்களை
ஒருங்கே கொண்ட
ஹார்லிக்ஸ் இழந்த
சக்தியை மீண்டும் பெற
உதவுகிறது என்பது
டாக்டர்களுக்குத்
தெரியும்.
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி
அளிக்கிறது

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி



கருவிகளை அவனுக்குக் கொடுங்கள்

அவன் ஓர் இந்திய விவசாயி. கடின உழ பும், தொழிலில் ஈடுபாடும் அவனது இய கள். நாட்டில் உணவு உற்பத்தியை பெருக்கத் தனது முழு ஒத்துழைப்பை நல்க அவன் தயாராயிருக்கிறான்.

ஆயினும் கடின உழைப்பையும், தொழில் பாட்டையும் கொண்டே அவன் உற்ப யைப் பெருக்குவதென்பது சாத்தியமான நிச்சயமாக இவை மாத்திரமே அச்சாத குப் போதுமானவை அல்ல.

விளைச்சலைப் பெருக்க அவனுக்குத் உ செய்யக்கூடியவை சிறந்த கருவிகளே. உ கொழிக்கும் பயிர்களை உருவாக்க உத டிராக்டர்களும், நவீன விவசாயக் க களுமே அவனுக்குப் பெரிதும் தேவை படுபவை.



TAFE

டிராக்டர்ஸ் அண்டு பார்ம் எக்விப்மெண்ட் லிமிடெட், சென்

இந்தியாவில் மாஸி-பர்கூஸன் டிராக்டர்கள், விவசாயக் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி
விற்பனையும் செய்பவர்

T-18-TM